விலை ரூபா 2-00

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 ஆனி 31 ஷவ்வால் 15 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (15—7—84) இதழ் 151

## இளைஞரின் சடலம்!

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத இளைஞரின் சடலம் ஒன்று யழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் பொலிஸ் அதிரடிப்பிரிவினரால் கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ளது.

இளைஞரின் உடலில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் காணப்பட்டபோதிலும் எப்படி இறந்தார்

(16-ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண விண்ணப்பங்கள் பரிசீலனை முடிந்து விட்டன!

## 'பாஸ்போட்' தயாரிப்புக்கு சகலதும் அனுப்பப்பட்டன

(இ. கந்தசாமி)

கொழும்பு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டு பாஸ்போட் எழுதும் பகுதிக்கு அனுப்பப்பட்டுவிட்டதாகத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், காலி, கண்டி ஆகிய மாவட்டங்களில் இயங்கும் பாஸ்போட் அலுவலகத்திலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதற்கென கொழும்பு அலுவலகத்தில் இருக்கும் தனியான பிரிவில் யாழ். அலுவலக விண்ணப்பங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டு விட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த மூன்று மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் கிடைக்கும்விண்ணப்பங்களை பரிசீலனை செய்யவென கொழும்பு குடியகல்வு குடிவரவுத் திணைக்களத்தில் தனியான பிரிவு ஒன்று இயங்கிவருகிறது. ஒவ்வொரு அலுவலகத்திலிருந்தும்கிடைக்கும் விண்ணப்பங்களில் ஒவ்வொருநாளும் தலா ஐம்பது விண்ணப்பங்கள் இப்பிரிவில் பரிசீலிக்கப்பட்டு பாஸ்போட்

(16ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் தொழிற்சாலைக்கு குண்டு வீச்சு!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் உள்ள பாதுகாவலர் விடுதிக்கு நேற்று இரவு எறிகுண்டு வீசப்பட்டதையடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

எறிகுண்டு வீசப்பட்ட சமயம் காவலர் விடுதியில் இருவர் மாத்திரமே இருந்து வந்துள்ளனர். என்ருலும் எவரும் காயமடையவில்லை. இரவு

(16-ம்பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் தீவிர சோதனை!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று மாலை இராணுவத்தினர் தீவிர சோதனை நடத்தினர்.

இதேவேளை பொலிஸ் அதிரடிப் பிரிவினரும் மாவட்டம் முழுவதிலும் தீவிர ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இராணுவத்தினர் நேற்று மாலை நகரில் தீவிர சோதனை நடத்தியதுடன் விசாரணைக்காகச் பலரை அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

## பத்துநாட்களுக்கு ஒரு தடவை கொழும்புக்கு அனுப்பப்படும்

### தினமும் 50 பாஸ்போட் விண்ணப்பங்கள் கிடைக்கின்றன

(எஸ். எஸ். கே.)

பத்து நாட்களுக்கு ஒரு தடவையே யாழ்ப்பாண அலுவலகத்திலிருந்து பாஸ்போட்விண்ணப்பங்கள் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றன என்று யாழ். பாஸ்போட் அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் கூறினுர்.

தினமும் முப்பது முதல் ஐம்பது வரையிலான விண்ணப்பங்கள்யாழ். அலுவலகத்துக்கு கிடைத்து வருவதாகவும் அந்த உத்தியோகத்தர் கூறினுர்.

தினமும் கிடைக்கும் விண்ணப்பங்கள் பத்து நாட்களுக்கு ஒருதடவை பார்சல்களாக தபால் மூலம் கொழும்புக்கு அனுப்பப்படுவதாக தெரிவித்த அவர் தற்போது இங்குள்ள விண்ணப்பங்கள் நாளை திங்கட்கிழமை அனுப்பப்பட இருப்பதாகவும் கூறினுர்.

## ஆரவாரமற்ற பட்டமளிப்பு விழா

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழா நேற்றுப் பிற்பகல் நடைபெற்றபொழுது பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்த 531 பட்டதாரிகளுக்கு இரு பிரிவுகளாகப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

பிற்பகல் 2-30க்கு ஒருபிரிவு

(16ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்திலிருந்து தூர இடங்களுக்கு

## தொலைத் தொடர்பு நேற்று முதல் துண்டிப்பு!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கும் தூர இடங்களுக்குமான தொலைத் தொடர்பு நேற்று முற்ருகத் துண்டிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னுர்வவனியா, கிளிநொச்சி மாவட்டங்களுடன் மட்டுமே நேற்று தொலைபேசியில் தொடர்புகொள்ளக்கூடியதாயிருந்தது.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையேயான தொலைத் தொடர்பு நேற்று முழுவதும் துண்டிக்கப்பட்டிருந்தது.

யக்கலையில் உள்ள பிரதான தொலைத்தொடர்பு இணைப்புக் கருவியில்ஏற்பட்டுள்ள 'சிக்கல்' காரணமாகவே இத்தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதாக தொலைத்தொடர்பு திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

## பட்டம் பெற்ற எழுத்தாளர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்புவிழாவில் பிரபல எழுத்தாளர்கள் இருவரும் பட்டம் பெற்றனர்.

திரு. க. குணராசா [செங்கை ஆழியான்] முதுகலைமாணி பட்டமும், திரு. சி. மௌனகுரு கலாநிதிப் பட்டமும் பெற்றனர்.

## திருமலை, பட்டிருப்பில் விரைவில் இடைத்தேர்தல்!

[கொழும்பு]

திருகோணமலை, பட்டிருப்பு, மின்னேரியா, குண்டசாலை ஆகிய தொகுதிகளுக்கு விரைவில் இடைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

கிழக்கு மகாண மக்கள் நாடு பிளவுபடுவதை எதிர்க்கிருர்கள் என்பதை நிரூபிக்கும் வகையிலேயே பட்டிருப்பு, திருமலைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தப்படவிருப்பதாக ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கான சர்வகட்சி மாநாடு நடைபெறுவதால் வடபகுதியில் இடைத் தேர்தல்களை நடத்தவேண்டாமென்று தமிழர் விடுதலைக் கூட்டணி அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் ஜனுதிபதி தெரிவித்தார்.

சிலாபத்தில் புதிய நகர மண்டபத்தைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே ஜனுதிபதி இதனைத் தெரிவித்தார்.

# அசி விளம்பரம்

## விற்பனைக்கு

C 12Model 1 Sri B S A மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு; த. தர்மலிங்கம் மஞ்சத்தடி, இணுவில் 879

'SONY' கலர் (20'') T. V Three System(Pal/Secam/Ntsc) விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. K. இரத்தினசபாபதிக் குருக்கள், ''குமாரதிலகம்'' (மாவை ஆலயக் கோபுரத் திற்கு முன்னுல்), K. K. S வீதி, மாவிட்டபுரம். 881

6 ஸ்ரீ டட்சன் சனி 1200 C. C. கலனுக்கு 45 மைல் ஓடக்கூடியது உடன் விற்பனைக் குண்டு. அம்மன் ஹட்வெயஸ் 23/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம். 888

நாயன்மார்கட் செம்மணி வீதியில் 3 பரப்பு காணி உடன் விற்பனைக்கு. தொடர்பு கொள்ளவும்: வியாகரெத்தினம், விவாக பதிவாளர், மண்டைதீவு. 821

முல்லைத்தீவு அளம்பிலில் வீதிமுகப்புடனும் கடற்கரை ஓரத்துடனும் உள்ள தென்னம் தோட்டம் 40 ஏக்கர் உடன் விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: விளம்பர இலக்கம் 825, C/o ஈழநாடு, யாழ்ப் பாணம். 825

யாழ் மாநகரத்தில் நாவலர் வீதி, கனகரத்தினம் வீதிச் சந்தியில் கண்டி ரோட், மாம் பழம் சந்திக்கருகில் மூன்று பரப்புக் காணியில் பெரிய வீடு வெறுமையான நிலையில் மின்சாரம், கிணறு, வசதி களுடன் உடன் விற்பதற் குண்டு முன் பகுதியை மருத்துவ/வர்த்தக நிலையமாக வும் உபயோகிக்கலாம். தொடர்பு: மாணிக்கவாசகர், 857, நாவலர் வீதி, யாழ்ப் பாணம். 889

நல்லநிலையிலுள்ள HONDA பென்டிசுப்பர் 10 Sri தொடரிலக்க மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தோட்டத் துரையின் பாவிப்பில் உள்ளது. விலை 7500/- மட்டில். தொடர்பு: S. செல்வராஜா, அகதிமுகாம், கைதடி. 899

பழைய தகரக் கொட்டகையும் 2'' வில்லியஸ், ஹூல்சிலி, நீர் இறைக்கும் மெசினும் சிறிய அச்சகமும் விற்பனைக்குண்டு. தம்பிப்பிள்ளை மரக்காலை இணுவில் ஆஸ்பத் திரி முன்பாக. 894

## விற்பனைக்கு

வீட்டுப்பாவனைக்குரிய இரும்புப் பெட்டியுடன் இணைந்த பெரிய கபினற் விற்பனைக்கு உண்டு. 220. கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 897

வேம்படி வீதியில் மூன்றும் குறுக்குத் தெருவுக்கு அண்மையில் வீட்டுடன் கூடிய மூன்று பரப்பு காணி நான்கு படுக்கை அறைகள், சமையலறை, கராஜ், தோட்டம் மற்றும் சகல நவீன வசதிகளும் உண்டு. காலியான நிலையில் நியாயமான விலைக்கு கொடுக் கப்படும். தொடர்பு: 18, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 895

சகல வித வீட்டுத்தள பாடங்களும் விற்பனைக்கு உண்டு. விலாசம்: சி. நிர்மல நாதன், 246, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 896

(1) நல்ல நிலையிலுள்ள EN தொடரிலக்க மொரிஸ் மைனர் கார் (2) புதிய நாஷனல் கார் ரேடியோ, ரேப், ஸ்பீக்கர்களுடன் (3) ஒருசெற் புதிய ஸ்ரார் றிம் பிளேஸ்— உடன் விற்பனைக்குண்டு தொடர்பு; ஆனந்தா றைக் கோடிங் பார், தாவடிச்சந்தி. 874

33 ஸ்ரீ கொமர் ஐஸ்கிறீம் வான் விற்பனைக்குண்டு, ஆறுகால் மடம் முன்பாக ஆனைக் கோட்டை. 844

North Town நான்கு நாள் வெள்ளை குஞ்சுகள் ரூ. 6-15 வெள்ளைச் சேவல்குஞ்சுகள் ரூ. 1-65, R. I. R. நாலு நாள் குஞ்சுகள் ரூ. 6-85, குறுேஸ் புறேயிலேஸ் ரூ. 4-50. ராதா கிருஷ்ணஸ், 392, நாவலர் வீதி, கயிலாசபிள்ளையார் கோவிலடி. 860

யாழ்ப்பாணம், கண்டி பிரதான வீதியில் 19-ம் மைலுக்கு அருகாமையில் நுணுவில் மேற்கில் மின்தறி நிலையத்திற்குச் சமீபமாக தொழிற்சாலை / வீடு கட்டுவதற்கேற்ற காணி எட்டு பரப்பளவில் விற்பனைக்குண்டு. ச. பொன்னையா, ஆசிரியர், டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி 877

தாவடியில் 12 பரப்புக் காணி சகல வசதிகளுடனும் (தொழிற்சாலை அமைக்கச் சிறந்தது) மாங்குளத்தில் மாக்கட்டிற்கு முன்னுல் இரு கடைகள் சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு : மு. பாணிக்கவாசகர், இல. 1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 866

## விற்பனைக்கு

பளையில் 40 ஏக்கர் தென்னம்காணி முழுதும் துப்பரவு பண்ணி சீராக்கப்பட்டு 15 ஏக்கர் ஏற்கனவே தென்னை வைக் கப்பட்டுள்ளது, தொடர்பு கொள்ளவும். கே. விஜய குமார், 47, சீனிவாசகம் வீதி, கொட்டடி. 823

நல்ல நிலையிலுள்ள 9 Sri Volks Wagon கார் உடன் விற்பனைக்குண்டு. 66, (புதிய இல. 262) பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 869

Bairaha Farm ஒரு நாள் Hisex பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் 23-7-84 அன்று பெற்றுக்கொள்ளலாம். உடன் தொடர்புகொள்ளவும். S. புவனேந்திரன், ''சிங்கம் வளவு'' கோட் ரோட், மல்லாகம். 860

நல்ல நிலையிலுள்ள Honda 250 N, 5500 கி. மீற்றர் விற்பனைக்குண்டு. தொடர்பு; விளம்பர இல. 824, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 824

மாநகர சபை எல்லைக்குள் புங்கங்குளம் ரோட்டில், புங்கங்குளம் ஸ்ரேஷனுக்கு அண்மையில் 2 பரப் க் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு R. S. றவிநாதன், 25, சப்பேல் வீதி, யாழ்ப்பாணம். 840

அம்மி, ஆட்டுக்கல், கல்உரல் திருகை, கோவில் தள வரிசைகள் அனைத்தும் கருங்கல்லில் கைதேர்ந்த கலைஞரால் கடையப்பட்டது. தயாரித்து விநியோகிப்பவர்கள், சூர்யா ஸ்டோர்ஸ், வவுனியா. சுண்ணுகத்தில் கிடைக்குமிடம்; ஈஸ்வரி இரும்புக்கடை, கே.கே எஸ் வீதி சுண்ணுகம். 706

## வகுப்புகள்

இலண்டன் I. A. B. Part I, தேகாப்பியாசத் தகுதி சான்றிதழுக்கான பயிற்சி (Physical Education)யும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்ப முடிவுதிகதி 31-07-1984 விபரத்துக்கு: அதிபர் உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 857

## கல்வி

G. C. E (O. L.) கணிதம் 15 வருட அநுபவம்பெற்ற ஆசிரியரினுல் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்காக குறைந்தகாலத்தில் வீடுகளிற் கற்பிக்கப்படும். ஆறுமுக நாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி. 767

PHOTO STAT
பிரதிகளுக்கு
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## பாலர்களே, நாளை ஆடிப்பிறப்பு

ஆடிப் பிறப்பு நாளை பாலர்களே! - நாங்கள்
ஆடி அகம் மகிழ்வோம் பாலர்களே
கூடிக் குதித்து விளை யாடிடுவோம் - நாங்கள்
கும்மாளம் போட்டுக் குதூகலிப்போம்.

ஆடிக் கொழுக் கட்டை தின்றுவப்போம் - நாங்கள்
ஆடியும் பாடியும் நின்றுவப்போம்.
கூடிப் பனங் கட்டிக் கூழ்குடிப்போம் - நாங்கள்
கூத்தாடி நாடக மேநடிப்போம்.

நண்பர்களின் வீடுகளை நாடிச் செல்வோம்- நாங்கள்
நன்ருகக் கொழுக் கட்டை அங்குமுண்போம்
நண்பரையும் எங்கள் இல்லம் கூட்டிச்செல்வோம்
-நாங்கள்
நாட்டமுடன் கொழுக்கட்டை உண்ணச்செய்வோம்

கவியரசு
முருகசூரியன்

## கல்வி

German Language. ஜேர்மனி செல்ல விரும்புகின்றீர்களா? மொழி தெரியாது கஷ்டப்படாதிருக்க 16-7-84முதல் ஜேர்மன் கலாச்சார நிலையத்துடன் இணைந்து நடாத்தப்படும் வகுப்புகளில் பங்குபற்றி முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்துங்கள். வகுப்புகள்: காலை 6-00—8-00, மாலை 5-00—7-00 மணிவரை விபரங்களுக்கு; S. B. S, ''RUDI COT'', 33, Kandy Road, Jaffna. 867

M. B. B. S. (MEDICAL COLLEGE) பட்டப்படிப்புகளுக்கான முதல்வருட பயிற்சிகள் திறைமையுள்ள டாக்டர்களாலும் விரிவுரையாளர்களாலும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்பதாரிகள் A/L (Bio) உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும், விபரத்துக்கு அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். விண்ணப்ப முடிவு திகதி: 31-8-84 (847)

## பிழை திருத்தம்

12-7-84 திகதிய விளம்பரத்தில் சீமாட்டிபாம்ஸ்இல்கோழியினம் Hy-line [கைலைன்] [Hisex கைசெக்ஸ்] என்பதாகும். அன்றைய தவறிற்கு மன்னிக்கவும். 829

ஆசிரிய தேர்வுப்
பரீட்சைக்குரிய நூல்கள்
1. பொதுஉளச்சார்பு
விலை: 25/-
2. பொது அறிவு
விலை: 20/-
ஆக்கியோன்:
க. குணராசா M. A.
விற்பனையாளர்:
ஸ்ரீலங்கா
புத்தகசாலை
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
893

## தேவை

யாழ்ப்பாணம் அல்லது கிளிநொச்சியில் சுத்தமான களிமண் எடுக்கக்கூடிய காணி உடனடியாக குத்தகைக்குத் தேவை. நேரில் Sample உடன் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். திருமதி நவரத்தினம், குளப்பிட்டிச் சந்தி, ஆனைக் கோட்டை ரோட், கொக்குவில் மேற்கு. 868

உயர் இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 33 வயது நிரம்பிய பெண்ணுக்கு பெற்ருேர் மணமகன் தேடுகிருர்கள். பெண் யாழ்ப்பாணத்தில் அரசாங்க தொழில் புரிபவர். வணிக சிறப்பு பட்டதாரி படிப்பு கடைசி வருடப் படிப்பை மேற்கொண்டு இருப்பவர். சீதனமாக 1,30,000/-வும் வீடு வளவும், நகையும் கொடுக்கப்படும். சாதகக் குறிப்பு. விபரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும். Qualified Person is Preferable. விளம்பர இலக்கம்: 884, மே/பா ஈழநாடு, யாழ்ப் பாணம். (884)

## சேவை

ஆங்கிலம் கற்க சிறந்த இடம் — ஜோர்ஜ், வைரவ கோவிலடி, நாவற்குழி. (சந்தி). 791

தே. எண்ணை
1 போ. 22/-
தே. புண்ணுக்கு
கிலோ 5/-
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்
ஸ்ரீராம் றேடர்ஸ்
கோப்பாய் சந்தி.
885

## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

### நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

**குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் செல்வதற்கான விசா, பயணச்சீட்டுக்கள் மற்றும் சகல ஏற்பாடுகளும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

குறிப்பு:

கனடா செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

**Cross Travel Services (Pte) Ltd.**

STAGE II. MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.

Phone No: 22040, 22065. TELEX No 22207 (C. T. S) C E

## பதவி வெற்றிடம்

வர்த்தக முகாமையாளர் (ஆண்கள் மட்டும்)

கல்வித்தகமை: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணப்படி

சம்பளம்: 500 — 840
......................
20 X 5 + 30 X 8

வயது: 25—40

விண்ணப்பப் படிவங்களையும், நிபந்தனைகளையும் மற்றும் விபரங்களையும் கேட்டுச் சொந்த முகவரியிட்ட முத்திரை ஒட்டிய தபால் உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 25-7-1984.

(ஷ பதவிக்கான எமது 29-6-84 திகதிய விளம்பரம் ரத்துச் செய்யப்படுகிறது),

தலைவர்,
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்.

சாவகச்சேரி.
11-7-84. 892

வார மலர்
ஈழநாடு
லங்கா
EELANADU VARAMALAR

# ஒரே உலககோட்பாடு:

## இதுவே

# இந்துமதக்கல்வித்தத்துவம்

உலகில் தோன்றியமதங்கள் அனைத்தும் சில அடிப்படை உண்மைகளைக் கூற எழுந்தனவாகக் கருதப்படுகின்றன. பொதுவாக மதங்களின் உள்ளார்த்தமான நிலைப்பாடுகள் மனிதவாழ்வினை மேம்படுத்துவதற்காக மேலோங்கச் செய்வதற்காக எழுகின்றன. தீர்க்கதரிசிகள் பலர் கூற்றுப்படி சமயமே வாழ்வின் முழுமை' அது வாழ்வின் பகுதியன்று என்பது தெளிவாகின்றது. சமயத்தின் அனுபவங்கள் பிரிக்க முடியாத அல்லது பகுக்க முடியாத நிலையில் விளங்குகின்றன. எனவே இது முழுமையாகக் கொண்டிருக்கும் தன்மையினைத் தர்க்கரீதியில் சிந்திக்கும்போது சமயத்தின் அடி நிலைப்பாடு அல்லது அர்த்தம் என்பது பூமுமையான அல்லது பூரணத்துவமான ஒரு குறிக்கோள் மறைமுகமாகத் தனக்குள் கொண்டுள்ளதென்பது தெளிவாகின்றது. கூற முடியாத அல்லது குறிப்பிட்டுக் காட்டமுடியாத அம்சங்களைத் தனக்குள் கொண்டு மனிதனை வழிபடுத்தும் நிலையில் மட்டும் இச்சமயங்கள் இனங்காட்டி வருகின்றன.

மேற்கூறிய அடிப்படைக் கருத்துக்களை ஆதாரமாகக் மனிதன் அடைகின்ற முதிர்ச்சி வேறுபாடுகளுக்கு ஏற்பவே தன்னுணர்வு ஏற்படுகின்றது. வேதம், உபநிடதம் ஆகியவை இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவங்களை விளக்க எழுந்தவையாகும்,

வாழ்க்கையே கல்வி என்னும்போது மேற்கத்திய கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துக்களின் படியும் வாழ்வின் பல்வேறு படி முறைகளை உணர்த்துவது கல்வியாகும். இதனை உணருவதற்கு தன்னை உணரவேண்டியுள்ளது. கல்வி தொடர்ச்சியான செயற்பாடு என்பதனை எவரும் மறுக்கவில்லை,

மையானதாக [Un tive Experience] கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளது. சமய அனுபவங்கள் எல்லா உரிமைகளும் வாய்க்கப் பெற்றஒரு அரசு போன்றதென்றும், அதுதனக்குத்தானே நற்சான்று பகரும் தன்மையுடையதென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

தீர்ப்பளிக்க உதவும் அறிவுதான் (Faculty of Judgement] முக்கியமானதென்றும் உணார்ச்சியே சமயத்தில் முக்கியமானதென்றும் செயற்பாடுதான் முக்கியமானதென்றும் பல்வேறு கோணங்களில் சமய அடிப்படைகள் நோக்கப்படுகின்றன. ஒருமைப்பாடு பற்றிய உள்ளுணர்வு [Intuition] தான் முக்கியமானதென்று சில உளவியலாளர் கருதுகின்றனர் சில நிபுணர்கள் இயல்பூக்கத் தூண்டலே [Intstincts] சமய ஊக்கிகளை மனிதனுககு அளிக்கின்றதென்ற விளக்கத்தினை கொடுத்து வருகின்றனர் இவ்வாறான அபிப்பிராய பேதங்களை அல்லது அடிப்படை முரண்பாடுகளைக் கொண்டு இந்து மதத்தின் தத்துவங்கள் பற்றி நோக்க வேண்டியுள்ளது தோற்றுவிக்கப்பட்ட சமயமாக இல்லாது வரலாற்றுக்கு முற்பட்ட ஆளுல்வளமான அடிப்படைத் தத்துவங்களை உள்ளகமாகக் கொண்டுள்ளது இந்து மதம். இம்மதத்தில் விளக்கம் காண முடியாத ஆழ்ந்து நுண்ணியதாக ஆராய வேண்டிய பகுதிகள் உள்ளன. வளர்ந்த மதங்களின் வரிசையில் தனிமனித வாழ்வும், மேம்பாடும் முக்கியத்துவம் பெற்றுக்கொள்ளு

> இந்துமதத்தில் காணப்படாத
>
> எந்தத்தத்துவத்தையும்
>
> எந்தத் தத்துவஞானியும்
>
> முன்வைக்கவில்லை

வதனை வலியுறுத்துவதாக இந்து மதம் விளங்குகின்றது.

இந்து மதத்தில் குறிப்பிடக்கூடிய கல்வித்தத்துவமாக விளங்குவது தன்னுணர்வு [Self Realisation] பற்றிய கோட்பாடாகும். தன்னை உணர்ந்து தன்னை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது. 'நான்'' என்னும் கொள்கை உருவாக்கும் தொடர்ச்சியான வாழ்க்கை முறைகளை விளங்கக் கூடிய ஆற்றல் என்பவற்றில் ஏற்படும் உயர்பண்புகள் தலைமை உணர்தலாகின்றது தன்னை மையமாகக் கொண்ட தொழிற்பாடு மனித வாழ்வில் முக்கியத்துவம் பெறுகிறது. ''ஒவ்வொரு ஜீவாத்மாவும் உண்ணிறைந்த தெய்வத்தன்மையுடையது'' என்று கூறுகின்றார் சுவாமி விவேகானந்தர் தானறிதல் ஒன்றே சங்கடத்தைத் தீர்க்க வல்லதாகின்றது அறிவு தன்னை உணர்தலுக்கு ஆதாரமானது. பல்வேறு காலகட்டங்களில்

இந்துமதத்தில் காணப்படுகின்ற கல்வித்தத்துவம் உண்மை (Truth) என்பதாகும். சத்தியத்தின் வழி நின்று உணரக்கூடியது இதுவாகும். தர்மம், சாந்திக்கு வழிவகுக்கின்றது. இதன் மூலம் அன்பு உருவாகின்றது. மனிதகுலத்தின் மீது பிரேமையை இது ஏற்படுத்தவல்லது. பக்தியின் வழிநின்று உண்மையையுணர முடிகின்றது. ஒவ்வொரு சம்பவத்திற்கும் மாறுதல்களுக்கும் சில உண்மைகளே அடிபபடையாகின்றன. உடலியல் ரீதியிலும், உளவியல் ரீதியிலும் ஏற்படும் உணர்வு சர்வதேச உணர்வாக வியாபிக்கின்றது. ஒரே உலக கோட்பாட்டுத்தத்துவம் உண்மையின் வழி நின்ற எழ வேண்டியுள்ளது. சமயத்திலுள்ள உண்மைஎனப்படும் தத்துவம் பல்வேறு முறைகளில் ஆராயப்படும் கல்வித் தத்துவமாக உள்ளது.

உண்மையும், நன்மையும். அழகும் ஒன்றிணைந்த வழி சமய ரீதியிலமைந்த கல்வித் தத்துவங்களாகும் தன்னுணர்வு பெற்ற மனிதன் உலக உணர்வுடன் கூடி உயர்கின்றான். மேலுயர்ந்த பொருளாகப் பிரபஞ்சம் விளங்குகின்றது, இதுவே எல்லையற்ற பரம்பொருளாகின்றது தியானத்தின் மூலம் தன்னலமற்ற உணர்வு ஏற்பட முடிகின்றது. வேதாந்தம் சித்தாந்தம் போன்ற பிரிவினைகள் இங்கு எழுவதில்லை. அறிவு வியாபகமாகின்றது- மனிதனின் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி எனில் உண்மை வழி நின்ற நன்மையும் நன்மை வழி நின்ற அழகும் மனித பூரணத்துவத்திற்கு வித்துக்களாகும்

இந்து மதத்திலுள்ள கல்விச் சிந்தனையாகக் கொள்ளக்கூடியது நடுவு நிலையாகும். (Righteousness) உள்ளம் உடலுக்குத்தாவி உடல் ஆன்மாவாகி பிரிக்கமுடியாத தன்மையாகின்ற நிலையில் ஒன்றுமே புரியாத உணர்ச்சிக்கலவையாகின்றது சரியான வழி நின்று எதனையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் வழி. பிறக்கும் நம்பிக்கை என்பது மிகவும் இன்றியமையாததாகின்றது. நம்பிக்கை என்னும் போது நம்மிடத்து நம்பிக்கை, தெய்வத்திடத்து நம்பிக்கை- இதுவே பெருமையின் இரகசியம் என்பதனை உணர்ந்தவர் விவேகானந்தர். எண்ணம் நம்பிக்கையாகி, நம்பிக்கை செயலாகி, செயல் பழக்கமாகி, பழக்கம் குணநலனாக மாறுகின்றது. கலாநிதி பென்வீல்டோ என்பவர் ஆழ் மனங்கள் பற்றி ஆராய்ந்துள்ளார். நமது ஆழ்மனதில் பழைய கால நிகழ்ச்சிகளும் பதியப்பட்டுள்ளதாக இவர் கருதுகின்றார். ஆத்மா சாவதில்லை என்ற கருத்தினை இவர் வலியுறுத்துகின்றார் நாம் புறப்பட்ட இடத்திற்கு ஆத்மீக தாபம் ஓடுகின்றது. விஞ்ஞானமும் ஆரம்பித்த இடத்திற்கே மீண்டும் செல்கின்றது

விளக்கம் காண முடியாத நிலையில் நின்றுவிடுகின்றது.

இந்து மதத்தில் உள்ள ஆற்றல்கள், நுண்ணறிவுத் தன்மைகளைக் கல்வித்தத்துவங்களாகக் கருதலாம். சிவன், சக்தி வடிவங்கள் அனைத்தும் ஆற்றலும், சக்தியும் நிறைந்த தன்மையையே கொள்ளுகின்றன. நுண்ணறிவு செயல்ரூபம் பெற ஆற்றல் வேண்டும் ஞான உருவம் அன்புவடிவம், ஆனந்த வடிவம் என்றெல்லாம் சக்திக் கோலங்கள் விளங்குகின்றன. ஞானம் [Wisdom], அறிவு [Knowledge] அன்பு [Love] ஆனந்தம் அனைத்திற்கும் தொடர்பு நிலையுள்ளது

இந்து மதத்தில் உள்ள கல்வித்தச்துவத்தில் உயர்மனம் [Supermind] முக்கியமாக உள்ளது முப்பொருள் பற்றிக் கூறிவந்த சித்தாந்தம் பரம்பொருள்பற்றிக் கூறிவந்த வேதாந்தம அனைத்தும் அரவிந்தர் கூறியது போல் உயர் மனம் பற்றியும், பரம்பொருள் பற்றியும் அவை இணையும் முறை பற்றியும் கூறுகின்றன.

இந்து மதத்தின் இறுதியான நோக்கம் பூரண விடுதலையாகும் வாழ்க்கை என்னும் காட்சி அன்பின் அடிப்படையில் ஒற்றுமையின் அடிப்படையில்—பரவுதல் வேண்டும். பண்பாட்டின் உயர் முடிவான கிரேக்க தத்துவத்தையும், ஆத்மீக வாழ்வையும் உலகியல் ரீதியிலமைந்த ரூசோவின் தத்துவத்தையும் உள்ளம் உடல் என்பவற்றை இணைத்த காந்தியின் தத்துவத்தினையும் நோக்கின் இந்து மதத்தில் காணப்படாத எந்தத் தத்துவத்தையும் யாரும் முன்வைக்கவில்லை என்றே கருதத் தோன்றுகின்றது.

ஐயாயிரம் ஆண்டுகளில் ஐம்பதுக்கு மேற்பட்ட சோமகளின் ஆன்மீக வடிவமான

இந்துமதத்தின் மரபு இயற்கை மக்கள், பரம்பொருள் மூன்றையும் இணைத்துப் பேசுகின்றது இதனால் தான் காந்தியடிகள் 'இந்துமதத்தின் வழி நின்று அமைதி, மகிழ்ச்சி ஒளி என்பவற்றைக் காண்பதைசாறி இவ்வுலகில் வேறொரு இலட்சியமும் எனக்கில்லை எனகிறார் ஆர்னல்ட் ரொயின்பீ என்ற அறிஞர் 'இந்து சமயக் கல்வி மரபு அனைதுலகக் கண்ணோட்ட மரபுமட்டுமல்ல அது மனித குலத்தின் முழுமை பொருந்திய மறுமலர்ச்சியின்

(14ம் பக்கம் பார்க்க)

எஸ். பத்மநாதன்

## ★ சுயம்

காகத்தின் கூட்டுக்குள்
அதனுடைய
உடற்சூட்டில்
பொரித்துக்
குஞ்சாகி
அது கொடுக்கும்
இரையுண்டு
வளர்ந்தபோதும்
குயில் —
காகம் போற் கரைவதில்லை
தல சுயமிழந்து
அந்நியமாவதில்லை
கோபங் கொண்டு
காகம்
விரட்டி விரட்டிக்
கொத்தினாலும்
குயில்
தன்னினிய குரலில்
என்றும்
கூவாமல் இருப்பதில்லை.

யோ. பெனடிக்ற்பாலன்

# தீர்வு கிட்டுமா?

காரிருளில் வீடு தொலைபோல் தெரிகிறது.

சூரியோதயத்துக்குமுன் இருள் அடர்ந்திருக்குமென்பர்.

யூலைமாதம் முடியும்வரை வடக்கிலும் கிழக்கிலும் பந்தோபஸ்து நடவடிக்கைகள் இறுக்கமாக எடுக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்து மக்கள் அடுத்ததென்ன என்ற கேள்வியைக் கேட்டவண்ணமிருக்கின்றனர்.

நீண்டகாலமாக அலைக்கழிந்திருக்கும் மக்கள் விடிவு கிட்டுமென்று எதிர்பார்ப்பது வியப்பல்ல. பழம்பழுத்தால் விழவேண்டியதுதானே !

உலகவரலாற்றிலே யூலை 4-ம் தேதி அமெரிக்க சுதந்திரதினம்; யூலை 14 (நேற்றையதினம்) பிரான்ஸ் புரட்சித்தினம். அந்நாளில் பாரிஸில் ஆரம்பமான இரத்தக்களரி குரூரமானது.

இன்று யாழ்ப்பாணத்தில் மின்கம்பத்திலும் முச்சந்தியிலும் தூங்கும் சடலங்கள் அன்றைய பாரிஸ் காட்சிகளை நினைவூட்டுவதாகக் கொழும்புத் தினசரி ஒன்று குறிப்பிடுகிறது.

இலங்கை வானொலியும் சில ஆங்கிலத் தினசரிகளும் யாழ்ப்பாண மக்கள் இவ்வித கொடிய நிகழ்ச்சிகளைக் கண்டித்துக் கொதித்தெழும்பவில்லை யெனக் கவலைதெரிவிக்கின்றன. இதென்ன தந்திரமோ?

இதுபற்றி இங்கு ஒரு பரபரப்பும் இல்லை. கொலை கொள்ளை கலங்கிய நீரில் காணப்படும் அழுக்குகள்

கலக்கிஇறைக்கும் நாளையே மக்கள் காத்திருக்கின்றனர்.

பிரதமர் தாட்சர் பிரதமர் இந்திரா இங்கு வருவதால் நிலைமை தெளிவடையுமா? அவர்களும் இன்று களைப்படைந் திருக்கின்றனர்.

திருமதி நிர்மலா நித்தியானந்தன் வெகுவிரைவில் நாடு திரும்பும் சாத்தியம் உண்டென்கிறார்.

விழிப்புணர்வு பொறுமையின் இலக்கணம்.

'ஈழநாடு' வாரமலரில் வெளிவந்த

# டானியலின் 'மையக்குறி'

# நாவல் பற்றிய ஒரு மதிப்பீடு

★ தேவி பரமலிங்கம்

இலக்கியகாரன் சொல்ல விளைகின்ற செய்தியைப் பரிவர்த்தனை செய்து கொள்ள ஏற்ற வடிவத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு படைப்பாற்றலால் அச்செய்தியை வெளிக்கொணர்வது தான் இலக்கியமாகின்றது.

இலக்கிய வடிவங்கள் தமிழில்தோன்றுதொட்டும் புதிது புதிதாகவும் வளர்ந்தும் தோன்றியும் வந்துள்ளன. அத்தகைய இலக்கிய வடிவங்களை ஆளுமைப்படுத்தக்கூடியவனே இலக்கியகாரனாக முடியும்

ஓர் இலக்கியகாரனுக்குத் தோன்றக்கூடிய சிந்தனைகள், உணர்ச்சிகள் சாதாரண வாசகனுகிய இலக்கிய நுகர்வோனுக்கும் இருக்கலாம். அந்த உணர்ச்சிகளை சிந்தனைகளை அந்தந்தப் படியே மற்றவர்களுக்கும் பரிவர்த்தனை செய்து கொள்கின்ற ஆற்றல் உள்ளவனே இலக்கியகாரனாகின்றான்.

படைப்பாளியாகிய எழுத்தாளனோ, கவிஞனோ, நாடகாசிரியனோ தானொரு இலக்கியப் படைப்பாளி என்பதை மறந்து தன்னை ஒரு ஞானியாகவும், தத்துவ மேதையாகவும் கற்பனை செய்து கொண்டு சொல்லவரும் செய்தியை இலக்கியமாக்க விளையும் போது அவனால் உருவாக்கப்படுகின்ற இலக்கியங்கள் விளங்கிக்கொள்ள முடியாத தத்துவார்த்தச் சுலோகங்களாக மாறி விடுகின்றன. அத்தகைய மூத்த எழுத்தாளர்களில் இருந்து மாறுபட்ட ஒருவர் தான் திரு கே. டானியல், அவர் எப்பொழுதுமே விளங்காத, புரிந்து கொள்ள முடியாத இலக்கியங்களுக்கும் படைப்பாளிகளுக்கும் எதிராகவே செயற்படுபவர்.

எழுத்தாளன் என்பவன் மகாசக்தி வாய்ந்தவன் எனப் பீற்றுன்ற கருத்துகளுக்கும் அவர் தனது நூல்களின் முன்னுரையில் தக்க பதிலடி கொடுத்து வந்திருப்பதை அவரது நூல்களை வாசித்தவர்களால் புரிந்துகொள்ளமுடியும்.

டானியலின் சிந்தனை வளத்தின் இன்னொரு அறுவடையாகப் பிறந்த "மையக்குறி" என்னும் குறுநாவல் தொடராக 'ஈழநாடு' வாரமலரில் வெளிவந்தபோது வாரமலர் வாசகர்கள் பெரிதும் ரசித்தனர்.

டானியலின் "பஞ்சமர்" "கோவிந்தன்," "அடிமைகள்," "கானல்" ஆகிய யாழ்ப்பாணத்து மண்ணில் வரலாறு படைத்த நாவல்கள் போன்ற வரலாற்றுச் சித்திரம்தான் "மையக்குறி"

மேலே குறிப்பிட்ட "அடிமைகள்," "கானல்" ஆகிய இருநாவல்கள் இப்போது நூலுருப்பெற்று வருகின்றன. இவற்றை நான் கையெழுத்துப் பிரதியில் படித்துள்ளேன்

குறிப்பிட்ட டானியலின் நான்கு நாவல்களின் இலக்களவைப்போன்றே மையக்குறி நாவலின் இலக்களவும் நீண்டதொரு வரலாறு.

'சோமர்' என்ற சோமசுந்தரத்தார் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் குழப்படி விட்க்கொண்டு வெளிக்கிடுகின்ற விடலைப்பருவத்தில் இருந்து அவரது முதுமைக்கால மடிவுவரை நாவல் சித்திரித்துச் செல்கின்றது

டானியல் சமூக மாற்றத்திற்காகவும், அடக்கு ஒடுக்கு முறைக்கெதிராகவும் மட்டென்றில்லா நகர நிர்வாக ஊழல்களைக் களைவதற்காகவும் தனது எழுத்துப்பணியை மேற்கொண்டிருப்பவர் என்பதற்குச் சான்ருக "மையக்குறி" நாவல் ஆரம்பமே யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுர விசாலமணி காட்டும் கருவி பலமாதங்களாகப் பழுதுபட்டுப்போய் நேரத்தைப் பிழையாகக் காட்டிக் கொண்டிருப்பதனைச் சுட்டுவதன் மூலம் குறிப்பிடுகின்ருர்.

நாவலை, தேர்தல் கூட்டத்தைப் பார்த்துப் போக தாவடியில் இருந்து யாழ்ப்பாணம் முற்றவெளிக்கு வந்துபோன சண்முகம் இரவு வீடு திரும்பி சகோதரன் கந்தசாமி கொண்டு வந்திருக்கும் பத்திரிகை ஒன்றில் "மையக்குறி" என்ற தலைப்பின் கீழ் இடம் பெறுகின்ற நவீனத்தை அவன் வாசித்துச் செல்வதாகப் புதிய ஒரு உத்தியில் நகர்த்தி இருப்பது கலைத்துவமாக மிளிர்கின்றது.

தேர்தல் கூட்டம் முடிய 'பஸ்' நிலையம் வரும் சண்முகம் 'பஸ்' கிடைக்காமல் நிற்கையில் சோமர் சுகவீனமுற்றிருப்பதைக் கேள்வியுற்று கொட்டடியில் உள்ள அவரது வீட்டுக்குப்போய் அவர் இறந்துவிட்ட சங்கதியையும் அறிந்துகொண்டு கால் நடையாகவே தாவடிக்கு வருகிறன். அவன் வீதியில் வருகையில் அடுத்தநாள் நடைபெற இருக்கின்ற தேர்தலுக்காக வேட்பாளர்களின் 'வால் பிடிகள்' தத்தமது வேட்பாளர்களுக்கு ஆதரவைத் தேட எடுத்துக்கொள்கின்ற முயற்சிகளையும் — முற்றவெளிக் கூட்டத்தின்போது வேட்பாளப் பெருமகன் ஆற்றுகின்ற உரை —ஆதரவாளப் பேச்சாளர்கள் ஆற்றிய உரைகள் மூலம் தேர்தல் காலச் சடங்குகளைத் தத்ரூபமாக நாவலில் இளையோடவிடப்பட்டிருப்பமை போற்றத்தக்கதாக அமைந்து விடுகிறது.

அதுபோலவே சோமருக்காகப் பெண் கடத்த மானிப்பாய்க்குப் போய் எதிர்பார்த்தவளைவிட்டு மற்றவளைக் கடத்தி வருவதாகச் சித்தரித்துள்ள பகுதியும் நாவலின் மிக உயர்ந்த காட்சி விபரிப்பாக அடைந்துள்ளது. மேலும் நாவலின் இறுதிப்பகுதியில் (இது நாவலின் ஆரம்பமாகவும் அமைவது நீணட நாட்களாகத் தன்னுல் தீண்டப்படாமல் கிடந்த 'றிக்சோ'வைப் பண்டாரி வெளியில்எடுத்து அடுக்குப்பண்ணித் தனது மதிப்புக்குரிய சோமரை றிக்சோவில் ஏற்றி உலாவருவதான காட்சிகளும் மனதில் நின்று நிழலாடக்கூடியன

இந்நாவல்ன் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை நடமாடுகின்ற பாத்திரமாகவும் பாத்திரப்படைப்பில் கவனமெடுத்துப் படைக்கப்பட்ட பாத்தி

(14ம் பக்கம் பார்க்க)

## எளிமையின் சிகரம்

பாரதத்தின் முதல் ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரஜாத் தமது மாதச் சம்பளமான 10,000/- ரூபாவை ரூபா 5000/-க்கும், பின்னர் ரூபா 2500/-க்கும் குறைத்துக் கொண்டார்.

அவருடைய வங்கி இருப்பு என்றுமே 100 /- ரூபாவைத் தாண்டியதில்லை

பதவி விலகி, தனது சொந்த ஊரான பாட்னுவுக்குச் சென்றபோது, அவருக்கெனச் சொந்தமாக ஒரு கார் கிடையாது.

ஆதாரம் - கோகுலம்.

தொகுப்பு :
க. கனகராசா ச. நீ.


## வவுனியாப் பட்டினத்தில்.........

மிகப் பழம்பெரும் வர்த்தக நிறுவனம் ஒன்று மிகப் புதிய கேந்திர ஸ்தானத்திற்கு வந்திருக்கிறது!

**வவுனியாவில்** 1958ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பெற்ற பழம்பெரும் முன்னணி வர்த்தக நிறுவனமாகிய

# மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

இதுகாறும் தாம் சேவையில் ஈடுபட்டிருந்த 85-87 பசார் விதியை விட்டு
இன்றைய பட்டினத்தின் கேந்திர ஸ்தானமாக விளங்கும் வவுனியாப் பேருந்துப் பன்முகப் பணிமனைக்கு அருகாமையில் அமைந்திருக்கும்

**கந்தசுவாமி கோவில் வீதி இல. 8A, ஸ்தலத்திற்கு வந்து அங்கிருந்து**

## 1984 ஜூலை 2ம் தேதி தொடக்கம்

**சேவையாற்றி வருகிருர்கள்**

புதிய ஸ்தலத்தில் எமது சேவை பழைய பணிவன்புடனும் புதிய மெருகுடனும் அதிசிறப்பாக வழங்குவோமென உறுதி கூறுகின்ருேம்.

இதுகாறும் வவுனியாப் பெருங்குடி மக்கள் எம்மிடம் காட்டிய பேரன்பிற்கும் எமக்கு அளித்த பேராதரவிற்கும் எமது சிரம்தாழ்த்தி கரங்கூப்பி நன்றி கூறுகிருேம்

புதிய ஸ்தலத்திலும் எமது ஸ்தாபனத்திற்கு உங்கள் மதிப்பார்ந்த ஆதரவைத் தொடர்ந்தும் நல்கவேண்டுமென விநயத்துடன் வேண்டிநிற்கிருேம்,

# மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

பல்வகைப் பொருள் வியாபாரிகள் பின்வரும் கம்பனிகளின் விற்பனைப் பிரதிநிதிகள்-:

மலிபன் பிஸ்கற் மனுபக்சறேச் லிமிட்.
லிவர் பிரதேர்ஸ் (சிலோன்) லிமிட்.
யூனியன் காபைட் சிலோன் லிமிட்.

**8A, கந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா.**

(831)

# கனவுகள் கற்பனைகள்

கடற்கரை வெண்மணற் பரப்பிலிருந்து மணலைக் கைகளால் அளைந்து விளையாடிக் கொண்டிருந்தான், அவன். சூரியனை துசங்கமத்தில், அவனுடைய நிறக்கதிர்களின் ஆக்கிரமிப்பில், வர்ண ஜாலம் காட்டி, ஆடிவரும் கடல் அலைகளும், குளிர்மை நிரம்பிய தென்றலின் வருடலும் மனத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டிக் கொண்டிருந்தன. அடுத்த முறை இங்கு வரும்போது ஆனந்தியும் கூட வருவாள் என்ற நினைவே இனித்தது. அவளது மடியில் மெல்லத் தலைவைத்துப் படுத்தபடியோ இல்லை அவளது தோளில் மென்மையாகச் சாய்ந்தபடியோ அவள் கரங்களைத் தன் கரங்களுடன் இணைத்துக் கொண்டு-அவளுடைய கண்களில் தான் ஆழம்தேடுவதைப் பார்த்து அவள் நாணிக்கன்னம் குழியச்சிரிப்பதாக, தன் தலையை அன்புடன் வருடி, மயிரைக் கோதி விடுவதாக எல்லாம் கற்பனை நீண்டது. ஓ! என்ன சுகானுபவம்!

திருமணம் பேசப்பட்டபோது டாக்டர் பெண் என்றதும் அவனுக்குப் பிடிக்கவில்லைத்தான. படித்த பெண் வேண்டுமென்றதற்காக எனக்கு நல்ல தண்டனையோ என்று புரோக்கரைக் கூடக் கேட்டான். "டாக்டருக்கு நோயும், அழுதுவடியும் முகங்களும், துன்பச்சூழலும் தான் பார்த்துப் பழக்கமாயிருக்கும். எனது கனவுகளுக்கேற்ற மனைவியாய் வாழ அவளால் முடியாது" என்று அண்ணனிடமும் மறுத்துவிட்டான். ஆனால் முடிவுகள் எம் கையில் மட்டும் இல்லையே!

அன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் அவளைத் தற்செயலாகச் சந்திக்கவேண்டி வந்ததன் விளைவுதான் மனமாற்றத்துக்குக் காரணமானது. அவனுடைய நண்பன்தான் அவளை இனம் காட்டினான். "உதுதான்ரா உனக்குப் பேசப்படும் டொக்டர் ஆனந்தி"- தலைநிறைய கனகாம்பரமும் மல்லிகையும் இணைத்துத் தொடுக்கப்பட்ட மாலைவைத்து, முகத்தில் சின்னகீற்றில் விபூதியும் கீழே பொட்டுமாக, மூக்குத்தியுடன் சாறி முந்தானையால் போர்த்தியபடி அவள் நிற்பதைப் பார்த்ததும், தமிழ்ப் பண்பாட்டுடன், அலைபாயாத நேர் கொண்ட பார்வை, சனிவும், அழகும் நிறைந்த இனிய முகம்......அவன்சலனப்பட்டுத் தான்போனான். போதாததற்கு நண்பன் வேறு அவள் புகழ் பாடி முடித்தான்.

யூனிவசிற்றியிலேயே அவளுக்கு ஒரு மதிப்பாம். பகிடிவிடக் கூடப்பயப் படுவார்களாம். அச்சூழலில் தான் உண்டு தன் வேலையுண்டு என்று தேவைக்கு அதிகமாகக் குதிக்காமல், ஆண்களுடன் அளவாகப்பழகும் நாணமுள்ள இலட்சியப் பெண்கள் என்று எண்ணக் கூடியவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவினர் தான் என நான்கு வருடப் பல்கலைக்கழக வாழ்வை அனுபவித்த அவனுக்குத்தெரியாதா? எனவே எப்படியோ திருமணத்திற்கு பச்சைக்கொடி காட்டிவிட்டான்.

இறுதிவருட மருத்துவ மாணவியரான வதனி, சிவானி. சுந்தரி போன்றோர் தவறாது வெள்ளிக்கிழமை தோறும் குறிஞ்சிக்குமரனிடம் வருவதையும், தான் இந்து மாணவர் சங்கச் செயற்குழுவில் இருந்தபோது அவர்களின் உதவிசெய்யும் மனப்பாங்கை அவதானித்த நிகழ்வுகளையும், அவர்களின் இனியபண்பான உபசரணையையும் நினைவில்



நிறுத்தி டாக்டர் என்றால் சாதாரண பெண்ணாக இருக்க மாட்டாள் என்று நினைப்பது தப்புக்கணக்குத்தான் என்று தனக்குத்தானே சமாதானமும் கூறிக்கொண்டான்.

திருமணப் பதிவு முடிவடைந்து நான்கு நாட்கள் கழிந்துவிட்டபோதும் அவளைத் தனியாகச் சந்தித்து அவன் இதுவரைபேசவில்லை. காரணம் நேரம் இருவருக்கும் ஒத்துவரக்

* செல்வி எஸ். ஸ்ரீரஞ்சனி

கூடியதாய் வராதது மட்டுமல்ல, இன்னும் இருநாளில் திருமணமே வரப்போகின்றது; எனவே திருமணத்தில் முழுத் "திறிலும்" இருக்கவேண்டும் என்ற ஆசையும்தான். பதிவு முடிந்த கையுடன் கோயில, சினிமாஎன்று திரிவதும் ஓயாது பெண்வீடே தஞ்சமெனப் போவதும் அவனுக்குப் பிடிக்காதவிடயங்கள்.

திருமணத்தை புனிதமாகக் கருதி நடக்கும் சடங்குகளுக்கு முழுஅர்த்தமும் இருக்கவேண்டும் என்ற நினைப்புள்ளவன் அவன் பதிவு அன்றுகூட மாலை மாற்றுவது, கேக் வெட்டுவது எதுவும் வேண்டாம் என்று

நான் அட்வான்ஸ் லெவல் படித்த நாள் முதல் இரவு 12 மணிக்கு முன் தூங்கியதே யில்லை. காலையிலும் நாலு மணிக்கெல்லாம் எழும்பிவிடுவேன், இப்போதும் என் நோயாளருக்கு வேண்டிய குறிப்புகள் தயார் செய்து கொண்டிருக்கும்போது அம்மா சாப்பாடும் மேசைக்கு எடுத்து வருவா" என அவள் சொன்னது சிறுபிள்ளைத்தனமா இல்லை தற்புகழ்ச்சிபாடும் தற்பெருமையா அல்லது இனியும் இப்படித்தான் என்பதற்கு அத்திபாரமா என அவனுக்குப் புரியவில்லை. ஆனாலும் நெஞ்சின் எங்கோ ஒரு பகுதியில் பலமாக இடித்ததுபோல வேதனையாக இருந்தது.

இருந்தாலும் அவையாவும் பின சில நிமிட நேரத்தில் இளமை வேகத்தில் அணைப்பின் சுகத்தில் பாதிப்பின் அளவு புரியாத அளவுக்கு மறைந்துதான் போய்விட்டன.

நான்காம் நாள்.

# எமது சிறுகதை

முன்பாகவே சொல்லியிருந்தான். கனவிலும் கற்பனையிலும் எப்படித் தன் மனைவியுடன் இலட்சியமாய் வாழ்வது என்ற திட்டம்தான்!

திருமணத்திற்காகக் காப்புக் கட்டி, ஒவ்வொரு சடங்கின் அர்த்தத்திலும் நெகிழ்ந்து, அவளைக் கையேற்று, பால்பழம் சாப்பிட்டு, அருந்ததி காட்டி, அம்மி மிதிக்கச்செய்து, பூதாக்கலம்செய்து...எல்லாமே இனிமையானவைதான்! மனத்தில் படபடப்பு, இனிமை, மகிழ்வு கூச்சம் நிறைய அவளைத் தொட்டுத் தாலிகட்டி, கையைப்பிடித்து வலம் வருகையில் விரல் நடுக்கங்களில் எத்தனையோ சொல்லத் துடித்ததற்கு முழுமையான முகவுரையாக அன்று இரவு அவள் முகத்தை மெல்ல நிமிர்த்தி, ஆதரவுடன் தலையை வருடியபடி. மென்மையாக முத்தமிட்டுவிட்டுச் சொன்னான்.

"எங்களுடைய அர்த்தமுள்ள இனிய கலாச்சாரத்தில் உமக்கு உள்ள நாட்டம் உள்ளத்திலும பண்பாகநிறைந்திருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு என் இலட்சியமெல்லாம் வெறுமனே இயந்திரங்களுடன போராடும் பொறியியலாளராக வாழ்வதில் இல்லையம்மா! உயிர்த்துடிப்புள்ள என் இனிய அன்பான மனைவியுடன் நான் வாழப்போகும் அமைதியான, மகிழ்ச்சியான வாழ்வில்தான் தங்கியுள்ளது. என் அன்புக்காக, என்னுடன் நீர் பங்கிட்டுக்கொண்ட வாழ்வுக்கு அடையாளப் பரிசாக நீர் பெற்றுத் தரப்போகும் குழந்தைகள் தான் என் செல்வம்".

சில நிமிட மௌனத்தின் பின் அவள் சொன்னாள்: "என் உயிர் நாடியே எமது தமிழர் பண்பாடுதான். அதை நான் மிக மதிக்கின்றேன். போற்றி ரசிக்கின்றேன். ஆனால் சாதாரண குடும்பப் பெண்ணைப் போல எனது வாழ்வு குறுகிய வட்டத்தில் இருக்காமல் எனக்குக் கிடைத்துள்ள அறிவைப் பயன்படுத்தி மருத்துவத்தில் நான் முன்னேற வேண்டும். ஒரு புகழ்பெற்ற வைத்திய நிபுணராக நான் வந்து, கஷ்டப்பட்டு என்னைப் படிப்பித்த என் அப்பாவுக்குப் பெருமை தேடிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என் இலட்சியம்".

அவளை நெஞ்சோடு அணைத்தபடி தன் இதய ஒலியைச் சொல்ல முயன்றவனுக்கு, அவளது அன்பில் நனைந்து, கரைந்து, லயித்து, மகிழ்ந்து பதில் வரும் என எதிர்பார்த்தவனுக்கு அந்த மறுமொழி மகிழ்ச்சியைத் தரவில்லைத் தான். ஆனாலும் பெரிதாக நினையாமல் "ஆனந்தி பதினொரு மணியாகிறதே" என்ற போது... "நீங்கள் நேரத்துக்கே தூங்கிவிடுவீர்களா?-

"இன்றைக்கு ஒரு முக்கியமான ஒப்பிரேசன் கட்டாயமாக நான் போகவேண்டும்" என அவள் வெளிக்கிட்ட போது அவளுடைய தந்தைக்குக்கூட ஒருமாதிரித்தானிருந்தது. என்னம்மா இது...என்ற போது "பொஸ் அப்பவே



சொன்னரப்பா, என்ன ஆனந்தி திருமண அமளியில் இதை மிஸ் பண்ணி விடாதையும் என்று. பிளீஸ் அப்பா" என்றாளே தவிர அவனுக்கு ஆறுதல் சொல்லும் விதமாய் எதுவும் இல்லை. 'நல்ல பொஸ் தான்' என எரிச்சலுடன்

நினைக்கபட்டுமே அவனால் முடிந்தது. அவள் தனது ஊழியர்கள் கேட்காமலேயே திருமணத்துக்கு ஒருவாரத்துக்கு குறையாமல் லீவு வழங்கும் தனது 'பொஸ்'ஐ நினைத்துக் கொண்டான்,

வாரங்கள் உருண்டோடி மாதங்கள் ஆயின. அவள் வந்து தேநீர் அருந்தி முடியு முன்பே தந்தை கேட்க ஆரம்பித்துவிடுவார்- "எப்படி யப்பா இன்றைக்கு உன்னுடைய கான்சர் பேசன்டுக்கு/ அல்சருக்காக அட்மிட் ஆனவன் போய்விட்டானா? இன்றைக்கு டாக்டர் விவேகானந்தா தலைமையில் நல்ல ஒரு மூளை ஒப்பிரேசன் நடந்ததாமே வெற்றியா?..."

அவள் சுவாரஸ்யமாக பதில் சொல்லிக்கொண்டிருப்பாள். ஒருபிள்ளையாகஅவள் வளர்ந்த லட்சணம் அவளால் யாரையும் புரிந்து கொள்ளவும் முடிவதில்லை. அவர்கள் தம்பிள்ளையை அவனுக்கு விட்டுக் கொடுப்பதாயும இல்லை.

சாப்பாட்டு மேசையில் சாப்பிட அவள், அவன், அவளுடைய தந்தை இருந்தால் அதை முழுவதும் ஆஸ்பத்திரியைப்பற்றியும், ஒப்பிரேசனைப்பற்றியும், அவளுக்குக் கிடைத்த பாராட்டுபற்றியும் தானிருக்கும். தந்தை உற்சாகப்படுத்திக் கேட்கக் கேட்க, அவள் 'அளந்து' கொண்டிருப்பாள். அதில் அவனுடைய தட்டு காலியாவதைக்கூடக் கவனிக்கயாருமேயின்றி அவன் கைகழுவிய பின்தான் அவள் கேட்பாள் போதுமா என்று தாய், தந்தையோ' சகோதரியரோ இல்லாமல் அன்புப்பிச்சை ஆதரவான உபசாரம் எங்கே கிடைக்கும் என ஏங்கிக்காத்திருந்தவனுக்கு வாழ்வே சூனியமாக காட்சியளித்தது.

(12ம் பக்கம் பார்க்க)

# பற்று

எல்லோரும் சென்று இனிதாய் வணங்கும்
நல்லதோர் கோயில் நகரத் துள்ளது
சாதி பேதம் சமய பேதம்
யாது மின்றி யாவரும் துதிக்கும்
அந்தப் பெருமான் அனைவர்க்கும் தெய்வம்
எந்தக் காரியம் இயற்றும் பொழுதும்
சிந்தையில் அவரைத் தினமும் நினைத்தால்
வந்து நின்றே வரமும் தருவார்
ஆதலால் அவரை யானும் சென்றே
காதலாய்த் தொழுவதைக் கடமையாய்க்
கொண்டேன்

அன்றைக் கொருநாள்; அதுவும் வெள்ளி
பன்னரும் பக்தர் படையெடுக்கின்ற
தூய திருநாள்; துதிப்பதற் கென்றே
நேயமாய் யானும் நெஞ்சத் தவரை
இருத்திக் கொண்டே ஏகினேன்; ஆங்கே
செருப்பைக் கழற்றி திருவீதி ஓரத்தில்
வைத்தபின் ஆலய வாயிலை அடைந்து;
பற்றிலா உன்னைப் பற்றிப் பிடிக்கப்
பற்றைக் களைவாய் பரமா என்றே
செப்பிய வண்ணம் சிவசிவா என்றே
கைகளைக் கூப்பிக் கண்களை மூடி
வணங்கத் தொடங்கினேன்; மனதோ என்னுடன்
இணங்கவே யில்லை; என்னடா தொல்லை
என்றுமே யானும் இயன்ற மட்டும்
என்தன் உளத்தை ஒருநிலைப் படுத்திச்
சித்தத்தை அவன்பால் திருப்ப முயன்றேன்
பத்திக்குப் பதிலாய்ப் பற்றே முளைத்தது;

காலையில் நூற்று இருபது ரூபா
கொடுத்து வாங்கிய புதிய செருப்பை
எடுத்துக் கொண்டே யாரும் போனால்
என்ன செய்வது என்ற எண்ணம்
தின்னத் தொடங்க சிந்தை மாற
அடிக்கடி யானும் அதையே நினைக்க
படித்த தேவாரம் பாதியில் நிற்க
அடடா ......சீசீ........ இதுவா பக்தி
கடவுளே! அற்ப காற்செருப்புக்கே
இப்படியென்றால் பொன்-பொருளாமெனில்
எப்படி யிருக்கும்? எந்தன் நிலைமை.

ஆசையே என்னை அலைக்கழிக் காதே
மோசமே செய்து முட்டா ளாக்காதே
பற்றே என்னைப் பற்றிப் பிடித்துச்
சுற்றி வளைத்துத் தொல்லை தாராதே

காரை. செ. சுந்தரம்பிள்ளை

# பெரிய பரிகாரியாரும் சேர் பொன். இராமநாதனும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களின் இல்லத்தில் பெண் பிள்ளை ஒருவருக்குச் சன்னி நோயுண்டாகிப்பதினெருநாட்கள் அறிவு தெளியவில்லை. சுதேச வைத்தியர்களும் நவீன வைத்தியர்களும் இரவு பகலாக நேயாளியின் அருகில் காத்திருந்து சிகிச்சை செய்தார்கள். பெரியபரிகாரியாரை அழைத்து சேர். துரைசுவாமி அவர்கள் வரும்பொழுது அங்கிருந்த ஆங்கில வைத்திய நிபுணர்கள் மட்டும் எழுந்து மரியாதை செலுத்தவில்லை. சித்த வைத்தியரின் சிறப்பை உணர்த்த விரும்பிய பெரியவர் சேர். துரைசுவாமி அவர்களை உதவியாளரிடம் குடிநீர் சரக்கு வாங்கிவர மூன்று சதம் கொடுக்குமாறு கூறினர். குடிநீரில் மருந்து கொடுத்து சில நாழிகைக்குள் அப்பெண்

## கலாநிதி வே. இராமகிருஷ்ணன்

பிள்ளைக்கு அறிவு தெளிந்து பசிக்கிறது எனக்கூறியது. அப்பிள்ளைகு ஏற்ற ஆகாரமும் வைத்திய மாமேதையின் சிபார்சின் பேரில் உடன் கொடுக்கப்பட்டது. இதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஆங்கில வைத்தியர்கள் மூன்று சத மருந்தின் ஆற்றலையும். நவீன மருந்துகளின ஆற்றலையும் எண்ணி அவ்விடத்தை விட்டு சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறினர்கள்.

சேர் பொன்.

இராமநாதனுடன்

ஏறத்தாழ 1912-ம்ஆண்டளவில சேர் பொன். இராமநாதன் துரை அவர்களுக்குக் கண் பார்வைக்குறைவு ஏற்பட்டது. இராமநாதன் துரை அவர்கள் இலங்கையின் ஏகோபித்த அரசியல் தலைவர் மட்டுமல்ல, சைவசமயத்திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றியவர். கொழும்பு சிவன் கோவில், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, யாழ். பரமேசுவரக் கல்லூரி அவரின் சேவைக்கு எடுத்துக்காட்டாகும். அவர் நவீனவிஞ்ஞான வைத்திய முறையில் தன்னுடைய நோய்க்கு வைத்தியம் செய்வித்தார். ஆனுல் குணம் ஏற்படவில்லை பெரியபரிகாரியாரைப் பற்றி நன்கு அறிந்திருந்தபடியால் தன்குதிரை வண்டியை அனுப்பிப் பரியபரிகாரியாரை அழைத்தார் அழைடபை ஏற்று தன்னைத்தேடி வருவார் எனக்காத்திருந்தவருக்குக் கிடைத்தது ''வரநேரமில்லை'' என்ற ஏமாற்றமே. மீண்டும் இராமநாதன் துரையவர்கள் குதிரை வண்டியனுப்பிய போதும் பெரிய பரிகாரியார் வரவில்லை நோய் வர வரக்கூடியது சேர் பொன். இராமநாதன் துரை பெரிய பரிகாரியார் வீட்டிற்கு சுளிபுரத்திற்குச் சென்று ஏனைய நோயாளர்களுடன் உட்கார்ந்தார்

பெரியவர் அறையுளிருந்து நோயாளர்களைப் பரீட்சித்து மருந்து கொடுத்தனுப்பி விட்டுவெளியே வந்தபொழுது இராமநாதன் துரையவர்களைக் கண்டு ''தம்பி வந்து கனநேரமாகி விட்டதோ'' எனக்கூறி உள்ளுக்கு அழைத்துச்சென்று பரிசோதித்தார். நோயை நிதானித்த பின் ''நீங்கள் மேனுட்டு நாகரிகத்தில் வாழுகின்ற படியாலும், மேனுட்டுப் பெண் உங்கள் மனைவியான படியாலும் நீங்கள் முறைப்படி மருந்துண்பது மிகவும் சிரமமானது என்று பெரியவர் கூறினர் ''எப்படியும் நீங்கள் தான் சிகிச்சை செய்ய வேண்டும். ஏனெனில் உங்களால் தான் இந்நோயைக் குணப்படுத்த முடியும்'' என்று இராமநாதன் துரை கேட்டுக்கொண்டார். ''பிள்ளையாரே'' என்று விழித்து பெரியவர் ஒரு போத்தல் மருந்தெண்ணை கொடுத்துத் தலைக்குவைக்கும் படி கூறினர் மருந்தின் பெறுமதி எவ்வளவு என்று இராமநாதன் துரை கேட்டதற்கு ரூபா ஆயிரம் என்று பெரியவர் பதிலளித்தார். இராமநாதன் துரை ரூபா முன்னூறைக்கொடுத்து மிகுதியை அனுப்பிவைப்பதாகச் சொல்லிய போது பெரியவர் மறுமுறை நீங்கள் மருந்துக்கு வரும் பொழுது பெற்றுக் கொள்கிறேன் என்று சொலலி வைத்தார். இராமநாதன் துரையவர்கள் மருந்தை உபயோகித்து வரும் பொழுது கண்பார்வை சிறிதுசிறிதாகத் தெளிவுபெற்றது. இதனுல் தமிழ் வைத்தியத்தில் மீதும் பெரியவர் சைவத்திற்கும் தமிழுக்கும், வைத்தியத்திற்கும் ஆற்றிய தன்மானம் மிக்க சேவையால் பெரிய பரிகாரியாரின் மீதும், இராமநாதன் துரைக்குப்பெருமதிப்பு ஏற்பட்டது. மூன்று மாதங்கள் சென்றபின் மீண்டும் சுளிபுரத்திற்கு வந்து பெரிய பரிகாரியாரிடம் ரூபா ஆயிரம் கொடுத்து தன நோய் குணமாகியதை மகிழ்ச்சியுடன் பெரியவருக்குக் கூறிய இராமநாதன்துரை மேலும் பெரியவருக்கு இதற்கு நன்றியாகத் தான் ஏதாவது செய்யவிரும்புவதாகவும் பெரியவரின் 'பிள்ளையாரே' என்ற பிள்ளையாரைத் தரிசிக்க விரும்புவதாகவும்கூறினர். பெரிய பரிகாரியார் தன்னுல் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் பிள்ளையார் ஆலயத்திற்கு இராமநாதன் துரையை அழைத்துச் சென்று காண்பித்தார் முழு ஆலயத்தையும் தன்செலவில் கட்டித்தர இராமநாதன் துரை முன்வந்தபொழுது பெரியவர் ஆறுமுகப்பிள்ளை தங்கள் ஞாபகார்த்தமாக விக்கிரகம் பிரதிஷ்டை செய்யும் பீடமும் கோமுகைக் கல்லும் தந்தால் போதுமானது என்று தெரிவித்தார். இன்றும் பருளைசுர விநாயகர் ஆலயத்தில் இராமநாதன் துரையால் பெரியவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பீடமும் கோமுகைக் கல்லும் உள்ளன. இராமநாதன் துரை சாகும்வரை இக்குடும்பத்தவரின் நெருங்கிய நண்பராக வாழ்ந்தார்.

ஆங்கில அமெரிக்க

வைத்தியர்களிடம்

ஆற்றலை நிலைநாட்டியவர்

இவ்வாறு அதிகாரத்திலிருந்தவர்கட்கும், ஆங்கில அமெரிக்க வைத்தியர்களுக்கும் தன்மானத்தையும் பெருமையையும் தன் ஆற்றலையும் செல்வாக்கையும் நிலைநாட்டிய பெரிய பரிகாரியார் சுதேச வைத்தியர்களுக்கு உரியமதிப்பளித்தார் என்ருல் அவருடைய தமிழ்ப்பற்றை எவ்வாறு விபரிப்பது. சித்தவைத்தியம் இலங்கையில் செழித்தோங்க பெரியவர் ஒரு கற்பகதருவாக விளங்கினர்

வைத்தியர் சூசைப்பிள்ளை திருமணமாகியும் சந்தானம் இன்றி மனம் வருந்தினர். வைத்தியர்கள் ஒருவரை ஒருவர்காரணமின்றிப் பொருமைப்பட்டுப்பகைப்பவர்களுமுண்டு. சூசைப்பிள்ளை பெரியவரை நாடி தன் மனக்குறையைத் தெரிவித்தார். பெரியவர் சூசைப்பிள்ளைக்கும் மனைவிக்கும் சிகிச்சை செய்த பின்பு புத்திரசந்தானம் ஏற்பட்டது இதனுல் சூசைப்பிள்ளையும் சந்ததியாரும் பெரியவருக்கும் அவர் குடும்பத்தாருக்கும், நட்பும் நன்றியும் உடையவரானர்கள் பெரிய பரிகாரியார் இறந்தபொழுது மிகவும் கவலையடைந்த சூசைடபிள்ளை அவருடைய அந்தியேட்டிக்கு ஒரு வண்டில் நிறைய அரிசியும், இன்னேர் வண்டில் நிறைய மரக்கறி வகையும் கொடுத்துதவினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது ஆவரங்கால் சி. தாமோதரம்பிள்ளை பெரியவரிடம் வைத்தியம் கற்க விரும்பிய போது மாணுக்கராக ஏற்று யாழ் நாட்டிலேயே சிறந்தவைத்திய சிரோமணியாக்கினர். இன்னெருமுறை அப்பாவர் என்ற வைத்தியர் இவரின் சொந்த ஆராய்ச்சி மருந்தொன்றைக் கேள்விப்பட்டு தானும் அறியவிரும்பி பெரியவரிடம் சென்று தருவாரோ, தரமாட்டாரோ என்ற தயக்கத்தில் தன் உள்ளக்கிடக்கையை வெளியிட்டார் அப்பாவரின் தகுதியை அறிந்த பெரியவர் ஏட்டை எடுத்து பலர் முன்னிலையிலும் கொடுத்து தேவையானவற்றைஎழுதி எடுத்துகொள்ளுமாறு கூறினர் அப்பாவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார், அதன்பின் இரு குடும்பத்தவர்களும் நெருங்கிய நட்புடன் வாழ்ந்தார்கள்.

இதிலிருந்து அறியக்கிடப்பது என்னவென்ருல், தானும் தன சந்ததியினரும் தம் மாணுக்கர்களும் மட்டுமல்ல எல்லாத் தகுதியுள்ள தமிழ் வைத்தியர்களுமே தலைநிமிர வேண்டுமென்று பெரியவர் விரும்பினர் இவர் ஆற்றலை மெச்சிய சுதேச வைத்தியர்கள் இவரை ''பெரியபரிகாரியார்'' என்று வியந்தும், விதந்தும் பாராட்டினர்கள்.

தமிழருடையதன்மானத்தை வைத்தியத்தின் மதிப்பை அந்நியர் ஆட்சியிலும் நிலைநாட்டி உயர்த்திய வைத்திய மகாமேதை ஆறுமுகம் பிள்ளை 1917ம் ஆண்டில் சிவனடிசேர்ந்தார் இவருடைய இழப்பு சித்த வைத்தியஉலகில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது.

---

டாக்டர்: முன்பு கால்நோவுக்கு வைத்தியம் செய்ய வருவீர் இப்போது கழுத்து நோ என்கிறீரே?

நோயாளி: முன்பு இ போ. ச. பஸ் பயணம் இப்போ மினிபஸ் பயணம் டாக்டர்.

ஜனனி புஷ்பநாதன்

---



## காதலுக்கே அர்ப்பணிக்கிறாள்

இரவுபக லாயிருவர் கண்துயில்வதில்லை
ஏங்கிநெடு மூச்செறிவ தன்றிவழியில்லை
விரவியவர் கைதழுவ நீட்டுவதெல்லாமவ்
வீண் வெளியை யன்றியயல் வேறெதுவுமன்றே

ஈருடலில் ஒருயிரென் றென்றியிடு வோருக்
கேழ்கடலும் ஏழ்புவியும் இடைவரினு மென்னும்
போரரணுங் கற்சுவரும் பூட்டுகளு மென்னும்
பூமிதடு மாறிடினும் வீழ்ந்திடினு மென்னும்.

காடுகளி லேமலரும் பூக்களி லெலாந்தன்
கண்மணியின் முகமன்றி வேறென்றுங் காணுன்
பாடுமடி தோறுமவள் சுந்தரனின் பேர்சேய்
பண்பொழியும் காதலமுதன்றி ஒலிகேளாள்.

ஆவிநெடு மூச்செறியக் கண்பொழியும் நீரால்
ஆ! இரவெலாமழுது மெல்லணை நனைப்பாள்
ஒவிய மனப்பதுமை உள்ளுயிரில்வைத்தே
ஊதுநெடு மூச்செறியத் தென்றல்சுடுவிப்பாள்.

சாரள மருங்கினிடை கைவளைக ளார்த்தால்
சந்திர னுதிக்குமெனச் சற்றருகு நிற்பாள்
நாளிரவெலா மருகு வீதிவெளி பார்த்து
நயனமெனு மிருமலர்கள் நீர்நிறைய நிற்பாள்.

அந்தியெனும் விந்தைமகள் வானீலத் திரையில்
அழகெழுதி விளையாடும் இளவேனி லொருநாள்
முந்திவரு தென்றலொடு முல்லையிள வாசம்
மோகமது சேர்கின்ற முழுமதியின் நிலவில்

ஆருயிரே நீயின்றி வாழ்வேது என்றுன்
அனலிடையில் மெழுகாகி அவன் விழியைப்
பார்த்தாள்
பாரிருக்கு மூழியெலாம் நாம்பிரியோ மென்று
பகருமுனம் மெய்ம்மறந்து கண்வழியே கலந்தாள்

தென்றலெனும் சிறகேறிப் பால்நிலவில் நீந்திச்
சிந்தனையும் ஆருயிரும் ஒன்றாகிச் செல்லும்
அன்றிலிணை யாகியவர் பிரியமன மன்றி
அன்புருவ என்புருகிப் பின்கூடப்பிரிந்தார்

புல்லரிக்கு முள்ளமொடு புன்னகை யரும்ப
பூவமளி மீதன்று நீடுதுயில் கொண்டாள்
செல்லுகின்ற வழிதோறும் சிந்தனையினிக்கச்
சீழ்க்கையொடு மெல்லென நடந்துமனை சென்றான்.

மாஞ்சோலை யாற்றுமணல் மரகதப்புல் மேடு
மாலையிளங் கதிர்க்கரங்கள் பொன்விரிக்கும்போது
தாஞ்சோடி சேர்க்கின்ற புள்ளிரண்டு போலத்
தனிமையிலே சொல்லமுது பருகியுயிர் தளிர்ப்பார்.

அள்ளிவரும் ஆறுமணல் வெள்ளியணை சேர்க்கும்
ஆடுபிளம் பைந்தளிர்கள் வீடுகள் சமைக்கும்
புள்ளினங்கள் அள்ளியிசைப் புதுதமது வார்க்கும்
புனிதவிளங் காதலர்க்குப் பூவுலகுஞ் சாயும்

முல்லையொடு மாலையினிற் காதலும் முகிழ்க்க
முத்தென அரும்புமவள் மூரலினைக் கணடால்
தெல்லையென அலலொரு கருந்திரை விரித்து
சோடியிருப் பாரிவரை மூடிமறைத் திட்டாள்

(வளரும்)

க. சச்சிதானந்தன்

---

## மகளிர் கவனத்திற்கு

- தாய்மையுற்றிருக்கும் பெண்களை கொடுஞ்சொற்களால் பேசக்கூடாது. கர்ப்பிணிகள் கோரக் காட்சிகளைப் பார்க்கக் கூடாது. அது பிறக்கும் குழந்தையின் மனவளர்ச்சியைப் பாதிக்கும்.
- தாய்ப்பாலை எண்பது நாட்களுக்குக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கும் முறையை பங்களாதேஷ் டாக்டர்கள் கண்டு பிடித்துள்ளனர் இப்போது இதற்கான வங்கி உருவாகியுள்ளது. இனிமேல் அங்கு தாய்ப்பாலை வங்கியில் பெற்றுக் கொள்ளலாம்.
- எந்தப் பெண்ணும் ஒல்லியாக அழகாக இருக்க. உணவைக் குறைக்க வேண்டுப் நேரப்படி சாப்பிட்டு வந்தால் யாரும் குண்டாக இருக்கமாட்டார்கள்.

—சச்சி—

# தொடர் நவீனம்

## 8

"சுபா ... அம்மா... சுபத்திராம்மா"

"இங்க வா சுபா... நீ எங்களுக்கு குழந்தைப் பிள்ளையாய் இருக்கலாம், ஆனல் மற்றவர்கள் முன்னுல் வளர்ந்துவிட்ட ஒருத்தி.

உனக்கு இப்பஇருபத்தைந்து வயது கடந்துவிட்டது. உன்ர அக்காவை எல்லாம் பத்தொன்பது வயதிலேயே திருமணம் செய்து வைத்திட்டன். உன்ர அண்ணுகூட இருபத்தைந்து வயதில் கல்யாணம் செய்திட்டான்.

நீ படித்துக் கொண்டிருந்தாய். ஆசையோடு படிக்கிறதை நிறுத்தக்கூடாது என்பதற்காக உன் படிப்பு முடியும் வரை உன் கல்யாணத்தைப் பற்றியோ நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.

நல்லதொருதொழில் கிடைக்கும் வரை பொறுக்கச் சொன்னுய். அப்படிப் பொறுத்தே இன்றைக்கு எத்தனையோ வருடங்களை கடத்திவிட்டோம்.

இன்று நாடு இருக்கிறசீரைப் பார்த்தால் தொழில் கிடைக்கும், கிடைத்தாலும் அமைதியாக தொழில் பார்க்கலாம் என்று சொல்வதற்கில்லை.

நீ இப்போது ஊரோடு உத்தியோகம் பார்க்கிருய், கைநிறைய சம்பளம் வாங்குகிருய். இதைவிடவா இன்னெரு சம்பளத்தை எதிர் பார்கிருய்.

இந்த நிலைமையில நீ ரீச்சிங் தான் சுகமென்று காத்திருக்கிருய். இதற்காக இனியும் உன்ர காலத்தை தள்ளிக் கொண்டு போவதை நான் விடமாட்டன்.

எனக்கு இன்றைக்கு ஒரு முடிவு கிடைத்தாகவேண்டும்."

சிவஞானம் இன்றுமகளுடன் மிக ஆறுதலாகக் கதைத்துக் கொண்டிருப்பதனின்றும் அவர் ஒரு முடிவுக்கு வந்துவிடுவார் போல் தோன்றியது.

அப்பாவின் போக்கு சுபாவுக்கு தெரியாததல்ல.

தனக்கு சரியெனப்பட்டதை செய்ய என்றைக்கும் தயங்க மாட்டார்.

சுபா எதுவுமே பேசாது நின்ருள்.

அவள் கால்கள் நிலத்தைக் கீறி எதையோ அளந்துகொண்டிருந்தன.

மகளின் நிலையும் தந்தைக்கு புரியாததல்ல. நீண்டமௌனத்தைக் கண்டவர்...

"சுபா... நீ ஏதும் சொல்ல வேண்டுமாய் இருந்தால் பயப்படாமல் சொல்லு.

நீ படித்தவள். பண்பாய் நடக்கத்தெரிந்தவள்...

ஒரு நல்ல முடிவை எடுக்க உனககுபூரணசுதந்திரமிருக்கு.

உன் சிநதனைக்கு நான் என்றைக்கும் இடம் கொடுப்பேன. உன் மனதல ஏதுஇருநதாலும் பயப்படாமல சொலலு தவருக இருந்தாற்கூட நான் உன்னைத தணடிக்கப போறதிலலை."

சுபா. இப்போதும் எதுவும் பேசவிலலை,

நீண்ட நேரமாக நின்றவள் தந்தைக்கு அருகே இருநத பிரம்பு நாற்காலியை இழுத்து விடடு அதில் குந்திக கொண்டாள்.

அவளது அடக்கமான சுபாவம் அவரை நெகிழவைத்தது.

மகளை ஏற இறங்கப் பார்த்தார்,

அவளை சின்னப் பிள்ளையாக தூக்கித்திரிந்த அந்தக்காலங்கள் தொட்டு இன்று அவள் அறிவாலும், உடல் வாகுவாலும் வளர்ந்துவிட்ட வளர்ச்சியை கண்டு உள்ளம் பூரித்து நின்ருர். தன் மகள் தாஞ இவள் என கண்களை கேட்டுக் கொண்டார்.

எவ்வளவு சொகுசாக வளர்ந்துவிட்டாள்.

அவளுக்கு எந்தக் குறையும் ஏற்படக்கூடாது. ஆண்டவனை மனதுக்குள் தியானித்துக் கொண்டார்.

கண்களை ஒருமுறை மூடி விழித்துக்கொண்டவர்...

"என்னம்மா நான் பேசிக் கொண்டே இருக்கிறன். நீ சும்மா இருக்கிருய்!"




தானே சில கேள்விகளைக் கேட்பதன் மூலம் அவளை அளந்துவிடலாம் என்ற முடிவுக்கு வந்தவராய் மகளைப் பார்த்தார்.

"நீ ஒரு பல்கலைக்கழத்தில் படித்திருக்கிருய். எத்தனையோ ஆண்கள், பெண்களுடன் கூடி பழகியிருப்பாய். ஒவ்வொரு இளம் உள்ளங்களுடனும் உங்கள் இன்ப உறவுகளை பரிமாறி இருப்பீர்கள். உங்கள் மனதுகளில் கட்டுக்கடங்காத ஆசைகளையெல்லாம் வளர்த்திருப்பீர்கள்."

தான் மகளுடன் மிகவும் நிதானமாகத்தான் கதைத்துக் கொள்கிறேஞ என்பதை உறுதிப் படுத்த தன் பேச்சை திடீரென நிறுத்தி பேசிய வார்த்தைகளை மனதில் நினைவு படுத்திப் பார்த்தார்.

சரியாகத்தான் நடந்து கொள்வதை திடப்படுத்திக் கொண்டவர் மீண்டும் தன் பேச்சைத் தொடர்ந்தார்.

மலங்க மலங்க விளித்த சுபா தந்தையின் போக்கை அணு அணுவாக அளந்து கொண்டாள்

இந்தளவுக்கு அன்பாகவும், பண்பாகவும் தன்னுடன் நடந்து கொள்ளும் இந்த தந்தைககா தன் உள்ளக் கிடக்கைகளை ஒளித்துவைத்துப் பேசவேண்டும்.

தன் கூடாத எண்ணத்தை காறித்துப்பிக் கொண்டாள். தன் துரோகத்தனத்தைக் கண்டு வெட்கிக்கொண்டாள்.

தானே ஒரு முடிவுக்கு வந்தவளாக தந்தையை நிமிர்ந்து பார்த்து வாயைக் கூப்பி எதையோ சொல்லவந்தாள்.

எங்கேயோ பார்த்து தன் கேள்விகளை அளந்துகொண்டிருந்த தந்தை தன் பேச்சை நிறுத்திக் கொள்ளாததைக் கண்டு வெட்கம் திரையிட முகத்தைக் கூப்பிக் கொண்டாள்.

"சுபா...நான்என்னசொல்ல வாறனெண்டால்... நீங்கள் பல ஆண்களோடு படித்தனீங்கள். மனம் விட்டுப் பழகியிருப்பீர்கள்.

அதை அறியத்தான் நான் இவ்வளவு கேள்விகளையும் கேட்டுக் கொண்டிருக்கிறன்.

அப்படி ஒன்று மனதில் இருக்கா இல்லையா என்று தெரிந்து கொண்டால்தான் எதிர்காலத்தில் நல்ல ஒரு முடிவை நான் உனக்கு தேடித் தரமுடியும். இல்லாதுவிட்டால் அது உனக்கும் கூடாது. எனககும் கூடாது."

அவர் இப்போது மிகவும் வெளிப்படையாகவே கேட்டு விட்டார்.

தான் சரியாகவே நடந்து கொண்ட திருப்தியில் மகளை நேரே பார்த்தார்.

சுபாவும் இப்போது அப்பாவைப்பார்க்கிருள்.

இருவர் கண்களும் ஒரே நேரத்தில் சந்தித்துககொள்ளுகின்றன.

சுபா நேரே பார்க்கும் திறனில்லாது குனிந்துவிட்டாள். அவள் வாயினின்றும் விக்கித்து சொற்கள் பிறப்பதை கேட்டுக் கொள்ளுகிருர்...

"யாழ்ப்பாணத்தில் இணுவில் கிராமம்...அவர்... சுபேந்திரன்.. நாங்கள் ஒன்ருகப் படிக்கும் போது ஏற்பட்ட பழக்கம்.

என்னை நன்ருகவிரும்புகிருர். எனக்கும் அவர்ல நல்ல.. விருப்பம்...

யாழ்ப்பாணம் புகையிரத நிலயத்தில் சிளாக்காக வேலை பார்க்கிருர் அவரது உழைப்பில்தான அவர்கள் குடும்பமே இயங்குது தகப்பன் இல்லை. வயதுவந்த ஒரு அக்காவுககாகத்தான் அவரும் காலம் கடத்தி வருகிருர் அவள் கல்யாணம் முடிந்ததும் எங்கள் கல்யாணததை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிருர் அதனுல்தான் உங்கள் பேச்சையே காலம் கடத்திவருகிறேன்."

சுபா தன்னைப்போல் எதிலும் இறுக்கமானவள் என்பதை அவளது பேச்சுக்கள் மூலம் சிவஞானம் கண்டு உணர்ந்து கொண்டார்.

அவளை இதனின்றும் விடுவிப்பது கடினம் என்பதும் தெரியும்.

இதுவரை வெளிவிருந்தைக்கே எட்டிவராத அன்னை பூங்கோதை மகளும் தகப்பனும் என்னத்தை இதுவரை பேசிக்கொள்கிருர்களோ... என்பதை அறிய வெளியே வந்தாள்.

இவர்கள் சம்பாசனையின் சில வரிகள் இவள் காதிலும் விழுந்திருக்கவேண்டும். நெருப்பில் மிதித்தவள் போல் துள்ளி விழுந்தாள்.

நான் சொன்னுல் நீங்கள் கேட்க மாட்டீர்கள், ஒரு பெண்பிள்ளைக்கு ஏன் இவ்வளவு படிப்பும். அறிவுக்குக் கணக்காய் படிச்சால் போதாதோ. ஆசையாய் படிக்கிருள் எண்டு வீட்டீர்கள். இண்டைக்கு ஒரு மாப்பிள்ளையே பார்த்து வைச்சிருக்கிறதாய் சொல்லுறுள்.

இனி அவ சொல்லுரு வெண்டு சல்யாணத்தையும் செய்துவையுங்கோவன்

நாலூரும் வரும். நல்லது கெட்டதும் வரும். கண்டதும் காதல் கொண்டதும் கோலம் போடுறதுகள் உதுகளையெல்லாம் பார்க்கப்போகுதுகளோ... அல்லது இதுகளைப் பற்றி ஏதும் விளங்கத்தான் போகுதோ சனங்கள் நாளைக்கு நாக்கு வளைச்சுக் கதைக்கேக்க காதைப் பொத்திக்கொண்டு திரியப்போருளவை."

யாழ்ப்பாண வாடை தன்னிடம் இருப்பதை மிக தெளிவாக புருசனிடம் காட்டிவிட்டாள். இவளது அறிவுக்கு எட்டிய முடிவுதான் இது.

சிவஞானம் மனைவியின் சன்னதப்போக்கைக் கண்டு வெகுளவில்லை. மனதுக்குள் சிரித்துக்கொண்டார்.

மனம் கொண்டது தான் மாங்கல்யம் என்பது அவருக்குத்தெரியும்.

அவள் அடங்கிப் போனபின் முழித்து நிற்கும் மகளைப் பார்த்தார். கண்களால் அவளை கிட்டே அழைத்தார்.

"உன் வாழ்க்கையை நீயே அமைத்துக் கொள்கிருய். உனக்கு சரி எனப்பட்டால் நீ 'உன் முடிவுப்படியே நடந்து கொள்ளவேண்டியது தான். இதற்கு குறுக்காக நான் நிற்கப்போறதில்லை. மற்றவர்களை நிறகவிடடபோறவனுமில்லை.

கல்யாணம் உனக்கே அல்லாமல் எனக்கல்ல. அதனுல் தான் உன் முடிவுப்படியே நடக்குப்படி சொல்லுகிறேன்.

வாழவேண்டியவள் நீ... வாழ்ந்து களிக்கப்போகின்றவளும் நீ நாங்கள் இனி பார்வையாளர்களே தவிர பங்காளர்களல்ல...

அதனுல் தான் உன் முடிவு உறுதியானதாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன்.

உன் அம்மா இந்தப்புதிரான உலகத்தை எடைபோடத் தெரியாதவள் அதனுல் தான் அவள் உலகைக் கண்டு பயப்படுகிருள்.

பூங்கோதை தனக்கு பேசுவதற்கு ஒன்றுமில்லை என்று தெரிந்ததும் மீண்டும் குசினிக்குள் புகுந்துவிட்டாள்.

புருசன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் அதில் எந்தத்தவறும் இருகாது என்பது அவளது முடிபு. அவரது முடிவுகள் தீர்க்கமானவை என்பதை அவள் கல்யாணம் செய்த கடந்த முப்பத்தைந்து வருடங்களாக கண்டுவருகிருள்.

இந்த நம்பிக்கை தான் அந்தக்குடும்பம் சிறந்து வாழ உதவிவருகிறது.

மண்வாரி வீசிக்கொண்டிருந்த அந்த பேய்க்காற்று இன்றுதான் சிறிது ஓய்ந்து வீசுகிறது. ஆனுல் வீடுகளில் கொட்டப்பட்ட தூசிகள் இன்னமும் தட்டப்படவில்லை.

சுபா ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது உனது கல்யாணம் இந்த வருடத்துள் நடந்தேயாக வேண்டும். அதற்கு ஏற்ற ஒழுங்கைப் பார்க்கும்படி கடிதம் எழுது. இல்லையென்ருல் உன் அப்பாவின் முடிவுதான் இறுதியானதாக இருக்கும் என்பதை மறந்து விடாதை.

காலங்கள் காத்திருக்கும் என்பதை மட்டும் நம்பி ஏமாந்து விடாதை.

(தொடரும்)

---

ஆசிரியர்: டினேஸ் ஏன் நீ வெபனுேடு சண்டை பிடிக்கும் நாடு எது என்று கேட்க, விடை எழுதாமல் இருக்கிருய்?

டினேஸ்: பயங்கரவாததடைச் சட்டத்தின் கீழ் அந்த நாட்டைப்பற்றி எழுதக் கூடாது என்று நேற்று பேப்பரில பார்த்தனுன் சேர். அதுதான் எழுதவில்லை. ★

நாகராஜா: டேய் ரஞ்சன் நேறறு இரவு நீ படத்துக்குப்போனது யாருக்கும் தெரியுமா?

கிரிதரன்; "அந்த ராத்திரிக்கு சாட்சி இல்லை."

—கா. யோ. கிரிதரன்


வெளிநாடு செல்வதற்கு

★ விமான டிக்கட்

★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை (வங்கியின் கட்டணத்தில்)

★ விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக் கொடுக்கப்படமாட்டாது. இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை.)

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி)

GENERAL SALES AGENTS

த. பெ. எண்: 92 போன்: 24154

# கிளிநொச்சிக் காட்டை 'கலக்கும்' யானைகள்!

## கண்டவர்களையெல்லாம் அடித்துக் கொல்லும் 'கொம்பன் யானை' ஒரு காலத்தில் ஒருவரால் கட்டிவைத்து அன்பாக வளர்க்கப்பட்டது. திடீரென மதம்பிடித்து சங்கிலியை அறுத்துக்கொண்டு காட்டுக்குள் சென்றுவிட்டது

சுமார் பத்து வருடங்களுக்கு முன் கிளிநொச்சி தொகுதியின் பெரும் பகுதி கொடிய மிருகங்கள் வாழும் பயங்கரக்காடாகவே காட்சியளித்தது, கிளிநொச்சி பஸ் டிப்போ சந்தியிலிருந்து பன்னீச்சம் குளம்வரை கண்டிவீதியின் இருபுறமும் அடர்த்தியான காடு. அங்கு குடிமனை என்பது கிடையாது.

அவ்வேளையில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட ஒரு கோஷ்டி கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் நோக்கிச் செல்லும் பாதையில் பதினெட்டாம் போர் ஏற்றத்திற்கும் பழைய முருகண்டி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் கண்டிவீதியின் மேற்கு புறமாக உள்ள காட்டை வெட்டியது.

எனக்கும் சொந்தமாக குடிநிலமோ, வயல்நிலமோ இல்லாததால் நானும் அக்கோஷ்டியுடன் சேர்ந்து காட்டை வெட்டலாம் என்று எண்ணி புறப்பட்டேன் என்னுடன் எனது உறவினர் ஒருவரும் புறப்பட்டு வந்தார்.

எமது கோஷ்டி பழையமுருகண்டிப் பிள்ளையார் கோவிலை வந்தடைந்தது. வீட்டிலிருந்து புறப்படும் போதே எமது நண்பர்கள் சிலர் எம்மை அங்கு போகவேண்டாம் என்றும் அக்காட்டில்யானைகளும், வேங்கை புலிகளும் வாழ்கின்றன. என்றும் அதனுல் நாம் துன்பப்படவேண்டிவரும் என்றும் கூறித்தடுத்தனர்.

அப்போது இருந்த வாலிப மிடுக்கில் அவர்களின் புத்திமதியைக் கேளாது புறப்பட்டேன். எமது நண்பர்கள் எம்மைவிட புத்திசாலிகளும், அனுபவசாலிகளும் என்பது பின்னர்தான் தெரிந்தது அவர்கள் வேட்டை ஆடுவதற்காக இப்பகுதிக்கு பலமுறை வந்திருக்கிறுர்கள்.

எமது கோஷ்டி பழைய முருகண்டியை வந்தடைந்த போது அக்கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு சிறு குடிசை இருந்ததையும், அக்குடிசைக்குள் இருந்து புகைவருவதையும கண்டு ஆச்சரியப்பட்டோம். இந்தக்கொடியகாட்டில் முருகண்டிப்பிள்ளையார் மட்டும் தான் இருப்பார் என்று எண்ணிவந்த எங்களுக்கு அங்கு இரு இளைஞர்கள் இருப்பது பெரும் ஆச்சரியத்தைத் தந்தது.

### பயந்து

### ஓடினர்

எங்களைக் கண்டதும் குடிசையிலிருந்து வெளியே வந்த இரு இளைஞர்களும் பயந்து ஓடத் தொடங்கினர். அவர்களில் ஒருவரின் கையை எட்டிப் பிடித்து ஓடவிடாது தடுத்தார் நண்பர் ஒருவர்.


''ஏன் எம்மைக்கண்டு ஓடுகிறீர்கள்?'' எனக்கேட்டபோது காட்டு இலாகா அதிகாரிகள் வந்துவிட்டதாக எண்ணி ஓடியதாக அவர்களில் ஒருவர் கூறினுர். ''அதிகாரிகளைக் கண்டு நீங்கள் ஏன் ஓட வேண்டும்?'' என்று கேட்ட போது தாங்கள் சட்டவிரோதமாகக்காட்டில் உள்ள முதிரை, பாலை, தேக்கு, யாவறணை போன்ற மரங்களை வெட்டி வியாபாரம் செய்து வருவதாகவும், காட்டிலாகா அதிகாரிகள் தங்களைகண்டால் கைதுசெய்து தங்கள் மீது வழக்கு தாக்கல் செய்வார்கள், என்றும் ஆதலால் அவ்வதிகாரிகளைக்கண்டால் காட்டுக்குள் ஓடி மறைந்துவிடுவதாகவும் கூறினர்.

''நாங்கள் காட்டு இலாகா அதிகாரிகள் அல்ல, அரசாங்கத்தின் அனுமதியுடன் காடு வெட்ட வந்திருப்பதாகக் கூறி அவர்களின் பயத்தைப்போக்கினேம். அன்றிரவு அவர்களின் குடிசையில் சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு அக்குடிசையிலேயே தங்கினேம். இரவு முழுவதும் தூக்கமில்லை. கதைத்துக்கொண்டிருந்தோம்.

இரவு பதினெருமணி இருக்கும் முருகண்டிப்பிள்ளையார் கோவிலின் பின்பக்கமாக யாரோ மரங்களை முறிப்பது போன்ற சத்தம் கேட்டது. தொடர்ந்து ஆள்க்காட்டிக் குருவியின் சத்தமும் கேட்டது. என்னேடு கூடவந்த உறவினருக்கு பயத்தினுல் நடுக்கம் பிடித்துவிட்டது. ''என்ன சத்தம் கேட்கிறது'' என்று கேட்டார் அவர்

### கொம்பன் யானை

அந்த இருவரில் ஒருவர் யானை வருவதாகவும், யானைகள் கூட்டமாக வந்தால் அவற்றிற்கு பயப்படத் தேவையில்லை என்றும், 'கொம்பன் யானை' ஒன்று தனியனாக வரு



மென்றும் அது மதம் பிடித்த யானை என்றும், அந்த யானை இதுவரை பலரை அடித்துக் கொன்றுவிட்டது என்றும் அது வந்தால்தான் பயப்படவேண்டும் என்றும் கூறினுர்.

இந்தக் கதையைக் கேட்டதும் எனது உறவினருக்கு குலைப்பன் காச்சலே பிடித்துவிட்டது! எம்மோடு வந்தவர்கள் வெடிகளைக் கொளுத்தி எறிந்தனர். சிலர் மண்வெட்டியை எடுத்து அடித்துச்சத்தம் எழுப்பினர். குடிசையில் இருந்தவர்கள் கோயில் சங்கை

### கணவன் முன் மனைவியும் பெற்றோர் முன் பிள்ளைகளும் குழந்தைகளும் துடிக்கத் துடிக்க இந்த மதம் கொண்ட யானையால் கொலை செய்யப்பட்டுள்ளனர்

எடுத்து ஊதி சத்தம் வைத்தனர் நான் எனது உறவினரைத் தேற்றிக் கொண்டிருந்தேன்.

எம்மில் ஒருவர் எதற்குமே பயப்படாதவர், தைரியசாலி! அவர் தான் கொண்டுவந்த ஐந்து 'பாட்டறி டோர்ச்' லைட்டை எடுத்துக்கொண்டு குடிசைக்கு வெளியே வந்தார். அவருடன் குடிசையிலிருந்த இருவரும் வெளியே வந்தனர். அவர்களுடன் சேர்ந்து நாங்களும் வெளியே வந்தோம்.

### ஐம்பது யானைகள்

முன்போலவே வெடிகளைக் கொளுத்தி எறிந்தும், மண்வெட்டிகளை அடித்தும், சங்குகளை ஊதியும் சத்தம் எழுப்பினேம். 'டோர்ச் லைட்டை' வைத்திருந்தவர் முருகண்டிப் பிள்ளையார் கோவிலின் பின் பக்கமாகவுள்ள ரயில் தண்டவாளத்தை நோக்கி டோர்ச் லைட்டை அடித்தார். பிள்ளையார் கோவில் பக்கமாக வந்த ஐம்பதுக்கு மேற்பட்ட யானைகள் பயத்தில் திரும்பி வந்த வழியே ஓடத்தொடங்கின. பின் குடிசைக்குள் சென்ற நாம், அன்றிரவை 'சிவராத்திரி'யாகக் கழித்தோம்.

மறுநாள் காலை ஐந்து மணியளவில் தேநீர் தயாரித்துக் குடித்தோம். எம்மில் ஒருவரை சமையல் செய்யச் சொல்லிவிட்டு நாங்கள் எல்லோரும் காட்டுக்குச்சென்று காட்டை வெட்ட ஆரம்பித்தோம். காலை பத்து மணியளவில் எமக்குக் கஞ்சி கிடைத்தது; அதைப் பருகினேம்

மீண்டும்காட்டுக்குள்சென்று மரங்களை வெட்டி விழுத்தினேம். கண்டி வீதியின் மேற்குப் பக்கமாக, ரயில் தண்டவாளத்தின் கிழக்குப்பக்கமாக உள்ள ஐம்பது ஏக்கர் காட்டையே நாம் வெட்டினேம். ஒரேநாளில் பத்துபேரும் சேர்ந்து ஒரு ஏக்கர் காட்டை வெட்டித் துப்பரவாக்கினேம். ஒருஆளுக்கு ஐந்துஏக்கர் வீதம் எமக்கு காடு வழங்கப்பட்டது.

மாலையில் எல்லோரும் குடிசைக்கு வந்து சோறு சாப்பிட்டோம் நித்திரை தூக்கியடித்தது. அக்குடிசையிலிருந்த இருவரும் காலையில் மாங்குளம் சென்றவர்கள் மாலையாகியும் திரும்பி வராததனுல் அவர்கள் வரும்வரை காத்துக் கொண்டிருந்தோம். சுமார் ஏழுமணியளவில் வந்த பஸ் ஒன்றில் அந்த இருவரும் வந்திறங்கினர். அதன் பின்தான் எங்களுக்கு சற்று தைரியம் வந்தது. அவர்களுக்கும் சோறு கொடுத்தோம். அவர்கள் சாப்பிடவில்லை.

இரவில் சோறுசாப்பிட்டால் நித்திரைவருமென்றும், நித்திரை கொண்டால் மதம் கொண்ட 'கொம்பன் யானை' வருவது எமக்குத் தெரியாது போய்விடுமென்றும் அவர்கள் கூறினர்.

கல்வி கற்றுவிட்டு வேலை இல்லாதிருந்த பட்டதாரி ஒருவருக்கும் எம்முடன் காடு கிடைத்தது அவரும் எம்முடன் வந்து காட்டைவெட்டினுர். அவருக்கு அந்த யானையைப்பற்றி அறிய வேண்டும் என்று ஆவல் தோன்றியது அவர் ''ஏன் அந்த யானையை மட்டும் கண்டு பயப்படுகிறீர்கள்?', என்று அந்த இருவரையும் பார்த்துக்கேட்டார்.

### பயங்கரச்

### சரித்திரம்

மதம் கொண்ட கொம்பன் யானைக்குப் பின்னுல் பயங்கர சரித்திரம் ஒன்றே இருக்கிறது என அவர்கள் கூறினர், அதைக் கேட்ட பட்டதாரிக்கு அந்த யானையைப் பற்றிய முழு விபரத்தையும் அறியவேண்டும் என்ற ஆவல் மேலும் தூண்டப் பட்டவராய்க் காணப்பட்டார். பயங்கரக் கதையைக் கூறும்படி கேட்டார்.

''ஒருகாலத்தில் அந்தயானை ஒருவரால் கட்டி அன்பாக வளர்க்கப்பட்டது சிறிது காலத்தின்பின் அந்தயானைக்கு மதம்பிடித்தது. சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த யானைக்கு மதம்பிடித்தபோது சங்கிலியை அறுத்துக்கொண்டு காட்டுக்குள் சென்றுவிட்டது.

''இந்த யானை தென்பகுதியைச் சேர்ந்தது. இந்த யானையின் ஒருகால் பாதம் ஏனைய மூன்று பாதங்களையும் விட சிறியது நீண்ட பெரிய இரு கொம்புகளும் உண்டு. அதன் பின்னங்காலில் இருப்புச்சங்கிலி ஒன்று எந்நேரமும் தொங்கிக் கொண்டே இருக்கும். இந்த யானை ஏனைய யானைகளுடன் சேருவதில்லை. எந்த நேரமும் தனியனுகவே திரியும்.

''வேட்டையாடச்செல்பவர்கள் பலர் இந்த யானையைக் கண்டிருக்கின்றனர். வேட்டைக்குச் சென்ற சிலரை இந்த யானை காலால் மிதித்தும், தும்பிக்கையால் தூக்கி அடித்தும் சாக அடித்திருக்கிறது. தென்பகுதியிலுள்ள காட்டில் வைத்து இந்த யானையைச்சுட பலர் முயற்சி செய்தும் அது அகப்படாமல் தப்பித்து வட பகுதி காட்டை வந்தடைந்தது

''ஒரு காலத்தில் மன்னார்ப் பகுதியில் திரிந்த இந்த யானை அங்கும் பலரைத் தாக்கிச்சாகடித்தது. அங்கும் இந்த யானையைச்சுட்டுக்கொலைசெய்யபலர் முயற்சித்தபோதும் முடியாமல் போய்விட்டது. இந்த யானை

[10ம் பக்கம் பார்க்க]

ரி. எஸ். ரி.

நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

✯ தாமதம் ✯ வீண் செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ். நகரிலேயே உங்கள் பயணச் சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world at Unbeatable Rates

த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 23680

## தொடர் நவீன சித்திரம்

மன்னாரிலிருந்து பூநகரிக்குச் செல்லும் கரையோரப் பாதை அடர்ந்த காட்டின் ஊடாக, பாம்பு வளைவாக சதுப்பு நிலங்களையும் நீர்த் தேக்கங்களையும் விலக்கி அமைந்திருந்தது. இப்பாதையில் காட்டாறுகள் குறுக்கிட்டன. வறட்சிப்பருவமாதலால் அவற்றில் பல நீரின்றி வறண்டும், சில நீரின்றி மெலிந்தும், முற்றாக நீரிழந்து மணல் படுக்கைகளாகவும் கிடந்தன.

காட்டுப்பாதையில் மிருகங்கள் நன்றிருப்பதற்கான அடையாளங்கள் தெரிந்தன. யானைகளின் லத்திக் கும்பங்கள் சூடு ஆறாமல் அடிக்கடி எதிர்ப்பட்டன. வெயில் கடுமையாக எறித்தாலும் காட்டுமரங்களின் குளிர் நிழல் காட்டுப் பாதையில் கவிந்து கிடந்தது.

பாதையை அடுத்துக் குடியிருப்புகளைக் காணமுடியவில்லை. பாதையிலிருந்து பிரிந்து செல்லும் சிறிய மணல் தடங்கள், குளங்களில் சென்று நின்றன அவ்விடங்களில் சிறிய கிராமங்கள் அமைந்திருந்தன அக்கிராமங்களில் ஓலைக்குடிசைகளில் அமைதியான விவசாய மக்கள் வாழ்ந்தனர்

அடர்கானத்தின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த சிறிய நீர்ப்பாசனக்குளங்களையும் அவற்றினை அடுத்துப் பரவிக்கிடந்த வயல்களையும் நம்பி அவர்கள் வாழ்ந்தனர்.

இக்காட்டுப்பாதையில் ஒல்லாந்தப் போர் வீரர்கள் யாழ்ப்பாணப் பட்டினத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள். முதல் சென்ற அணிக்குப் பணிக்கன் நாராயணன் வழிகாட்டிச் சென்றான். கடைசியாக கொமாண்டர் வன்கோயனின் தலைமையில் வந்து கொண்டிருந்த அணிக்கு திசைவீரசிங்கம் வழிகாட்டி வந்தான். இரண்டாம் நாள் அவர்கள்பல்லவராயன்கட்டை அடைந்தார்கள். இடையறாது நடந்ததால் வீரர்கள் பலரின் பாதங்களில் காயங்கள் ஏற்பட்டன மேடு பள்ளங்களில் அக்காட்டுப்பாதைஏறியிறங்கியது. பீரங்கிகளையும் பொருட்களையும் காவி வந்த வண்டில்கள் கடகடத்தன.

பீரங்கிகளைத் திசைவீரசிங்கன் கண்டிருக்கிறான். ஆனால் மூன்று வண்டிகளில் ஏற்றி வரும் பொறிகளை அவன் கண்டிருக்கவில்லை. அப்பொறிகள் பாரியனவாகவும் விசித்திரமானவையாகவும் இருந்தன.

திசைவீரசிங்கன் அவை என்ன என்று வன் கோயனைக் கேட்கப் பலதடவைகள் முயன்றும் தயக்கம் அவனைக் கேட்கவிடவில்லை. ஆனால் வன்கோயன் அவன் அப்பொறிகளைப் பார்ப்பதும் பின்னர் எதையோ கேட்க விரும்புவனாகத் தன்னைப்பார்ப்பதையும் கண்டு அவன் மனக்கிடக்கையைப் புரிந்து கொண்டான்.

''முதலியார்... இது எறிபொறி... இவற்றில் பெரிய கற்களை வைத்து இலக்குகளை நோக்கி வீசிவிட முடியும். பாதுகாப்பான கோட்டைக்குள் இருக்கும் கட்டிடங்களையும் வீரர்களையும் இந்த எறிபொறிகளிலிருந்து வீசுகின்ற பாரிய கற்கள் மூலம் அழித்துவிட முடியும். தீப்பந்தங்களையும் இவற்றிலிருந்து வீசலாம்.''

''எவ்வளவு தூரம் செல்லும்.''

''உங்கள் கணக்கில் செல்வதானால் அரைக்கட்டை தூரம்... இத்தகைய பொறிகள் போர்த்துக்கீசரிடம் இல்லை யாழ்ப்பாணப் பட்டினக்கோட்டையைத் தாக்குவதற்கு இப்பொறிகள் உதவும் கோட்டைக்குள் இருக்கும் போர்த்துக்கீசரைக் கலக்கியடிக்கப் போகிற எறிபொறிகள் இவைதான்.'' என வன் கோயன் பெரிதாகச் சிரித்தான்.

பல்லவராயன்கட்டில் அவர்கள் ஒரு புதிய செய்தியை அறிய நேர்ந்தது. அச்செய்தி ஒல்லாந்த வீரர்களுக்கு ஓரளவு கலக்கத்தைக் கொடுத்தது பல்லவராயன்கட்டு உடையார் திசைவீரசிங்கனை எதிர்கொண்டார்.

''சிலநாட்களுக்கு முன்னர் இவ்வழியால் போர்த்துக்கீசப் படையொன்று யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றது அதில் சிலர் காயமடைந்திருந்தனர். அவர்கள் இங்கு தங்கி உணவெடுத்துவிட்டுச் சென்றனர்'' என்ற செய்தியை உடையார் திசைவீரசிங்கனிடம் கூறினார்.

போர்வீரர்களுக்குரிய உணவுப்பண்டங்கள் பெரும்பாலும் கிராமத்தவர்களாலேயே வழங்கப்பட்டுவந்தன போர்வீரர்கள் ஓரிடத்திலிருந்து மறுவிடத்திற்குச் செல்லும்போது தங்குவதற்குரிய வசதிகளைக் கிராமத்தலைவர்களே செய்து கொடுக்க வேண்டி இருந்தது. மேலும் போர்வீரர்களின் பாதுகாப்பில் கிராமத்தலைவர்கள் அதிக கவனம் எடுக்கவும் நேர்ந்தது. ஏனெனில் ஒரு போர்வீரனின் உயிர் இழக்கப்படுமாயின். முழுக்கிராமத்தின் அழிவிற்கும் அது காரணமாக அமைந்துவிடும்.

''அவர்கள் போர்த்துக்கீசர் என்பது நன்றாகத் தெரியுமா?'' என்று திசைவீரசிங்கன் கேட்டான்.

''தெரியும்...''

வன்கோயன் முகத்தில் சிந்தனை ரேகைகள் படர்ந்தன. அவனுடைய பூனைக்கண்கள் ஆத்திரத்தில் ஒடுங்கிச் சுருங்கின. சிவந்த முகம் குங்குமச் சிவப்பாக மாறியது மௌனமாகச் சற்று நேரம்இருந்தான்.

நடந்தவற்றை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. மன்னார்க்கோட்டையை அவர்கள் தாக்கிக் கைப்பற்றிய போது, போர்த்துக்கேச வீரர்களில் ஒருபகுதியினர் தப்பி ஓடியிருக்கிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணப் பட்டினத்திலிருக்கும் கோட்டையைப் பலப்படுத்த விரைந்து செல்கிறார்கள்.

வன்கோயன் மெதுவாகத் தன் பழைய நிலைக்குத் திரும்பினான். அவனதுபெரும் படைமுன், போர்த்துக்கீசரால் எதுவும் செய்ய முடியாது அவர்கள் தொடர்ந்து தோல்வியையே தழுவி வருகின்றார்கள். கொழும்பு, நீர்கொழும்பு. மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய கரையோரங்கள் யாவும் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டுவிட்டன பத்து நாட்களின் முன் மன்னாரும் அவர்கள் வசமாகிவிட்டது. இன்னமும் எஞ்சிருப்பது யாழ்ப்பாணப்பட்டினம் தான்.

'அவர்கள் பயந்து தங்கள் உயிரைக் காப்பாற்ற ஓடிக்கொண்டிருக்கிறார்கள். துரை அவர்களே, பயப்பட எதுவுமில்லை..'' என்றான் திசைவீரசிங்கன்.

உண்மைதான். மன்னார்க் கோட்டையில் இருந்த போர்த்துக்கீசப் போர்வீரர்கள் ஒரு பகுதியினர் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யாழ்ப்பாணம் நோக்கிக் காட்டுப்பாதையில் விரைந்து கொண்டிருந்தார்கள். மன்னாரில் போரிட்டு இறந்தவர்களில் கூலிப்படையினரே அதிகமானவராவர். அவர்கள் தங்களின் புறமுதுகிடலிற்கு ஒரு மனத்திருப்தியான அர்த்தத்தைக் கற்பித்துக் கொண்டனர் யாழ்ப்பாணப் பட்டினக்கோட்டையைப் பலப்படுத்த அவர்கள் விரைந்து செல்வதாகக் கூறிக்கொண்டனர். அவர்களின் முகங்களில் பயப்பிராந்தி அப்பிகிடந்தது பசி, களைப்பு, விரக்தி என்பனவும் போரில் ஏற்பட்ட சிறுகாயங்களின் வலியும் அவர்களை வருத்த அவர்கள் பூநகரி, நாகதேவன் துறையை அடைந்தனர் நடந்து வந்த களைப்பு. அவர்

7

களில் பலர் அப்படியே நாக தேவன்துறை மண்டபத்தில் பொத்தெனச் சரிந்துகொண்டனர்

அவர்களில் ஒருவன் மட்டும் கலங்காது ஒரு தூணில்சாய்ந்து அமர்ந்திருந்தான். தனது திரித்துப்பாக்கியையும் அரையில் தொங்கிய வாளையும் அருகில் வைத்து விட்டு, தான் சுமந்து வந்த பையொன்றிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து விரித்தான். அதில் பல பக்கங்கள் எழுதப்பட்டிருந்தன பல பக்கங்கள் எழுதப்படாதிருந்தன. பென் சில ஒன்றால் எழுதப்படாத பக்கங்களில் எழுதத்தொடங்கினான்.

அவன் தான் இலங்கையில் போர்த்துக்கீசரின் ஆட்சி வரலாற்றைப் பல ஆண்டுகளுக்குப்பின்னர் எழுதப்போகின்ற றிபேறியோ ஆவான். இலங்கைக்கு அவன் தனது பதினெட்டாவது வயதில் 1640 ஆம் ஆண்டு சாதாரண போர் வீரனாக வந்தான் இலங்கையில் நடந்த யுத்தங்கள் பலவற்றிலும் அவன் பங்கு கொண்டான். 1656 ஆம் ஆண்டு கொழும்பை ஒல்லாந்தர் கைப்பற்றியபோது. நாகபட்டினத்திற்குத் தப்பியோடிய போர்த்துக்கீச வீரர்களில் றிபேறியோவும் ஒருவன். பின்னர் நாகபட்டினத்திலிருந்து மன்னார்க்கோட்டைக்கு அனுப்பப்பட்டான். இப்போது அங்கிருந்து யாழ்ப்பாணக் கோட்டைக்குத் தப்பியோடிக் கொண்டிருப்பவர்களில் ஒருவனாக இருக்கிறான்.

அவன் சாகவிரும்பவில்லை. அவனுக்குத் தன் படைத்தலைவர்கள் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது இன்று ஒல்லாந்தரிடம் தோற்று உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் ஓட நேர்ந்தது படைத்தலைவர்களினால் தான்.

''றிபேறியோ. என்ன மீண்டும் எழுதத் தொடங்கிவிட்டாயா?' என்று கேட்டபடி அவன் நண்பன கப்ரின் மேயர் அறன்கா அவன் அருகில் வந்து அமர்ந்தான். அறன்காவும் றிபேறியோவும் இரா




## பாவங்களின் சுமை

ணுவத்தரத்தில் ஒரு வகுப்பினர். ஆனால் அறங்காவின் பிறப்பு நிலை அவனை உயர் வகுப்பினனாகக் கருத வைத்து விட்டது. அதனால் அறன்கா கப்ரின் மேயராகவும் றிபேறியோ சாதாரண வீரனாகவும் இருக்க வைத்து விட்டன.

''ஆம்... உங்களையெல்லாம் சாகாமல் வைத்திருக்க எழுதுகின்றேன்...'' என்றான் றிபேறியோ, அவன் கூறிய அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாது அறன்கா பெரிதாகச் சிரித்தான்.

''ஒல்லாந்தப்படை எங்களைத் துரத்தி வருகிறது, றிபேறியோ?...''

''தெரியும்... அதனால் நடக்கப்போவதும் தெரியும்... நண்பா, போர்த்துக்கீசரின் கீழைத்தேச் சாம்ராச்சியம் சீர்குலைந்து வருவதற்கு என்ன காரணம் தெரியுமா?' என்று றிபேறியோ கேட்டான்,

''சொல்லு றிபேறியோ?...''

''நாம் ஒரு நாட்டையாவது முற்றாகக் கைப்பற்றி எங்கள் ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்டியிருக்கவேண்டும். இலங்கையை மட்டும் கைப்பற்றி அங்கு ஆதிக்கத்தை நிலைநாட்டுவதைவிட்டுவிட்டு இந்தியாவையும் கைப்பற்ற பேராசைப்பட்டோம்...''

''சரி... சொல்லு... இன்னமும் காரணம் உண்டா?...''

''இருக்கிறது... 700 போர்த்துக்கீசப்போர் வீரர்களை வைத்துக்கொண்டு இலங்கையை ஆள முடியும் என நாம் எண்ணியது எவ்வளவு பெரிய தவறு...?''

''நீ என்ன சொல்கிறாய்? நமது வீரர்கள் 700 பேரா? கூலிப்படையினர் 15000 பேரை மறந்துவிட்டாயே?...''

''அவர்கள் கூலிப்படையினர். எமது சாம்பிராச்சியத்தைக் காப்பாற்ற அவர்கள் ஆத்மார்த்தமாக ஈடுபடுவார்கள்என நினைக்கிறாயா?..''

அறன்கா மௌனமாக இருந்தான், றிபேறியோ தொடர்ந்தான்.

''நண்பனே, போர்த்துக்கீசரின் கீழைத்தேய சாம்ராஜ்சியம் வீழ்ச்சியடைந்து வருவதற்கு எதிரிகளின் பலத்தை விட நாங்கள் செய்த பாவங்களே காரணம்...''

அறன்கா வியப்புடன் தோழனைப்பார்த்தான். றிபேறியோ எதுவித சலனமுமின்றி அறன்காவை நிமிர்ந்து பார்த்தான்.

''இதையெல்லாம் உன் புத்தகத்தில் எழுதப்போகிறாயா?...''

''நான் எழுதாவிட்டாலும் யாராவது எழுதத்தான் போகிறார்கள் வரலாறுகள் எழுதப்படாது போவதில்லை. எங்கள் போர் வீரர்களிடம் ஒழுக்கம் இருக்கவில்லை லிஸ்பன் சிறைச்சாலைகளில் கைதிகளாக இருந்தவர்களை நீங்கள் வீரர்களாக்கி இங்குகொண்டு வந்தீர்கள். அவர்களிடம் ஒழுக்கம், கட்டுப்பாடு எப்படி இருக்கும்? அவர்கள் தங்கள் பரம்பரை எச்சங்களை எங்கும் விதைத்திருக்கிறார்கள்...''

''பெண்கள் விசயத்தில் யாருக்குத்தான் சலனமில்லை, சபலமில்லை. ஆயிரக்கணக்கான லீக்குகள் கடந்து இங்கு தனிமையில் யுத்தங்களில் ஈடுபட்டிருக்கும் போர் வீரர்களை எப்படி அவ்விடயத்தில் தடுப்பது. கிராமங்கள் கைப்பற்றப் பட்டபோது அவர்களின் விழிகள் வெறியோடு பெண்களைத் தேடின... பின்னர் பொருளைத் தேடின...''

''ஆம்... நீங்கள் இங்கு கொள்ளையிட்டீர்களே தவிர, அவர் கைப்பற்றிய பின்னர் போர்த்துக்கீச சாம்ராச்சியத்தின் பிரஜைகள் என்பதை மறந்து விட்டீர்கள்?'' என்றான் றிபேறியோ கோபத்துடன். ''நாங்கள் இலங்கையில் செய்த கொடூரங்கள் கொஞ்சமல்ல...''

''சரி... கேட்கிறேன்... சொல்...''

''மக்களின் விருப்பு வெறுப்புக்களைக் கவனியாது மதத்

(10ம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கை

சிறிய தங்கையை
நித்திரையாக்கிய
பிறகு,
சாப்பாட்டிற்குப் பின்-
நாங்கள் 9 மணி வரை
படிக்காத
அபூர்வமாக நிகழும் ஒரு
நாளில்
எங்களுக்குத் தாயார்
சொல்லுவாள்...

இரண்டாம்
உலகப் போரின் அழிவுகள்
பற்றியும்
ஜப்பான் காரன்
இலங்கையில் போட்ட
குண்டுகள் பற்றியும்!

வாய் பிளந்திருப்போம்!

தாயாரின் பின்னால்
மருந்துப் போத்தல்களைத்
தூக்கிக் கொண்டு
ஆஸ்பத்திரிக்கு
நடந்து போகும் பாதையில்
குண்டு விழுந்து குழியான
இடத்தைத்
தாயார் காட்டுவாள்!
ஆச்சரியமாய் இருக்கும்
அட. இப்படியா
மக்கள் இறந்தார்கள்
என்று!

கொஞ்சக் காலம்
அவ்விடத்தால் போகையில்
அதைப் பார்ப்பேன்...

பின்னர் பார்ப்பதேயில்லை -
பெற்றோல் முழுகித்
பெருந்தீக்குளித்த
ஜூலையின் பிறகு..
பெண்களும் குழந்தைகளும்
படுகொலையான
ஷடிலா, ஷப்ரு
முகாம்களைப்பற்றி
அறிந்த பிறகு!
என் மகனுக்கு நான்சொல்ல
முடியாது
இரண்டாம் உலகப்
போரைப்பற்றியும்
ஜப்பான் குண்டு போட்டது
பற்றியும்!
அவனுக்கு அதில்
அக்கறை பிறக்காது!
ஜூலைகள் பற்றியும்
ஷடிலா, ஷப்ரு கொலைகள்
பற்றியும்
அவனுக்குச் சொல்லலாம்!
அவனுடைய குழந்தைக்கும்
குழந்தை தன்
குழந்தைக்கும்
சொல்லுமளவு
அதில்
ஆச்சரியம் இருக்கும்!

★ ஒட்டமாவடி
அஷ்ரஃப்

# கிளிநொச்சிக் காட்டை கலக்கும் யானைகள்!

(8ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரிலிருந்து பூநகரிக்கும், பூநகரியிலிருந்து கிளிநொச்சிக்கும், கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவுக்குமாக மாறி மாறித் திரிந்தது

''மன்னாரிலிருந்து பூநகரி வரையுள்ள அடர்ந்த காடுகள் ஊடாக கிளிநொச்சிக்கு வரும் இந்த யானை, கிளிநொச்சியிலுள்ள அடர்ந்த காடுகளூடாக முல்லைத்தீவுக்குச் செல்லும். இந்த யானை போகும் வழியில் உள்ள வயல்களை அழித்து கமக்காரர்களுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தவும் தவறுவதில்லை. இந்த யானையின் கண்ணில் பட்ட பலர் இதனால் அடித்து கொல்லப்பட்டனர்.

''இந்த யானையைச் சுட்டுக் கொலை செய்வதற்காக அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட குழு ஒன்று கிளிநொச்சியில் சிலகாலம்வரை தங்கியிருந்து, காடுகளில் தேடுதல் வேட்டை நடத்தி அகப்பட்ட ஒரு யானையைச் சுட்டுக்கொன்று விட்டுச் சென்றது.

அந்தயானை கொல்லப்பட்டு விட்டதாகஅறிவிக்கப்பட்டது. மக்கள் பீதி இன்றி உலாவத் தொடங்கினர். அப்போது எங்கோ இருந்து மீண்டும் அந்தயானை வந்தது. மீண்டும் பலர் அந்தயானையால் அடித்துக் கொல்லப்பட்டபோதுதான் முன்பு சுடப்பட்டயானை இதுவல்ல வேறு ஒன்று என மக்கள் அறிந்து கொண்டு ஒதுங்கி வாழத் தொடங்கினர். ஆதலால் நாமும் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். இரவில் எம்மைமறந்து நாம் நித்திரை செய்வோமேயானல் நாமும் அந்தயானையினல் தாக்கப்பட்டு மரணமாவோம்''

இவ்வாறுகுடிசையில் இருந்த ஒருவர் கதையைக் கூறிமுடித்தார். அதன்பின் ஒருவர்மாறி ஒருவராக நித்திரை கொண்டோம்

யாழ்ப்பாணம்

சென்றனர்

இக்கதையை கேட்ட பட்டதாரியும், எனது உறவினரும் தமக்குக் 'காடு வேண்டாம்' எனக் கூறி மறுநாளே யாழ்ப்பாணம் சென்று விட்டனர். நாங்கள் தொடர்ந்து காட்டை வெட்டினேம். பல முறை எமக்கு அந்த யானையினலும், ஏனைய யானைகளினலும் பல இடைஞ்சல்கள் ஏறபட்டன. உயிர் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை.

பல சிரமத்தின் மத்தியில் ஐம்பது ஏக்கர்காடு வெட்டப்பட்டு நெருப்பு வைக்கப்பட்டது. கடைசிவரை அந்த இருவரும் எமக்கு உதவியாகஇருந்தனர். மாரிகாலம் வந்ததும் நெல்லை விதைத்தோம். அந்த இருவரையும் காவலுக்கு வைத்தோம். எவ்வளவு காவல்வைத்தும் ஒரு நெல்லுக்கூட எமக்கு கிடைக்கவில்லை. முழுவதையும் யானை அழித்துவிடடது.

அடுத்த மாரி வந்தது. மீண்டும் நெல்லை விதைத்தோம். அவர்கள் இருவரையும் காவலுக்கு வைத்தோம். ஒரு நாள் இரவு குடிசைக்கு வந்த அந்த 'கொம்பன்யானை' குடிசையைப்பிடிங்கி உள்ளே சென்று அங்கு காவலுக்கு இருந்த இருவரில் ஒருவரைத் தாக்கி கொலை செய்துவிட்டது. மற்றவர் பலத்த காயங்களுடன் கிடந்தபோது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த லொறி ஒன்று நிறுத்தப்பட்டு அதன் சாரதி இறங்கி பிள்ளையாருக்கு கற்பூரம் கொளுத்தி, தேங்காயும் அடித்து விட்டு லொறியில் ஏறப்போனர்.

அப்போது ஒருவரின் ஈனக்குரல் கேட்டு அவ்விடத்திற்குச் சென்ற சாரதி ஒருவர் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடப்பதையும், மற்றவர் குற்றுயிராக இருப்பதையும், கண்டு குற்றுயிராக இருப்பவரைத்தூக்கி லொறியில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குகொண்டு சென்றபோது அங்கு மரணமானர்.

மறுநாள் காலை எமக்கு செய்திஎட்டியது அங்குசென்று நிலைமையை அவதானித்து விட்டு எமது உயிர்தப்பினல் போதும் என நினைத்து யாழ்ப்பாணத்திற்கு வந்து விட்டோம். இப்போது நாம் வெட்டித்திருத்திய இடம் மீண்டும் காடாகக் காட்சியளிக்கிறது

நாங்கள் தான் அந்த இடத்தை விட்டு ஒதுங்கினேமே தவிர அந்த யானை ஒதுங்கியதாக இல்லை. மேலும் மோசமாகப் பலரைத் தாக்கி வருகிறது. அண்மையில் பாரதிபுரத்தில் மட்டும் ஏழுபேரை இந்த யானை கொலைசெய்திருக்கிறது. பட்டப்பகலில் பெற்றோருடன் சென்ற இளம்பெண் ஒருவரை கூட இந்தயானை பெற்றோரின் முன்னிலையில் அடித்துகொலை செய்துள்ளது. பல குடிசைகளையும், தோட்டங்களையும், வயல்களையும் கூட அழித்துவருகிறது. இதுவரை ஐம்பதுக்கு மேற்படடவர்களை இந்தயானை கொலை செய்திருக்கிறது.

கோரக் கொலைகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் பலர் மதம் கொண்ட யானை ஒன்றினல் அடித்துக் கொல்லப்பட்டு வருகின்றனர். இதுவரை நூற்றுக்கணக்கான குடும்பஸ்தர்களும், இளைஞர்களும், யுவதிகளும், குழந்தைகளும். தள்ளாதவயதுடைய வயோதிபர்களும், நிறைமாசக் கர்ப்பிணியும் இந்த யானைக்குப் பலியாகியுள்ளனர்!

கணவன் முன்னிலையில் மனைவியும், பெற்றோர் முன்னிலையில் குழந்தைகளும், இளைஞர்களும்கூட துடிக்கத்துடிக்க இந்த மதம்கொண்ட யானையால் கொல்லப்பட்டிருக்கிறார்கள்

இந்த யானையினலும் ஏனைய யானைக்கூட்டங்களினலும்கூட மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் படுத்த காயங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் பயிர்களும். குடிசைகளும்கூட யானைகளினல் சேதமாக்கப்பட்டுள்ளது

ஆனையிறவிலிருந்து

மாங்குளம் வரை

முன் ஒரு காலத்தில் ஆனையிறவில் இருந்து மாங்குளம் வரை ஊர்மனை எதுவும் இன்றி பயங்கர காடாகக் காட்சி அளித்தது. இக்காட்டுப் பிரதேசத்தில் கொடியன விலங்குகள் மட்டும் வசித்து வந்தன. பிற்காலத்தில் இக்காடு அழிக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டனர். மான், மரை, பன்றி போன்ற மிருகங்களை மக்கள் வேட்டையாடி உண்ண இக்காட்டில் யானைகளும்.குரங்குகளும் மட்டுமே மிஞ்சின.

முன்பு இப்பகுதி அடர்ந்த பயங்கரக் காடாக இருந்த காலத்தில் இக்காட்டில் வசித்து வந்த யானைகள் தமக்கு வேண்டிய உணவுகளையும் நீரையும் காட்டுக்குள்ளேயே பெறக்கூடியதாக இருந்தது.

காடுகள் அழிக்கப்பட்டு குளங்கள் திருத்தப்பட்டு அங்கு மக்கள் குடியேற்றப்பட்டதால் காடுகளில் வசித்து வந்த யானைகளுக்கு இருப்பிட வசதியோ, உண்ண உணவோ. குடிக்க நீரோ இல்லாமல் அவை மக்கள் குடியேறிய இடங்களை நோக்கி நகரத் தொடங்கின.

இந்த யானைகள், மக்களால் உண்டு பண்ணப்பட்ட வான் பயிர்களையும், நெல்வயல்களையும் அழித்து தமக்கு உணவாக்கிக்கொண்டன. இந்த யானைகளுடன் மக்கள் போராட வேண்டிய நிலை உருவாயிற்று.

இந்தப் போராட்டத்தில் பயிர்களும், குடிசைகளும் சேதமாகின. பலர் உயிர் துறந்தனர். யானைகளும் இறந்தன. சில யானைகள் துப்பாக்கியால் சுடப்பட்டு படுகாயங்களுடன் உயிர் தப்பின. உயிர் தப்பிய யானைகள் தம்மைச் சுட்டுப் படுகாயப்படுத்தியவர்களை பழிவாங்கின.

மனிதரைப் பழிவாங்கிய யானைகளில் பலபிற்காலத்தில் மதம்கொண்ட யானைகளாக மாறிபலரை அடித்துக் கொலை செய்தன. இப்படியான யானைகளைக்கண்டு மக்கள் திகில் கொள்ளத் தொடங்கினர்.

யானைகள் வாழ்ந்த பிரதேசத்தில் மக்கள் குடியேற்றப்பட்டதாலும், யானைகளுக்கு வாழ காடு இல்லாமல் அழிக்கப்பட்டதனலுமே இந்த நிலை ஏற்பட்டது.

அண்மையில் வட்டக்கச்சியில் தன்னந் தனியனக நின்று மக்களை அடித்துக் கொலை செய்தும், படுகாயப்படுத்தியும், குடிசைகளை அழித்தும் வந்த மதயானை ஒன்றை துரத்திச்சென்ற பாடசாலை மாணவர்கள் சிலரும், கிராமவாசிகள் சிலரும் அந்த யானையினல் தாக்கப்பட்டு அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இதற்கு முன்பும் இந்த யானைக்கு பாரதிபுரம் மக்கள் அசிற் ஊத்தி படுகாயப்படுத்தியுள்ளனர்.

இந்த யானைகளினல் தாக்கப்பட்டு மரணமானவர்களின் குடும்பங்களுக்கு சமூக சேவைப்பகுதி, செஞ்சுலுவை சங்கம், கிளிநொச்சி பரந்தன் றோட்டறி சழகம் ஆகியன உதவிகளை வழங்கியுள்ளன இவற்றின் உதவிகளினல் இறந்தவர்கள் மீண்டும்உயிர்த்தெழப்போவதில்லை. உயிரோடு இருப்பவர்களைக்கூட இவர்களால் தொடர்ந்தும் யானைகளிடமிருந்து காப்பாற்ற முடியாது. இவர்கள் செய்கின்ற உதவிகள் உயிரோடு இருக்கும் ஒருசிலருக்கு சில நாட்கள் வயிறு நிறைய உண்ண மட்டும் தான் உதவும். இது யானையினல் பாதிக்கப்படும் மக்களுக்கு பரிகாரமாகாது யானைகளிடமிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும்

கிளிநொச்சி அரசாங்க அதிபர் என். ஜெயநாதன் மதம் கொண்ட யானையை சுட்டுக் கொல்ல சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு பணித்துள்ளார். இந்த அதிகாரிகள் குழுவொன்று அனுராதபுரத்திலிருந்து வருவார்கள். இவர்கள் மதம் கொண்ட யானையை சுட்டுக் கொல்லுவார்கள் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மதம் கொண்ட யானையை சுட்டு கொல்லுவதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. ஒரு மதம் கொண்ட யானையைக் கொன்றால் வேறு ஒரு யானைக்கு ஏன் மதம் பிடிக்க மாட்டாது? மதம் பிடித்த யானை ஏன் மீண்டும் மக்களை கொல்லமாட்டாது?

கிளிநொச்சி பகுதியில் யானைகள் வாழவோ அவை தமக்கு வேண்டிய உணவை பெற்றுக் கொள்ளக்கூடியதாகவோ இப்போது இங்கு காடுகள் இல்லை. ஆதலால் மதம் கொண்ட யானையை சுட்டுக் கொல்லுவதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. இந்த யானையை சுட்டுக்கொல்வதுடன் இப்பகுதியில் வாழுகின்ற ஏனைய யானைகளை இக் காடுகளில் இருந்து துரத்திச் சென்று வெகுதூரத்துக்கு அப்பால் உள்ள பெரும் காடுகளில் விடவேண்டும் இதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். அல்லாவிட்டால் இதுவரை யானைகளினல் கொல்லப்பட்டவர்களை விட கூடுதலானவர்கள் தொடர்ந்தும் யானைகளினல் கொல்லப்படுவார்கள்.

## கடல்கோட்டை

9ம் பக்கத் தொடர்ச்சி)

துவேசம் கொண்டு மக்களைத் துன்புறுத்தினேம் நாங்கள் மேற்கொண்ட தண்டனைகளினல் மக்களின் வெறுப்பிற்கு உள்ளாகினேம்...''

''றிபேறியா. உனக்கு எதுவும் சரிவரப்புரியவில்லை. நீ யுத்தத்திற்கு லாயக்கற்றவன். தண்டனை சித்திரவதை என்பன போர்முனையில் சகசமானவை''

றிபேறியோ நண்பனைக் கவலையோடு பார்த்தான்.

''அதற்கும் ஒரு தர்மம் இருக்கிறது... கண்டி யுத்தத்தில் நாங்கள் எப்படி நடந்து கொண்டோம்? ஈட்டிமுனையில் குழந்தைகளை எறிந்து ஏந்தி நமது வீரர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்களே? ஆண்களை இருகரங்களையும் கால்களையும் கட்டி, மல்வானைப்பாலத்திலிருந்து சுழித்து ஒடும் ஆற்றில் தள்ளிக்கொன்றார்களே? தாய்மார்களைக் கொண்டு அவர்கள் பிள்ளைகளை உரலில் இட்டு இடிடபித்தீர்களே? பெண்களை சிரச்சேதம் செய்வித்தீர்களே? இந்தக் கொடுமைகளை எப்படிச்சொல்வது, நண்பா?''

''சரி நீ சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். சிங்களவர்கள் தாம் கைப்பற்றிய போர்த்துக்கீச வீரர்களின் காதுகளை, மூக்குகளை அரிந்து அனுப்பினர்களே அதை என்ன சொல்கிறாய்?''

றிபேறியோ எதையோ சொல்ல வாய்திறந்தான். அவ்வேளை ஒருவீரன் வேகமாக ஓடிவந்தான்.

நான்கு லீக்குகளுக்கு அப்பால் ஒல்லாந்தப்படை வந்து கொண்டிருக்கிற செய்தியை அவன் தெரிவித்தான் படைவீரர்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. அவர்கள் எழுந்து மறுகரைக்குப் போவதற்கான ஏற்பாடுகளில் வேகமாக ஈடுபட்டனர்.

ஆதாரம்: 1 Rigbeiro's History of Ceilao, (Translated from Portuguese)
2: ஐரோப்பியர் பார்வையில் இலங்கை, நா. மயில்வாகனம்.

(தொடரும்)

நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!

இவை உங்கள் முதலீட்டிற்கு உத்தரவாதம்

நிலையான வைப்பிற்கு யாழ். நகரில் அதிஉயர் வட்டி 30% வழங்கும் ஒரே நிறுவனம்·

SHABRA

துரிதமாகவும், துலக்கமாகவும் பிரதிகள் செய்யவும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உடனுக்குடன் தட்டச்சு செய்யவும் நாடவேண்டிய இடம் ''ஷப்ரு''

61, நியூ புலர்ஸ் வீதி
கொழும்பு - 4-
தொ. பேசி. இல: 589310

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல: 22073



# 'மியூனிச்படுகொலை' ஒலிம்பிக் விளையாட்டு

## வரலாற்றில் கறைபடிந்த கொடூர சம்பவம்!

- அனந்த்

மேற்கு ஜேர்மனியில், மியூனிச் நகரில் 1972ம் ஆண்டு ஆகஸ்டு 26ந் திகதியிலிருந்து செப்டெம்பர் 10ம் திகதி வரையிலான இரு கிழமைக் காலத்தில் 20 ஒலிம்பிக்போட்டிகள் நடைபெற்றன.

1939 - 45க்கால யுத்தத்தில் அழிக்கப்பட்ட நகரில் மலைகள் சூழ்ந்த பழைய விமானத்திடல் ஒன்றில்தான் பிரதான அரங்கம் அமைக்கப்பட்டது. புத்துணர்ச்சி பெற்ற ஜேர்மனியை உலகிற்கு காட்ட வேண்டுமென்ற பேராவலில் ஜேர்மானியர்கள் எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகத்தான் செய்தார்கள்

ஆனால் 'மியூனிச்படுகொலை' ஒலிம்பிக் வரலாற்றிலேயே கறை படிந்ததாகி விட்டது நவீன ஒலிம்பிக் போட்டிகள் 1896ல் தொடங்கிய காலத்திலிருந்தே ஒவ்வொரு முறையும் அரசியல் பிரச்னைகள் ஒலிம்பிக்கில் தலைகாட்டத்தான் செய்தன. ஆனால் 1972ல் அது உச்சநிலைக்கு பயங்கரமானதாக அமையும் அளவிற்கு வந்தது, ஜேர்மனியின் துரதிஷ்டம் தான்!

121 நாடுகளிலிருந்து 8485 வீரர்களும் 1603 வீராங்கனைகளும், 21 வகையான விளையாட்டுக்களில் 194 போட்டிகளில் பங்குபற்றிய இவ் ஒலிம்பிக் போட்டிகளின்போது செப்ரெம்பர் 5ந் திகதிதான் இச்சம்பவம் நிகழ்ந்தது.

### ✶ கலைஞர்
### கே. எஸ். பாலச்சந்திரன் எழுதும்
### ஒலிம்பிக் போட்டிகள் — 10

### மியூனிச் படுகொலை

செப்ரெம்பர் 5ந் திகதி, அதிகாலையில் ஆயுதபாணிகளான பாலஸ்தீன கொரில்லாக்கள், ஒலிம்பிக் கிராமத்தைச்சுற்றியிருந்த தடுப்பு வேலிக்கும் மேலாகப் பாய்ந்து சென்று, இஸ்ரேலிய வீரர்கள் தங்கியிருந்த பகுதிக்குள் திடீரென்று நுழைந்து, இரு இஸ்ரேலிய வீரர்களை உடனேயே சுட்டு வீழ்த்தி விட்டு, ஒன்பது இஸ்ரேலிய வீரர்களை பணயக்கைதிகளாக் கினார்கள்.

ஒலிம்பிக் மைதானத்திலிருந்து 20 மைல் தொலைவில் உள்ள விமான நிலயத்திற்கு, ஒரு ஹெலிகொப்டர் மூலம், கொரில்லாக்கள் கேட்டுக்கொண்டபடி, கொரில்லாக்களும், அவர்களால் பிடிக்கப்பட்ட இஸ்ரேலிய வீரர்களும் கொண்டுசெல்லப்பட்டார்கள்.

''கறுப்பு செப்ரெம்பர் இயக்கத்தினர்' என்று சொல்லப்பட்ட இவர்கள். இஸ்ரேலிய சிறைலிருக்கும் 200 பாலஸ்தீன கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமெனவும், அதன்பின் தங்களை எகிப்துக்கு செல்ல வசதிசெய்து தரவேண்டுமென வும்அறிவித்தார்கள். ஒலிம்பிக் போட்டிகளின் நிகழ்ச்சிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

### 17 பேர் பலி

இதற்கிடையில் மியூனிச் விமான நிலயத்தில் திடீரென துப்பாக்கிச்சமர் நடந்தது பாலஸ்தீன கொரில்லாக்களுக்கும், மேற்குஜெர்மன் பொலிசாருக்கும் இடையில் நடந்த இச்சமரின் விளைவாக ஐந்து கொரில்லாக்கள் கொல்லப்பட்டார்கள். எஞ்சியிருந்தகொரில்லாக்கள். ஹெலிகொப்டரை வெடிகுண்டால் தகர்த்துவிட்டார்கள். இதனால் 9 இஸ்ரேலிய பணயக்கைதிகளும்இறக்க நேர்ந்தது. இந்தப் படுகொலையில், மொத்தமாக பதினொரு இஸ்ரேலிய வீரர்களும், 5 கொரில்லாக்களும், ஒருமேற்கு ஜெர்மன் பொலிசாருமாக மொத்தம் 17 பேர் மாண்டார்கள்.

இந்தப் படுகொலையைத் தொடர்ந்து ஒலிம்பிக்போட்டிகளை நிறுத்தவேண்டும் என அபிப்பிராயங்கள் கூறப்பட்டபோதிலும் அடுத்த நாளே ஒலிம்பிக்போட்டிகளை தொடர்ந்து நடத்துவதற்கு ஒலிம்பிச் அதிகாரிகளோடு இஸ்ரேலிய குழுவினரும் சம்மதம் தெரிவிக்க போட்டிகள் தொடர்ந்து நடந்தன


இவ்வாறு படுகொலைகளும். பிரச்சினைகளும் நிகழ்ந்த 1972 ஒலிம்பிக்கில் மறுபக்கம்சாதனைகளும் முறியடிக்கப்படத்தான் செய்தன.

### இரு சிறந்த அமெரிக்க வீரர்களுக்கு
### தவறான நிகழ்ச்சி நிரலைப் படித்ததால்
### போட்டியில் பங்கு கொள்ள
### முடியாத நிலை!

மரதன் ஓட்டத்தில் 1908-ம் ஆண்டுக்குப்பிறகு. இம்முறை தான். முதன் முதலாக ஒரு அமெரிக்க வீரர் தங்கப்பதக்கத்தைப் பெற்றார் பிராங் சோட்டர் என்ற இவ்வீரர், அரங்கத்துக்குள் நுழைவதற்கு முதலே, யாரோ ஒரு நபர், தானே வெற்றிபெறுபவர்

(12ம் பக்கம் பார்க்க)


## நவீன உல்லாசக் குடிசைகள்



### எல்லாம் உங்களுக்காகவே

★ பிரதி சனி, ஞாயிறு நாட்களில் மதிய போசனம் Buffet Lunch-ரூபா 50/- மட்டுமே
★ எமது விசேஷமான ஐஸ் கிறீம் வகைகள்:

| | | | |
|---|---|---|---|
| வனிலா | ½ கலன் | ரூபா | 60/- |
| ஸ்ரோபரி | ½ கலன் | ரூபா | 60/- |
| சொக்லேட் | ½ கலன் | ரூபா | 70/- |

குளிருடன் கொண்டுசெல்லக்கூடிய (Rigifoam) பெட்டிகள் Rs. 50/- டிபொசிட்
யாழ்ப்பாணத்தில் வாங்கக்கூடிய விற்பனை ஸ்தாபனங்கள்
(1) JAFFNA PHARMACY 12 (38) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(2) FARM PRODUCTS, 79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★ உல்லாச வார விடுமுறை தினங்கள் (Weekend Package)
பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்

★ கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாம் விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.

★ புதுமணத் தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams: ANCHOR Kankesanturai. Telephone: 22802 JAFFNA

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா கடலோர உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

## ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH


## தோட்டப் பாடசாலைகள்
## எவ்வாறு உருவாயின?
## அது ஒரு விசித்திரக் கதை!

### ✶ மாத்தளை
### ஆ. இராஜலிங்கம்

தேயிலை, இறப்பர்தோட்டங்களில் தோட்டப்பாடசாலைகள் அமைந்துள்ளன தோட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படுகின்றது. தோட்டத்துப்பிள்ளைகள் இப்பாடசாலைகளில் தான் கல்வி கற்கின்றார்கள். இப்பிள்ளைகளின் கல்விக்கு ஆரம்பமும் அஸ்தமனமாகவும் அமைந்துள்ளது இப்பள்ளிக்கூடங்களே இந்தப் பள்ளிக்கூடங்கள் உருவானகதையோ மிகமிக விசித்திரமானது.

ஆங்கிலேயரின் வருகையைத் தொடர்ந்து பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது இந்த பெருந்தோட்டங்களில் தேயிலைக்கு முன்பாக கோப்பியே பயிரிடப்பட்டது இக்கோப்பித்தோட்டங்களில் இந்தியாவினின்றும் கொண்டுவரப்பட்ட இந்தியத் தமிழ்மக்களே தொழில்புரிந்னர்

பகல் நேரங்களில் பெரியவர்கள் கோப்பித்தோட்டவேலைக்குச் சென்று விடுவார்கள் சிறுபிள்ளைகள் அனைவரும் தோட்டத்து 'லயங்'களிலேயே இருப்பார்கள். இந்தச் சிறுவர்களின் விளையாட்டுகள் லயத்துக் சோடிகளோடு மாத்திரம் நில்லாது கோப்பித்தோட்டங்களுக்குள்ளும் விரிவடைந்தது. சிறுபிள்ளைகள் தானே! கோப்பிப்பழங்களை பிடுங்கி சாப்பிடுவதோடுநில்லாது. வைத்து விளையாடவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சி வெள்ளைக்காரத்துரைமாரின் கவனத்திற்கு வந்தது; வெள்ளைத்துரை சும்மா இருப்பாரா? இப்பிள்ளைகளால் கோப்பிப் பழத்திற்கு ஏற்படும் நட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க மாற்று வழி ஒன்றினைத் தேடினர். அந்த வெள்ளைத்துரைமாருக்கு கிடைத்த ஒரே ஒருமாற்று வழி இந்தப்பிள்ளைகளை கூட்டாக சேர்த்து எங்காவது ஓரிடத்தில் அடைத்துப் போடுவதுதான் என்ற முடிவுக்கு வந்தனர். அதை நடைமுறையும் படுத்தினர்.

லயங்களுக்கு பக்கத்திலேயே சிறுசிறு மண்டபங்கள் அமைக்கப்பட்டன லயத்துப் பிள்ளைகள் அனைவரையும் பகல் நேரங்களில் அம்மண்டபங்களில் சிறைவைத்தனர் அவர்களை மேற்பார்வை செய்வதற்காக ஒரு 'ஆயவும் நியமிக்கப்பட்டார் அந்த 'ஆயா தான் நாளடைவில் தோட்டத்து ஆசிரியராகவும்' அந்த சிறை மண்டபம்தான் தோட்டத்துள் பள்ளிக்கூடமாகவும் உருமாறின. அப்படியென்றால் இது ஒரு விசித்திரக் கதை தானே!

# சிறுகதை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அவளுக்குச்சில நாட்களில் அவனிடம் கதைக்கக்கூட நேரமிராது

அன்று மாவைக் கந்தனின் தீர்த்தத்திருவிழா. வழமையில் ஒவ்வொரு வருடமும் அதை அவன் தவறவிடுவதில்லை. அழகான அலங்கரிப்புடன் அருள் பிரவாகமாக முருகன் காட்சியளிக்கும் ரம்மியமான காட்சியும் சந்நிதியில் முருகன் முன்னிலையில் ஒருமணிநேரம் நிகழும் மேளக்கச்சேரியும் என்றுமே அவனுக்குத் தெவிட்டாதவை. மனதில் இனிய பிரவாகமாக ஏதோ சிலிர்க்க அருகிலிருந்து அதை அவன் ரசிப்பான். இம்முறை ஆனந்தியுடன் நேரத்துக்குப்போய் சுவாமி வருவதற்குமுன் கடைவீதிபார்த்துவிட்டு அந்த அமைதியான மனதைக் கொள்ளைகொள்ளும் சூழலில் கோயிலில் ஒலிபரப்பாகும் பக்திப்பாடல்களைக்கேட்டு மெய்மறக்கவேண்டுமென்ற திட்டத்தை இருநாட்களுக்கு முன் அவன் சொன்னபோது அவளும் சம்மதித்திருந்தாள் ஆனால் அன்றோ ''சொறி டியர்'' என்னால் இன்றைக்கு வரமுடியாது முக்கியமான கருத்தரங்கு ஒன்றுக்குப்போக வேண்டும். திருவிழா வருகிற வருடமும் வரும்தானே'' என்றபோது அவனுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. அவளோ அதைக் கருத்தில் கொள்ளாமல் ''இது என்ன சாதாரண ஆட்கள் மாதிரி சின்னச்சின்ன ஆசையெல்லாம்'' என்று கேட்டபோது, அவனுக்குக் கோபமே வந்துவிட்டது ''எனது அறிவுக்குத்தான் எஞ்சினியர் பட்டமே தவிர, உணர்ச்சிகளில் ஆசைகளில், கற்பனைகளில் நானும் சாதாரண மனிதன்தான். எனக்குச் சின்னச்சின்ன ஆசைதான் உனக்குத்தான் எதுவுமே விளங்காதே'' எனக்கத்தத்தான் முடிந்தது மேலே ஆகாயத்தில் பஞ்சுப் பொறி போல் மிதந்து செல்லும் மேகத்தை ரசிப்பது. இரவில் நிலவொளியில் அமர்ந்து நட்சத்திரங்களை எண்ணுவது. புற்றரையில் படுத்து உருளுவது. கடலில் குளிப்பது.... யாவுமே சின்னச்சின்ன ஆசைதான். ஆனால் அவற்றை மனைவியுடன் பகிர்ந்துகொள்ள நினைப்பதுதான் பெரிய ஆசையா- ஏன் அதுமட்டும் எனக்கு கிடைக்கிறது இல்லை' எனத்தன்விதியை நொந்துகொண்டான் அவன். பள்ளிக்கூடப்படிப்புப் படித்த அண்ணிக்கு உள்ள புரிந்துணர்வு கூட பல்கலைக்கழகம் வரை படித்த இவளுக்கு இல்லையே என்பதில் அண்ணாவின் அதிஷ்டத்தை எண்ணி பொறாமை கூட வந்தது. அவனுக்கு இன்றைக்குகூட அண்ணி சமைத்து வைத்துவிட்டு. இரவுச் சமையலுக்கும் ஆயத்தம் செய்து விட்டு அண்ணாவரும் வரை காத்திருந்து பக்கத்தில் இருந்து பரிமாறி அவர் சாப்பிடுவதைப் பார்த்து ரசித்து ஏதாவது ஒரு வழியில் சந்தோஷப்படுத்த முனையும் பாங்கை எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

நல்லவள் என்பதை மட்டும் தகுதியாகக் கொண்டு திருமணத்தில் இணைபவர்களுக்கு அவளுடைய உளப் பாங்குகள் எவ்வளவு தூரம் மாறுபட்டிருக்கின்றன எனப் புரியவா போகிறது. குடிக்காத ஆண்கள் நல்லவர்கள். அடக்கமான பெண்கள் நல்லவர்கள். அவ்வளவு தானே திருமணத்தின் முன்னால் அறிய முடிகிறது. ஆனந்தியும் நல்லவள் தான் - பண்பில் உபசாரம் செய்து மற்றவர்களை வரவேற்பதில் எதிர்வார்த்தை பேசாது அடங்கிப் போவதில்...... ஆனால் அவன் எதிர்பார்க்கும் நெகிழ்வோ எதுவோ அவளிடம் இல்லையே. பதினறு பொருத்தமும் பார்த்து ஏன் அதிஷ்ட எண் சாஸ்திரமும் பார்த்து போதாதற்குக் குருதிக்குழு கூடப்பார்த்து நடந்த திருமணம். அவளுடைய குருதி 'ஓ' குழுவாதலால் குழந்தைப்பேறு நன்றாக அமைய அவனுடையதும் 'ஓ' ஆக இருக்கக் கூடாது என்ற நிபந்தனைக்கும் உட்பட்ட திருமணம் அல்லவா எல்லாம் இருந்தும் அறிவு, அந்தஸ்து, சோடி, சாதகம் எனச் சகல பொருத்தம் இருந்தும்...... இதுதான் தாரமும் குருவும் தலைவிதி என்கின்றனரோ? நாம் தேடிப் பொருத்தம் பார்க்க முடியாத எத்தனையோ விஷயங்கள் தாம்பத்திய வாழ்வில் இணைய வேண்டியவர்களுக்கு இருக்கிறதே!

இது அகம்பாவத்திலோ, பொருளாதாரக் கஷ்டத்திலோ, மாமன்மாமி தொந்தரவாலோ வேறு எதுவாலுமோ ஏற்பட்டிருந்தால் விட்டுக்கொடுப்பதால் அல்லது வீடு மாறுவதால் திருந்தலாம். ஆனால் இதற்கு என்ன செய்யலாம்? டாக்டரென்றபடியால் அவள் வேலையால் வரும்போது அன்புடன் புன்சிரிப்பால் வரவேற்றுக்களைப்புக்கு ஒத்தடம் தர அவளால் முடியாதுதான். அதற்கு அவன் அனுசரித்துப் போவது தான் பண்பும் கூட ஆனால் இருக்கும் பொழுதுகளில் அவள் செயற்பாட்டால் அவனை ஆக்கிரமித்தால் அந்த இனிமைக்காக அவன் காத்திருக்கமாட்டானா? அந்த நினைவின் சுகத்தில் கிடை நாட்களைக் கடத்தமாட்டானா? அவன் எதிர்பார்ப்பது எல்லாம் செல்லமான சிணுங்கலை இடையே ஊடலை இதைப் போடுங்கோ என உரிமையுடன் சொல்லி அவனை அழகுபார்க்கும் துடிப்பை, ஆழமாக எதைப்பற்றியாவது மெல்ல விவாதித்து அறிவு பூர்வமாகக் கதைப்பதை, பகிடிவிடுவதை, படத்திற்குப் போய்வந்திருந்து மனைவியுடன் விமர்சிப்பதைத்தான். ... அண்ணி சில வேளைகளில் அண்ணாவுக்கு தலைக்கு சிகைக்காய் தேய்த்துக்கூட விட்டிருக்கின்றாள். தலைதுவட்டியிருக்கின்றாள். அவனுக்கோ!...... இந்த எதிர்பார்ப்புக்கள் நியாயமற்றவையா? அண்ணா அண்ணியைக் காதலித்து மணம் செய்ததுதான் இருவருடைய உணர்ச்சிகளும் ஒருவரால் ஒருவர் புரியக்கூடியனவாய் இருக்கின்றனவோ என அவன் நினைப்பதுண்டு அவனுடைய கனவுகள், கற்பனைகள் இவ்வளவுதூரம் உடைந்து போய் விடும் என அவன் நினைத்துக் கூடப்பார்த்ததில்லை. அவனுடைய ஆசைகளில் எதுவுமே அவளிடமில்லை.

ஐந்து வருடங்கள் முழுமையாகக் கழிந்துவிட்டன. சீ இது என்ன ஆஸ்பத்திரியா, வீடா எனச்சீறியகாலம்போய், யாரை அறையலாம், எதை உடைக்கலாம் என ஏமாற்றங்களின்போது ஏற்படும் படபடப்பு மறைந்து, எதிர்பார்ப்புகள், கனவுகள், கற்பனைகள், அபிலாசைகள், ஆர்வத்துடிப்புகள் யாவும் அடங்கி சூனியமாக ஏதோகடமையென்ற வாழ்வு வந்து விட்டவேளையில் மூன்று வயதுக்குழந்தை காயத்திரியுடன் தான் அவனது பொழுதுகள் கழிந்துகொண்டிருக்கின்றன. தன் குழந்தையானது தனது கற்பனையை, கனவை நிஜமாக்கமாட்டாதா என்ற ஆதங்கம் ''அப்பா தேத்தாகுடி, அப்பா பாவம்'' என்றெல்லாம் அவனுடன் ஒட்டிக்கொள்ளும் காயத்திரி வளர்ந்து என்ன செய்வாளோ என்று அவனுக்குத் தெரியாவிடினும் அந்த நம்பிக்கையில் அவன் வாழ்கின்றான். காயத்திரிக்குக்கதை சொல்வதில் மகிழ்வும் அவளின் மழலையில் பாட்டுக்களைக் கேட்பதில் நிறைவும் அடைகின்றான்.

(யாவும் கற்பனை)

Radio and Electronics
Engineering Course
WEEK - END CLASSES
யாழ். நகரில்

சகல தொழில் நுட்ப வசதிகளுடனான எமது நவீன ஆய்வுகூடத்தில் இலங்கையில் தன்னிகரற்றுத் திகழ்ந்த ஆசிரியர்களிடமிருந்து கற்று நிறை பலன் பெற நாம் அளிக்கும்

PART - I - 6 மாதம்

★ RADIO: பழுதறப் பழுது பார்க்கவும் பிறர் உதவியின்றி உருவாக்கவும்.
★ TAPE RECORDER
★ HI-FI STEREO AMPLIFIER
★ RADIOCONTROL
★ TRANSFORMER
} இவற்றோடு இன்னோரன்ன பல இலத்திரனியற்கருவிகள் யாவற்றின் அடிப்படை அமைப்புக்குரிய தெளிவான Theory and Practicalsம் அவற்றைப் பாரியமுறையில் உருவாக்கவும் பழுது பார்க்கவும்.
★ DIGITAL ELECTRONICS: Theory and practicals
★ ஒளியின் தாக்கத்தால் இயங்கும் இலத்திரனுக்குரிய கருவிகளை உருவாக்கவும்.
★ HI-FI Stereo Phonic Amplifiers, Battery Eleminators போன்ற பல இலத்திரனியற் கருவிகளும் விற்பனைத் தரத்தில் தயாரிக்கும் தொழில் நுட்பமும் புகட்டப்படும்.
★ பயிற்சி முடிவில் எம்மால் இலவசமாக வழங்கப்படும் உதிரிப் பாகங்களைக் கொண்டு உதவி எதுவுமின்றித் தாமாகவே வானொலியொன்றைச் செய்து முடிக்கும் திறமையைப் பெறுவதோடு அவற்றைப் பாரிய முறையில் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தையும் பெற்றுக் கொள்வர்.
★ எமது தொழிற் கூடத்தில் வானொலி உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யும் முறையில் இலவச பயிற்சி அளிக்கப்படும்.

PART - II - 3 மாதம்

★ T. V,
★ VIDEO RECORDERS
} Theory and Practicals பழுது பார்த்த
★ பரீட்சை முடிவில் தேறுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.
★ வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

கட்டணம்: PART - I ரூபா 1500/-
PART - II ரூபா 1000/-

தவணை முறையிலும் கட்டணத்தைச் செலுத்தலாம்.

ஆரம்பம்: 21-07-84

CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA.
T'PHONE: 24201

# வண்ணை வைத்தீஸ்வரா

''வித்தியாலயம் என்றால் அது வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தையே குறிக்கும் என்ற அளவிற்கு பிரபல்யமானது இந்தக் கல்லூரி.

தொழிற்றுறையில் முன்னணி வகிக்கும் சட்டத்தரணிகளையும், திறமையான வைத்தியர்களையும், பெயர் பெற்ற நிர்வாகிகளையும், பல்வேறு துறைப்பணியாளர்களையும் உருவாக்கிப் புகழ் பெற்றது இக்கல்லூரி. இதன் பழைய மாணவர்கள் நாடளாவ வாழ்ந்து தொழிலாற்றி பணமும் வளமும் சேகரிக்கும் அதே வேளையில் தமது கல்லூரிக்கு பேரும் புகழும் தேடித்தருவதிலும் பின்னிற்கவில்லை.

அண்மையில் இக் கல்லூரியின் பழைய மாணவரின் சகோதரர் ஒருவர் மாஸ்கோ சென்றிருந்தபோது அங்கு அவருக்கு சில சிக்கல்கள் தோன்றின. அவற்றை நிவர்த்தி செய்ய அவர் மாஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்குச் சென்ற போது அங்கு பணியாற்றிய உதவித் தூதுவர் அவருக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து கொடுத்துவிட்டு ''நீர் வித்தியாலயப் பழைய மாணவர் திரு...வின் சகோதரரா?'' என்று வினவினாராம். எப்படி அடையாளம் கண்டீர்கள் என்று கேட்டபோது, இது வித்தியாலம் எமக்கு கற்றுத் தந்த மரபு என்றாராம் இதிலிருந்து வித்தியாலய பழைய மாணவர்கள் தாம் எங்கு வாழ்ந்தாலும் தமது கல்லூரியையும் அதனுடன் தொடர்பு கொண்டவர்களையும் மறக்க மாட்டார்கள் என்பதுடன் நாடு பலவிலும் சென்றேறி தமது கல்லூரியின் புகழைப் பரப்புவதிலும் பின்னிற்கவில்லை என்பதை அறிய முடிகின்றது

கல்வித்தீபத்தை ஏற்றி வைத்து தமது மாணவர்களின் அறிவுக்கண்களைத் திறந்து வைப்பதுடனமையாது கல்லூரியில் கற்கும் மாணவர்களின் நல்வாழ்விலும் அதிக அக்கறை காட்டி வருவது வித்தியாலயம் பழைய மாணவர்கள் தமது கல்லூரியை நன்றியுடன் நினைவு கூருகிறார்கள். அண்மையில் இக்கல்லூரிக்கு இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கித் தொகுதியை அன்பளிப்புச் செய்ததுடன்

கு. கல்வளை சேயோன்

[14ம் பக்கம் பார்க்க]

# ஒலிம்பிக்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

போல அரங்கினுள் ஓடிவந்து மக்களின் ஆரவாரத்தையும் பெற்று, இறுதியில் பாதுகாவலர்களின் கைகளில் அகப்பட்டுக்கொண்டுவிட்டார். நல்லகாலம்! தங்கப்பதக்கத்தையும் அவர் பெறமுதல் குட்டு வெளிப்பட்டுவிட்டது.

## துரதிஷ்டசாலிகள்

ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டத்தில், அப்போதைய உலகச் சாதனையாளர்களாக விளங்கிய இரண்டு அமெரிக்க வீரர்களுக்கு ஏற்பட்ட கதி தான் மிகவும் பரிதாபகரமானது. 100 மீட்டரில் முதல் இரு இடங்களைப் பெறுவார்களென எதிர்பார்க்கப்பட்ட எடி கார்ட் என்ற அமெரிக்க வீரரும், றேறொபின்சன் என்ற மற்ற அமெரிக்க வீரரும், ஒரு பழைய நிகழ்ச்சிநிரல் ஒன்றைப் பார்த்ததினால் தாங்கள் பங்குபற்றும் அரை இறுதி நிகழ்ச்சி மாலையில் தான் நடக்கும் என்றெண்ணி, தங்கியிருந்த இடத்தில் சாவகாசமாக இருந்துவிட்டார்கள்.

ரெலிவிசனில், மற்றவீரர்கள் அதே நிகழ்ச்சியில் ஓட ஆயத்தமாவதைக் கண்ட இவர்கள் இருவரும், திகைப்புற்று, ஒலிம்பிக் கிராமத்திலிருந்து, அரங்கத்துக்கு ஓடி வந்தார்கள். ஆனால் போட்டி ஆரம்பமாகிவிட்டது. அடுத்த நாள் நடந்த 100மீட்டர் இறுதி ஓட்டத்தில் இவர்கள் ஓட முடியாதவர்களாய் - ஒலிம்பிக் சரித்திரத்திலேயே முதன் முதலாக ஒரு ரஷ்யவீரர் வலேரி போர்சோவ் என்பவர் 100 மீட்டரில் தங்கப்பதக்கத்தைப் பெறுவதை - பார்த்துக் கொண்டிருக்கவே முடிந்தது

பெண்களுக்கான பென்ராக்லன் என்ற ஐந்து நிகழ்ச்சிகள் அடங்கிய கடுமையான போட்டியில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. 32 வயதானவரும் 17 வருடங்களாக போட்டிகளில் பங்குபற்றிக்கொண்டிருந்தவருமான மேரி பீட்டர்ஸ் என்ற பிரிட்டன் வீராங்கனை புதிய உலக சாதனையை நிறுவி தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார்

வயதில் முதிர்ந்த 'மேரி பீட்டஸ்' ஐப் போலவே மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த வயதில் மிகக்குறைந்த 16வயதேயான 6 அடி 4அங்குல உயரமான ஒரு கல்லூரி மாணவி உல்ரிக் மேபாரத் என்பவர் உயரப்பாய்தலில் தங்கப் பதக்கத்தைப் பெற்ற மிக வயதுகுறைந்த ஒலிம்பிக் வீராங்கனையானார்.

## 18 வயதானவருக்கு 7 தங்கப்பதக்கங்கள்

18 வயதான மார்க் ஸ்பிற்ஸ் என்ற அமெரிக்க நீச்சல் வீரன் தான் பங்குபற்றிய 7போட்டிகளிலும் உலக சாதனை நிறுவி 7 தங்கப்பதக்கங்களைப் பெற்று அமெரிக்காவின் கௌரவத்தை நிலைநிறுத்திக்கொண்டார்.

ஹொக்கியில் ஆசியாவின் ஆதிக்கம் இம்முறை தகர்த்தெறியப்பட்டது
இறுதி ஆட்டத்தில் மேற்கு ஜெர்மனி, 1-0 கோல்களால் பாகிஸ்தானைத் தோற்கடித்தது இந்தியா இறுதி ஆட்டத்தில்கூட கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டது.

இறுதியில் ரஷ்யா 50 தங்கப்பதக்கங்கள் உட்பட 99 பதக்கங்கள் பெற்று முதலிடம் பெற அமெரிக்கா 33 தங்கப்பதக்கங்களுட்பட 94 பதக்கங்களைப் பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றது. கிழக்கு ஜெர்மனி 20 தங்கப்பதக்கங்கள் உட்பட 66 பதக்கங்கள் பெற்று மூன்றும் இடத்தைப்பெற்றுக் கொண்டது. (தொடரும்)

# பாரினிலே ஒரு பாலித்தீவு

நா. மாணிக்க இடைக்காடர்

பாரத இரத்தினம்நேருஜி அழகும், கலையும் சிறந்த ஒரு தீவைப்பார்வையிட்டார் அப்பொழுது அத்தீவு மக்கள் தங்கள் தீவைப்பற்றி நேருஜி என்ன அபிப்பிராயம் கொண்டார் என்று வினவினார்கள். அதற்கு நேருஜி ''இத்தீவே உலகின் உதயம்; இதுவே அதன் கடைசிச்சுவர்க்கம்'' ''(this island is the morning of the world; it is its last paradise) என்று கூறினார். நேருஜி குறிப்பிட்டது பாலித் தீவை (BALI). இத்தீவு ஜாவாவுக்கு கிழக்கேயுள்ளது. எழுபது மைல் நீளமும் நாற்பது மைல் அகலமும் உள்ள இத்தீவில் இருபது இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இதில் நூற்றுக்கு தொண்ணூற்றைத்து பேர் இந்து மக்கள் நானும் மனைவியாரும் நாலு முறை சுவர்க்கத்திற்கு போயிருக்கிறோம். நேருஜீ கூறியது மிகவும் உண்மையே என்று கருதுகிறோம்.

கிறிஸ்துவிற்கு முன் இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து குடியேறிய மக்கள் என்று பாலி மக்கள் தங்களை கூறிக்கொள்கிறார்கள் இவர்கள் ஒல்லாந்தர்கள் அப்பகுதிக்கு வருமுன் சுதந்திரமாகவே வாழ்ந்தார்கள். ஒல்லாந்தர்களுடன் கடுஞ்சண்டை செய்து தோற்றதால் சுதந்திரத்தை இழந்தார்கள் இந்தோனீஷியா சுதந்திரம் பெற்றதும் அதன் இருபத்தாறு மாகாணங்களில் பாலித்தீவு ஒரு மாகாணமாகவிருக்கிறது கலைச்செல்வம் சிறந்த பகுதியாதலால் இந்தோனீஷிய அரசு பொன்போல் இத்தீவையும்இத்தீவுமக்களையும் நடத்துகிறது பதின்மூன்றும் பதினைன்காம் நூற்றாண்டில் ஜாவா மக்கள் இஸ்லாமை தழுவிய பொழுது இதை எதிர்த்து பல இலட்சக்கணக்கான இந்துக்கள் பாலிக்குசென்று குடியேறினார்கள். ஆதியிலிருந்தவர்களும் பிறகு சென்றவர்களும் ஒரு மித்து சந்தோஷமாக துவேஷமில்லாமல் வாழ்கிறார்கள் பாலி மொழி சமஸ்கிருதம் போலிருக்கிற தென்கிறார்கள். இப்பொழுது இந்தோனீஷிய மொழியைகூட உபயோகிக்கிறார்கள்.

## அழகிய சிலைகள்

நானும் மனைவியாரும் இளைய மகளும் பாலி விமான நிலையத்தில் முதல்முறை இறங்கிய பொழுது இது விமான நிலையமா அல்லது இது ஒரு கோவிலாவென்று யோசித்தோம். விமான நிலைய கட்டிடம் பாலி கலைப்பாணியில்கட்டப்பட்டிருக்கிறது. கட்டிடப் பல பகுதிகளில் இந்து சிலைகள் காணப்படுகின்றன. சுவர்களில் இராமாயண சம்பவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஹோரலுக்கு போகும் வழியில் நாம் கண்டது சிலையே; ஒவ்வொரு சந்தியிலும் ஒரு பெரிய சிலை பாலங்களிலும் சிலை எல்லாம் சிலைமயமாயிருந்த . எல்லா சிலையும் இந்து தெய்வங்களின் சிலை.

ஹோரல் சேர்ந்ததும் எல்லா ஆண்களும் தலைப்பாகை அணிந்திருந்தார்கள், பொட்டு போட்டிருந்தார்கள், காதில் பூ வைத்திருந்தார்கள். எங்களைக் கண்டதும் அவர்கள் சந்தோஷப்பட்டார்கள். காரணம் கேட்டதும் தங்களுக்கு இந்துக்களை கண்டால் ஒரே ஆனந்தமென்றார்கள். மறுநாள் காலை நாங்கள எழுந்து கதவைத் திறந்ததும் ஒரு சிறு ஓலைத்தட்டில் பல பூக்கள் இருந்ததைக் கவனித்தோம் என்ன விடயமென்று விசாரித்த பொழுது காலையில் எல்லோரும் சூரிய நமஸ்காரம் செய்வார்கள். ஹோரலில் காலைப்பூசைக்கு பாவித்த பூக்களென்றார்கள்.

## கோயிற்சிறப்பு

பாலியில் இருபது இலட்ச மக்களுக்கு பத்தாயிரம் கோவில்கள் உண்டு. இதில் வீட்டுகோவில்களைக் கணக்கிடவில்லை. பெரிய கோவில்கள், கிராமக்கோவில்கள், வீட்டுக் கோவில்களென மூன்றுவித கோவில்கள் உண்டு. மிகப் பெரிய கோவிலை தாய்கோவில் என்பர் ஒரேஒரு தாய்கோவில் தான் இருக்கிறது இதன் பெயர் பெசாகி. (Besaki) பாலியிலுள்ள உயரிய மலையிலிருக்கிறது. வேறு பெரும் கோவில்களும் உண்டு. ஒவ்வொருகோயிலுக்கும் வெளியே ஒரு உயரிய மரம் உண்டு ஒவ்வொரு கோவிலுக்குமுன் இராமாயண நடனம் அடிக்கடி நடைபெறும் அனுமார் பாய்வதற்கும், உட்காருவதற்கும் இம்மரத்தை உபயோகப்படுத்துவார்கள் எல்லா வீடுகளிலும் ஒரு பகுதியில் அல்லது ஒரு சிறு கொட்டிலில் கோவில் இருக்கிறது இங்கே ஒழுங்காகக் கும்பிடுவார்கள். பெரியகோவில்கள் கிராமகோவில்கள் வாசலில் சப்பறம் போன்ற கட்டிடம் காட்சி அளிக்கிறது. பாலிப் பிராமணரும், பிராமணர் அல்லாதோரும் அர்ச்சகர்களாகக் கடமையாற்றுகிறார்கள் அர்ச்சனைப்பொருட்களில் முட்டையும் அடங்கும். எங்கள் தலங்களில் பல அற்புதங்கள் நடந்ததைப் பற்றி எப்படி நாங்கள் பேசிக்கொள்ளுவோமோ அப்படி அவர்களும் கூறுவார்கள். சுமார் இருபது ஆண்டுகளுக்குமுன் தாய்க் கோவில் (Mother Temple) பெசாகியிருக்கும் மலை உச்சியில் எரிமலை வாலால் கெந்தகம் போன்ற பொருள்கள் வெப்பமாக ஓடியபொழுது மலை முழுக்க பரந்தது. ஆனால் கோவிலை தவிர்த்து ஓடியது இதை கோவிலின் அருளென்று கருதுகிறார்கள். இந்துக்கோவிலில் வணங்கும்பொழுது தன்னைத் தெரியாமல் மனம் ஒருமைப்பட்டு ஈசுவரன் அருகிலேயிருக்கிறரென்றஉணர்ச்சி தென்படுகிறது. கோவிலில் நின்று மேலே ஆகாயத்தையும் உயர உச்சி மலையையும் கீழே பாலித்தீவையும் கடலையும் பார்க்க யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கூற்று எம்மனதில் படுகிறது.

## பலவகை நடனங்கள்

கம்பர் வீட்டு அம்மியும் கவி பாடுவது போல் பாலியில் எல்லா வீட்டிலும் எல்லோரும் நடனமாடுவார்கள் ஒவ்வொரு வீட்டிலும் சில நேரமாவது வீட்டில் உள்ளவர்கள் ஒவ்வொரு கிராமக்கோவில் வீதியில் வாரத்திற்கு ஒரு தடவை அல்லது இரு தடவை நடனம் நடக்கும் இப்படி அடிக்கடி நடனம் நடந்தும் நடன ஆர்வத்தால் நிறைய மக்கள் வருவார்கள். நடனம் பார்க்க ஊர்மக்கள் பணம் கொடுக்கத்தேவையில்லை, பிறவூர் வாசிகள் பணம் கொடுக்க வேண்டும். இந்தப்பணம் கிராமத்திற்கே போகும். பலவித நடனங்களுண்டு மிகவும் பழையது குரங்கு நடனம் (kechak dance) இதில் வாத்திய இசை கிடையாது வாயாலே குரங்கு மாதிரி சத்தமிடுவார்கள். சுமார் நூற்றைம்பது ஆடவர் சிறுகொடுக்குகள் அணிந்து ஆடுவார்கள். பொழுதுபடும் நேரம் மங்கல் விளக்கில் ஆடுவதால் 150 பேரின் சத்தம் கேட்க கேட்கிறவர்களுக்கு ஒரு அச்சம் தோன்றும்- மற்ற பழைய நடனம் இராமாயண நடனம். பெண்கள் பெண் வேடம் போடுவார்கள் பெண்களே இராமர், இலட்சுமணன் வேடத்திலும் வருவார்கள். இராவணன், அனுமான், சடாயு, விபீஷணன்வேடத்தில் ஆண்கள் பங்குபற்றுவார்கள். ஒருமணிநேரத்தில் சுருக்கமாக சீதா கலியாணம் தொடங்கி சீதையின் மீட்பு வரையும் காண்பிப்பார்கள். ஜாவாவிலும், பாலியிலும் கதையில் அனுமானைப் பற்றி ஒரு மாற்றமுண்டு. இந்த இரு தீவுகளிலும் இறுதியில் அனுமான் திரிசடையை விவாகம் செய்வதாக நடனம் காட்டுகிறது. ஏன் இப்படி கதையில் மாற்றம் செய்தீர்கள் என்று நான் வினவியபொழுது சிலர் அனுமான் செய்த பல அரிய பெரிய செயல்களுக்கு ஏதாவது கைமாறு வேண்டுமென்று இது விதமாக தாங்கள் மாற்றிவிட்டதாக கூறினர். பாலியில் இராமாயண நடனம் எவ்வளவு கவர்ச்சிகரமானது என்பதற்கு என்னையே உதாரணமாக கூறுகிறேன். ஏற்கனவே பல தடவை இராமாயண நடனம் பார்த்திருந்தும் ஒருநாள முழுவதும் எனது உத்தியோகம் சம்பந்தமாக கடமையாற்றி நித்திரைக்கு போகும் சமயத்தில் இராமாயண நடன சங்கீதம் கேட்டதும் மனைவியாரையும் அழைத்துக் கொண்டு இரவு ஒன்பது மணிக்கு மேல் சத்தம் கேட்டவிடத்திற்கு விரைந்து சென்றோம் ஆசனமில்லாமல் இருந்தபொழுதும் பிறநாட்டு மக்கள் என்று எங்களை அழைத்துச் சென்று மேடைக்குச் சமீபத்தில் இரு ஆசனங்கள் கொடுத்தார்கள் நடனம் முடிந்து ஹோரலுக்குத் திரும்பி வரும்பொழுது அன்று முழுக்க பலவயல்கள் பார்வையிட்டதால் மிகவும் களைத்திருந்தும் இராமாயண நடன சங்கீதத்தைக் கேட்க அவ்விடத்திற்கு என்னைத் தெரியாமல் ஒருசக்தி இழுத்துச் சென்றது. கெச்சாக் நடனம். இராமாயண நடனம் முக்கியமானவை. மற்ற நடனங்களும் உண்டு, தேனீ (bumble-bee) நடனம் தலைவன்-தலைவி நடனம் போன்ற இதர நடனங்களும் மிகவும் கவர்ச்சிகரமானவை. நடனங்களுக்கு வாத்திய இசையுண்டு. இதுவும் மனதைக் கொள்ளை கொள்ளும் இந்திய சங்கீதத்திற்கும் சீன சங்கீதத்திற்கும் நடுவே இந்தச் சங்கீதம் இருக்கிறதென்று நான்கருதுகின்றேன். பாலியில் எல்லோரும் நடனமாடுவார்கள் என்பதற்கு சில உதாரணங்கள் கூறுகிறேன். நாங்கள் தங்கிய ஹோரலில் இரவு நடனங்கள் நடைபெற்றன. எல்லா நடனங்களும் தரமானவை யார் கலைஞர் என்று விசாரித்த பொழுது எல்லோரும் ஹோரலில் கடமையாற்றுபவர்கள் என்று கூறினர். பேராசிரியர் எனது நண்பன். இவர் பாலியைச் சேர்ந்தவர் இந்தோனிஷிய கலை கலாசார இலாகாவுக்கு அதிபர் நாயகம். சமீபத்தில் தான்பாலி சென்றிருந்த பொழுது ஏதோ நடனத்திற்கு ஒரு ஆள்குறையவிருந்ததாம், வராதவரின் இடத்தில்தான் நடனமாடினார் என்று கூறினார். இப்படி எல்லோரும் நடனமாடக்கூடிய பகுதி உலகத்திலே பாலியென்றே சொல்லலாம்.

> “உலகின் உதயம், உலகின் கடைசிச் சுவர்க்கம்” என நேருஜீ போற்றிய பாலித்தீவு, சிற்பத்தால், ஓவியத்தால், நடனத்தால் ஏனைய கலைகளால் தனித்துவம் வாய்ந்தது.

## ஓவியத்திறன்

சிலை செய்வதிலும், ஓவியம் வரைவதிலும் பாலிமக்கள் பெயர் போனவர்கள். சிலைகள் கல்லிலும், மரத்திலும் செய்வார்கள். இராமாயணம், மகாபாரதத்திலிருந்து சில சம்பவங்கள் மரத்தில் பிரதிபலிக்கும் அல்லது கட்டிடங்களில் ஜொலிக்கும் பஞ்சபாண்டவர் வனவாச ஆரம்பத்தில் மரம்வெட்டி குடிசை கட்டுவதையும் திரௌபதி உதவி செய்வதையும் மரத்தில் சித்திரித்திருந்தார்கள். இந்த சித்திரத்தின் விலை அதி

(14-ம் பக்கம் பார்க்க)

# சின்னத்தம்பிப் புலவர் என்பதே பேச்சு

க.சி. குலரத்தினம்

இற்றைக்கு ஐம்பதாண்டுகளுககு முன்பின்னாக யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச்சங்கம், யாழ்ப்பாணம் கலாநிலையம், வாலிபர் மாநாடு முதலியநிறுவனங்கள தமிழ் வளர்த்த காலத்திலே, ஊர்கள தோறும் பொதுமேடைகள் அமைத்துக் கொடுப்ப, ஆங்காங்கே ஆறடி உயரமும் அழகான பொன் மேனியும் கொண்ட ஆணழகன பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், குடுமியசைய, குதிக் கால்கள் உயர, கேட்போர் கருத்தூன்றிச் செவிகொடுப்பச் சின்னத்தம்பிப் புலவரின் பாடல்களை ஜனரஞ்சகமாக மணிக்கணக்காக அலசி ஆராய்ந்து நயந்து பேசிவந்தார்கள்.

ஆங்கிலப் புலவர்களின் அருமையான இயற்கைவளப்பாடடுகளில் தம்மை மறந்த மேதைகள் பலர், தமிழ்ப் புலவர் ஒருவர், அவரும்யாழ்ப்பாணத்தவர், அதிலும் அண்மையில் வாழ்ந்தவர் பாடிய அருமையான பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து, மெய்மறந்து, மறு ஒலிபரப்புச் செய்யுமாறு மீண்டும் மீண்டும் மேடைகள் அமைத்ததும் உண்டு.

பொன் பூச் சொரிந்த கொன்றை என்ற சின்னத்தம்பிப் புலவரின் வாய் சாதாரண வாயல்ல. சங்க காலத்தில் மீனெறி தூண்டில், தேய்புரி பழங்கயிறு முதலிய நூற்றுக் கணக்கான தொடர்களைப் புனைந்து பாடிய புலவர்கள்; இடைககாலத்தில் மண்தின்ற பாணம் என்று பாடிய மரபில் வந்தமைந்த செந்தமிழ்வாய். அந்த வாயால் மக்கள் இலக்கியம் பாடவிரும்பிய சின்னத்தம்பிப் புலவர் பருளை விநாயகப் பெருமானை முன்னிட்டுப் பள்ளுப்பாடல் பாட விரும்பினார் பள்ளுப்பாடல் மக்களைத் துள்ளவைககும் இயல்பமைந்த பிரபந்தம்

## ஈழத்தவரின் உள்ளத்தைத் தொட்டபள்ளு

ஈழத்துப் புலவர் பெருமக்களை வெகுவாகத் தொட்ட பிற்காலப் பிரபந்தவகைகளுள் பள்ளுமுக்கியமானது. தமிழ்நாட்டில் முதலில்எழுந்த முக்கூடற்பள்ளுக்கு முன்னர், ஈழத்தில் கதிரமலைப்பள்ளு, ஞானப்பள்ளு என்னும் இரண்டும் எழுந்தன இவற்றைத் தொடர்ந்து இங்கே எழுந்த பள்ளுகள்.பல பருளைவிநாயகர் பள்ளு, எனப் பல பள்ளுகள் பிறதேசங்கள் தோறும் எழுந்துள்ளன.

பள்ளு உழவுத்தொழிலின் ஏற்றத்தையும், பயிர்செய்யும் பண்பாட்டையும், ஆண்டான் அடிமைத்திறத்தையும் விளையும் நெல்லினங்களின் வர்க்கத்தையும், அவற்றின் அருந்தமிழப் பெயர்வரிசையையும், வயற்காரனின் பாராமுக வாழ்வையும், பண்ணையாட்களின் பணிவான சேவையையும் அவனொருவனின இரண்டுதாரத்து மனைவியர்களின் ஏற்ற இறக்கத்தையும்' அவன்கண்ட இன்ப துன்பங்களையும், மனைவியர் இருவரும் கொண்டநாட்டுப் பற்றையும், நாகரிகவாழ்வையும், நானிலங்களின் நல்லியல்புகளையும, வரப்பிரசாத மழையின் வரவையும், அதைக் காராளர் வரவேற்ற சிறப்பும், வயல்களின் வேலைவிபரமும், புதுவெள்ளம் கடலை நோக்கிப்பாய்வதும், மீனினங்கள் வெள்ளத்தைவரவேற்கும் சிறப்பும் இன்னபிறவும்பள்ளுப் பிரபந்தம் அள்ளித்தருகின்றது

## ஈழமண்டல நாடெங்கள் நாடே

ஈழம் என்பது பொன் இலங்கையைப் பொன்கொண்டிழைத்தநாடு என்றே கம்பர் பாடியுள்ளார். இலங்கை முழுவதும்ஈழம் இலங்கைநாடு எமநாடு இதுவே எங்கள் தாய்நாடு. இந்தியநாடெம் அயல்நாடு. இந்து சமுத்திரம் சூழ்நாடு. மலைவளம் உள்ளது எம்நாடு, மணவளம் உள்ளது எம்நாடு. தீரர்கள் வாழ்ந்தது எம்நாடு.

[14ம் பக்கம் பார்க்க]

தமிழ்தந்த தாதாக்கள்

# இவ்வாரம் எப்படி?

## மேஷம்

அந்நியவாசம் அமைதிக்கு உலைவைக்கும். மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டிய வாரம். சுப்பிரமணியர் வழிபாடு பலன் தரும்

## ரிஷபம்

வரவிலும் உயர்வுண்டு சிலருக்கு அதிஷ்டலாபமும் கிடைக்கும் பெரிய இடத்துச் சகவாசம் செல்வாக்கைத் தேடித்தரும் பிள்ளையாரை வழிபட்டு வர நன்று.

## மிதுனம்

குடும்பக் கவலை தலைதூக்கும். அந்நியர்கள் மூலம் தொல்லைகள் தோன்றி மறையும். பணவிவகாரத்தில் அபிப்பிராய பேதங்களும் உருவாகும். மகாவிஷ்ணு வழிபாடு விரும்பத்தக்கது

## கடகம்

வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் பெருகும். ஆவலுடன் எதிர்பார்த்திருந்த விடயமொன்று உங்களுக்குச் சாதகமான முடிவைத்தரும். அம்மன் வழிபாடு நன்று

## சிம்மம்

தொழில் துறையில் நல்ல வருமானம் கிடைக்கும் புதிய உடன்படிக்கையின் மூலம் நல்ல திருப்பம் ஏற்படும். மகிழ்ச்சிகரமான பிரயாணமும் உண்டு. ஈஸ்வர வழிபாட்டால் நன்மையுண்டு.

## கன்னி

இதயபாரம் அதிகரிக்கும். முதியவர் ஒருவரின் உடல்நலம் கவலையைத் தரலாம். வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு. சிலருக்கு எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம் மகா விஷ்ணுவை வழிபட்டு வர நன்று.

## துலாம்

காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்துண்டு. சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகள் ஏற்படும் கொடுக்கல் வாங்கலில் நடுநிலைமை நன்று நவக்கிரக வழிபாடு நன்மைதரும்.

## விருச்சிகம்

மேலதிகாரிகளின் கண்டிப்புகளுக்கு இலக்காகலாம், நிதானம் வேண்டும். நம்பிக்கை மோசடி மூலம் நலிவுகள் தென்படும்? விருந்தினர் வருகை கலகலப்பை ஏற்படுத்தும். அறிவுடன் பொறுமை அவசியம். சுப்பிரமணியரை தோத்திரம் செய்க.

## தனுசு

தெய்வ நம்பிக்கையும் ஆத்மீக விடயங்களில் ஆர்வமும் ஏற்படும். பொதுப்பணி மூலம் பொதுமக்களின் ஆதரவு கிட்டும். கொடுக்கல் வாங்கலில் கவனம் வேண்டும். இவ்வாரம் தக்ஷிணாமூர்த்தி சுவாமியை வழிபட்டு வர நன்று

## மகரம்

உழைப்பினால் உற்சாகம் கிடைக்கும். சுற்றாடலில் மதிப்பு உயரும். உறவினர் தொடர்பு பெருகும். வரவேற்கக்கூடிய வாரம் மகாவிஷ்ணுவை வழிபடவும்.

## கும்பம்

வாழ்க்கையில் அபிவிருத்தி தென்படும் அயலார் மதிப்புக் கிட்டும் அதிக வருவாய்க்கும் இடமுண்டு. மாயவர் சுவாமியை வழிபட்டுவர நன்று

## மீனம்

அற்பவிடயத்திற்குக் கூட பொலலாங்கு கேட்க நேரிடும் தனி வழியில் நாட்டம் செலுத்துவீர்கள். கோபத்தையடக்கவும். சமீபத்திய சம்பவம் வேதனை தரலாம். எதிர்பாராத செலவுண்டு பார்வதி சமேத பரமேஸ்வரப்பெருமானை வழிபட்டுவரவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# சின்னத்தம்பிப் புலவர் என்பதே பேச்சு

(13 ம்பக்கத் தொடர்ச்சி)

வீரர்கள் வாழ்ந்தது எம்நாடு. தியாகம் புரிந்தது எம்நாடு. வீரர்கள் வாழ்ந்தது எம்நாடு. விந்தை புரிந்தது எம்நாடு. என்றெல்லாம் நாமியற்றிப் பாடும்போது காற்றிலே மிதக்குமாப் போல் உணர்ச்சி உண்டாகிறது.

சின்னத்தம்பிப்புலவர் பண்ணைத் தொழிலாளனின் மனைவியர் இருவரின் வாயில் நாட்டுபபற்றை வெளிக்கொண்டு வரும்போது, ஈழமண்டலத்துப் பெண் எங்கள் நாட்டைப் பற்றி உருக்கமாக பாடுகிறாள். அவற்றைக்கேட்குபபோது நாட்டுப்பற்று நம்மை அசைக்கிறது. நாம் அசைந்து ஆடுகிறோம். ஆனந்த ஆசைச்வ நமக்குப் பெரும் பரிசாகவும் அமைகின்றது.

ஈழமண்டலத்தின் இணையில்லா இயற்கை வளத்தைச் சின்னத்தம்பிப் புலவர் வரிசையறிந்து பாடுகின்றார் நீர் வளம், நிலவளம், மலைவளம், வனவளம், கடல்வளம், எல்லாம் பாடுபவர், அப்பால் கல்விவளம், செல்வவளம, கொடை வளம், பக்தி வளம் என்பனவற்றையும் பாடுகின்றார்.

ஈழமண்டலத்துக்கு இயல்பாயமைந்த பக்தி பாரம்பரியம் ஒன்றுண்டு. இராவணனும் மண்டோதரியும் கொண்ட பக்திவளம் திருமுறைகளிலும் போற்றப்பெற்றுள்ளன. ஈழநாட்டவரின் பக்திவெள்ளம் சிங்கள மக்களையும் நன்றாக நனைத்திருந்தது.

சின்னத்தம்பிப் புலவர் யாழ்ப்பாணத் தமிழரசர்களின் வீரப்பிரதாபங்களையும் பண்பாட்டுத் திறமையையும் பாரம்பரியமாகக் கேட்டவகையில் விபரமாகப் பாடுவர். இயல்புடன் செங்கோல் நடத்திய எம்மரசர்களின் இனிய சுபாவங்களை அருமையாகப் பாடுவர்.

பாவினங்களறிந்த சின்னத்தம்பிப் புலவர் சிந்து, விருத்தம், வெண்பா, கலிப்பா, தரு முதலிய வகைகளிற் பாடும்போது, எதுகைமோனை நயங்கள் ஏவல் செய்கின்றன, தாமே வந்தமைகின்றன, தமிழ் சுவைக்கிறது.

சுழிபுரம் என்பது சோழியபுரம் என்பதன் திரிபு. சுழிபுரத்தில் பறாளை பழையவூர். அங்கே கோயில் கொண்டருளியுள்ள அற்புத மூர்த்தியாய விநாயகப் பெருமானின் திருக்கோயிலைப் பறங்கியர் இடிக்க வந்தபோது, பெரிய காகம் பறந்து வந்து தலைவனின் மூக்கைப் பலமாகக் கொத்தியது. இடிப்பு வேலை தடைப்பட்டது.

சின்னத்தம்பிப் புலவரின் பள்ளுப்பிரபந்தம் அவர் காலத்திலேயே பெரும் சிறப்புப் பெற்றுப் பல ஏடுகளிற் பரந்தது. வடகோவைச் சபாபதி நாவலர் அவர்களின் சென்னை சித்தாந்த வித்தியானுபாலன யந்திரசாலையில் 1889ஆம் ஆண்டில் முதலில் அச்சேறி வெளிவந்தது. நாற்பத்து மூன்று ஆண்டுகளின் பின சபாபதி நாவலரவர்களின் உறவினரான சிவகுருநாதன் என்பார் மலேசியாவில வாழ்ந்த சுழிபுரவாசிகளின் பொருளுதவி கொண்டு 1932ம் ஆணடில் சென்னைத் திரு. ஜம்புலிங்கம் அவர்களைக் கொணடு பதிப்பித்தார்கள்.

இந்தப் பதிப்பு பண்டிதமணி அவர்களுக்குப் பெருவிருந்தாயிற்று தமது சைவாசிரிய கலாசாலை மாணாக்கர்களுக்கும், காவிய வகுப்பு மாணாக்கர்களுக்கும், கலாநிலைய மேடைகளுக்கும் அவர் விருந்தளித்தபோது பயன் தந்தது அது. பாவின் சுவையில் பண்டிதர் அவர்கள் பலரை ஈடுபடுத்தியபோது பதிப்பில் வந்தநூல்கள் பற்றாக் குறைகணடபோது, சுழிபுரவாசிகள் 1956ஆம் ஆண்டில் மூன்றாம் பதிப்பைத் தமிழ்நாட்டுப் புலவர்களின் குறிப்புரையோடு வெளியிட்டார்கள்.

''கற்ற நூலுணர் பண்டிதன் மார்பஞ்ச
காவியஞ்சட் கலைக்கடல் தோய்ந்தும்
எற்றைநாளுங்கல் வித்திறம் பார்த்திடும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே''

## வைத்தீஸ்வரா

(12ம் பக்கத் தொடர்ச்சி)

பரிசளிப்பு விழா ஒன்றினை நடத்துவதற்கும் நிதி திரட்டியுள்ளார்கள் பாடசாலை மாணவர்களை உற்சாகப்படுத்துவதற்காக வசதியற்ற திறமைமிக்க மாணவர்களின் வசதிக் கட்டணத்தைத் தாமே பொறுப்பேற்று நடத்தி வருகின்றார்கள் கவர்ச்சியான புலமைப் பரிசில் திட்டமொன்றினையும் இம்முறை அறிமுகம் செய்யவுள்ளார்கள்.

கல்லூரிக்கென புதிய கட்டடத் தொகுதி ஒன்றினை அமைப்பது பழைய மாணவர் சங்கத்தில் நீண்டநாள் அபிலாசையாகும், நகரின் மத்தியில் இடநெருக்கடிக்குள் அமைக்கப்பட்டுள்ள இக்கல்லூரியில் காணப்படும் முக்கிய இப்பிரச்சனையைத் தீர்த்து வைக்க ஆவலுடன் உழைப்பபதென இன்று கூடும் பழைய மாணவர்கள் திடசங்கற்பம் பூணவுள்ளார்கள்

இக்கல்லூரிக்கு மற்றுமொரு பிரச்சனையாக விருப்பது விளையாட்டு மைதானம் இல்லாக் குறையாகும் அண்மையிலுள்ள காணிகளைச் சுவீகரித்து சிறியதானாலும் தரமான விளையாட்டு மைதானத்தை அமைக்க பழைய மாணவர்கள் முன்னின்றுழைத்துவருகின்றனர்.

கல்லூரியில் கற்பித்தமுன்னைநாள் ஆசிரியர்களில் உயிருடனிருக்கும் சகலரையும் பாராட்டிக்கௌரவித்து விழா எடுத்ததன்மூலம் இந்த பழைய மாணவர்கள் இலங்கையின் கல்விச் சரித்திரத்தில் புதியதொரு அத்தியாயத்தைப் பெற்றுவிட்டனர்.

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல் அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

எனக்கூறினார் பாரதியார். அவரது வாக்குக்கிணைய ஏழைப் பிள்ளைகளிலும் வசதிகுறைந்தோரதும நலன்களைக் காக்கும் நிறுவனமாக இராமகிருஷ்ண மிஷன் சோடபாடு கட்டணங்க நடாத்தப்படும் இக்கல்லூரி எதிர்காலத்தில் தனது சேவையைத் திறம்பட நடத்துவதில தமது வளம். உழைப்பு, ஒத்தாசை அனைத்தையும் தயங்காது வழங்க பழைய மாணவர்கள் முன்னிற்கின்றார்கள். அவர்களது அயரா முயற்சியால் முன்னொருகாலத்தில் தான் அடைந்திருந்த பொற்காலத்தை நோக்கி மீண்டும் வீறுநடைபோடுகின்றது வித்தியாலயம். எவ்வாறு கல்விக்கூடமாக மட்டுமன்றி கலாச்சார பரிவர்த்தனை நிலையமாகவும, சமய மத்திய நிலையமாகவும், முன்னர் ஒருபோது திகழ்ந்ததோ அதனைவிட உயர்நத நிலைக்கு வெகுவிரைவில் வந்துவிடும்என வாழ்த்துவோமாக.

[இன்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நடைபெறுகிறது]

## பாரினிலே ஒரு பாலித்தீவு

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

கமாயிருந்தும் நாம் அதனை வாங்கினேம். (இப்பொழுது இது இலங்கையில எங்கள் இல்லத்தை அலங்கரிக்கிறது) நாங்கள் வாங்கிய பொழுது இதை சிருஷ்டித்த கலைஞருக்கு ஒரே ஆனந்தம். ஒன்றரைவருடகாலமாக இது விலைக்கிருந்தும்எங்களுக்குமுன் ஒருவருக்கும் இதன் பெறுமதி தெரியவில்லையென்றும் தன் மனதில் உள்ளதை மரத்தில் சிருஷ்டித்ததைரசிக்க உலகில் இருவராதுவ இருப்பதுகண்டு தனக்கு உற்சாகம் கொடுக்கிறதோடு மேலும் இதுபோன்றவை சிருஷ்டிக்க தூண்டிவிடுகிறதென்றார். பாலியில் கடமையாற்றிய அமெரிக்க பொறியியலாளர் எனக்கு ஒரு சம்பவத்தை கூறினார். சிலவயல்களுக்கு தண்ணீர் பாய்ச்ச ஒரு புது பெரிய வாய்க்கால் தனது மேல் பார்வையில் அரசாங்கத்திற்கு வெட்டி, கட்டிக் கொடுக்கும் பொழுது பாலிமக்கள் தன் இல்லத்திற்கு வந்துவாய்க்காலுக்கு தண்ணீர் திறந்துவிட ஒருநாள் அவகாசம் தரும்படி கோரினர் என்றும் அதற்குதான் சம்மதித்ததும் அக்கிராமமக்கள் ஒன்றுகூடி இரவிரவாக வாய்க்காலின் நீர்மட்டத்திற்கு மேலேயிருக்கும் சுவர்களில் பல இதிகாச சம்பவங்களை பொறித்து வைத்தார்களென்றும் சொன்னார் பாலி மக்களின் கலை ஆர்வத்திற்கு உதாரணமாக இந்த சம்பவதனை பொறியிலாளர் கூறினார். பாலியில் கலைஞர்கள் கலையில் ஓய்வு நேரத்தில் மட்டும் ஈடுபடுவார்கள். அவர்கள் எல்லோருக்கும் நிரந்தரமான தொழிலுண்டு இது பாலி மக்களின் வாழ்க்கையில் ஒரு விசேஷ அம்சம்

(அடுத்தவாரம் முற்றும்)

## ○ வல்லவர்கள்

உள்ளத்தில் வண்ணமிடும்
எண்ணக் கோலங்களை
உரைக்கமுடியாதவர்கள்
ஊமைகள்
உரைக்கமுடிந்தும்
உரையாதார் வாயிருந்தும்
ஊமைகளே.
சொல்லளவில் ஒத்திருக்கும்
இவ்விருவர் தம்மில்
வல்லவர்கள் யார் என்றால்?
வாயில்லா ஊமைகளே.

'லக்ஷ்மி'

## ஒரே உலக

[3ம் பக்கத் தொடர்ச்சி]

வித்தாகும்' என்கிறார். இதன் கருத்து உலகளாவிய முழுமை பெறும் தத்துவம் மட்டுமல்ல மேற்கத்திய கல்வித் தத்துவத்திற்கு மாற்று வழி இதுவேயாகும் என்பதுமாகும்.

## டானியலின்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

ரமாகவும் விளங்குவது பண்டாரியினுடைய பாத்திரப் படைப்பே!

சோமசுந்தரத்தார், இராசரத்தினத்தார், சீதேவி அம்மாள், சிவக்கொழுந்தி, காசிப்பிள்ளை முதலி, மணியகாரன் பாத்திரங்களும் குறிப்பிடத்தக்கனவாக அமைகின்றன. ஏனையவை நாவலின் தேவை கருதி வந்துபோவனதாம் டானியலின் படைப்புகளில் மிகப் பெருவாரியான பாத்திரங்கள் இவ்விதம் வந்து போவதை அவரது ஏனைய நாவல்களிலும் அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணத்து நாடகவரலாற்றின் முற்கூறு தென் இந்தியாவில் இருந்து இங்கு தருவிக்கப்பட்ட நாடகங்களைக் கொட்டகைகளில் நிகழ்த்தியமைதாம். இது வரலாற்றுச் சித்தரிப்பு. அத்தகைய கொட்டகை முதலாளிமாரின் 'தர்பார்' கொட்டங்களையும் நாவலினூடே ஆங்காங்கு அதற்கே உரிய சாங்கோபாங்கத்துடன் விபரிக்க டானியல் ஒருவரால் தான் முடியும் என்பதற்கு இவருடைய ''கோவிந்தன்'' நாவலும் சான்றாகும்.

நாவல் நிகழ்கின்ற காலகட்டத்து யாழ்ப்பாண நகரப்புறப் பேச்சுவழக்கு மொழி நடையை டானியல் கையாண்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பல சிறப்பம்சங்களை ''மையக்குறி'' குறுநாவல் கொண்டிருந்தபோதும் நிறைவற்ற படைப்பாக என்னுடைய கணிப்பிற்குத்தென்படுகிறது. காரணம் மிகப் பெரிய இலக்களவைக் கொண்ட கருவை உள்ளடக்கி இருப்பதனால் என்றே உணர முடிகிறது.

★ இன்று மறைமலை அடிகள் தினம்

## தனித்தமிழ் வளர்த்த சான்றோன்

மறைமலை என்ற மாண்புசேர் அறிஞன்
துறைதொறும் தமிழினைத்துலங்கிடச் செய்தனன்
வடமொழி இன்றியும் வண்டமிழ்ப்பாவை
திடமுற நிற்பாள் என்னுமோர் சிறப்பை
நடைமுறைப்படுத்தினன் நாடகம் நெடுங்கதை
கட்டுரை விமர்சனம் என்பன யாவும்
தனித்தமிழ் மொழியில் தரமுறச் செய்தனன்
நாடியே எடுத்த நற்றமிழ்ச் சொற்களை
மேடையில் வீட்டில் வீதியில் எங்கணும்
இருசெவிக்கமுதாய் வழங்கினன் இனியன்
ஆங்கிலம் தீந்தமிழ் வடமொழி மூன்றும்
ஐயந்திரிபறக்கற்றனன் ஆதலின்
காலம் அறிந்தும் தேவை அறிந்தும்
ஞாலம் வியப்ப நற்பணி புரிந்தனன்
அன்னவன் தோற்றிய தனித்தமிழ்க்கொள்கையை
அடுத்துப் பலரும் போற்றுதல் செய்தனர்
இலக்கியம் இலக்கணம் சைவசித்தாந்தம்
வரலாறுய பல்துறை முயன்றும்
தமிழ் காத்திட்டனன் வாழ் கவன்பேரே.

ம. பார்வதிநாதசிவம்

## இலக்கியமும் விமர்சனமும்

எஸ். அகஸ்தியர்

வாழ்க்கையை ஆய்வு செய்து விமர்சிப்பதே இலக்கியம் கல்வி இலக்கியம் சமுதாயத்தில் இரு கோணங்களாக முரண்பட்டு வெளிப்படுவதால் ஆய்வுககு விமர்சனத்திற்கு உள்ளாவது இயல்பே.

மனிதகுலம் தோன்றியதா அன்றேல் தோற்றுவிக்கப்பட்டதா என்ற சர்ச்சையின் போது அதனையொட்டிச் சமுதாயத்தில் நேர் எதிரான முரண்பாடுடைய கோட்பாடுகள் தத்துவங்கள் சித்தாந்தங்கள் வாழ்க்கையை விமர்சிக்க முனைகின்றன. இதன்பால் இருவேறு உலகக் கண்ணோட்டம் சமுதாயத்தில் மட்டுமன்றி இலக்கியங்களிலும் திகழ்வதைக்காணலாம்.

கற்பனையால் உருவகித்து அதனை முதலாகக்கொண்டு சமுதாயத்தை வாழ்க்கையைப் பார்க்கும் கண்ணோட்டம் ஒன்று. அடுத்து, பொருளை முதலாகக்கொண்டு சமுதாயத்தை - வாழ்க்கையை நோக்கும்கண்ணோட்டம் மற்றொன்று

எந்தவோர் இலக்கியவாதியோ விமர்சகனோ இவ்விரண்டு சமுதாயக் கண்ணோட்டங்களில் ஒன்றையேனும் தழுவியே இலக்கியங்கள் படைக்கின்றான். தாம் அறியாதவற்றையே கற்பனையால் உருவகித்துச் சித்தரித்துச் சமுதாயத்தைப்பார்க்கும் இலக்கியவாதிகளை 'கற்பனுமாயாவாதிகள்- ஆன்மீக வாதிகள்- தனி மனிதவாதிகள்' என்றும், சரித்திர விஞ்ஞான ரீதியாகச் சமுதாயத்தைப் பார்க்கும் இலக்கியவாதிகளை, 'பொருள் முதல்வாதிகள் - யதார்த்த வாதிகள் மெய்யியல் வாதிகள்' என்றும் வகுத்துள்ளார்கள். மனித குலம் தோன்றிய காலந்தொட்டு இவ்விரண்டு முரண்பட்ட சமுதாயப் பார்வைகளே இலக்கியங்களிலும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

'கலை இலக்கியம் ஓர் ஆயுதம். இன்றைய மாறுபட்ட இருவேறு சமுதாய அமைப்புகளையும், இரண்டு சித்தாந்தங்களையும் கொண்ட நவீனஉலகில், கலை இலக்கியம் என்பது நிச்சயமாக ஓர் ஆயுதமே. இத்துறையில் கலைஇலக்கியத்தின் பாத்திரம் மற்றும் பணிகள் பற்றிய மக்களின் கருத்துக்கள், படைப்பாக்கம், கலாசாரத்தைப் பரப்புதல் சம்பந்தமான அடிப்படைப் பிரச்னைகள் பற்றிய அவர்களது பார்வைகள் - இவை குறித்து விவாதங்களும் கருத்துமோதல்களும் விமர்சனங்களும் மாறுபட்ட கண்ணோட்டங்களிடையே போராட்டமும் நடைபெறுவது இயல்பே. ஆக்கபூர்வமான இலக்கியவாதியின் ஒரு சார்புடமை தானாகவே தோன்றுவதில்லை. வாழ்க்கைக் கொப்பரையிலே அது உருவாக்கப்படுகிறது, பலகாலமாகச் சேகரிக்கப்பட்ட அனுபவத்தின் விளக்கமும் தன்னிச்சையான தேர்வும் கலந்ததன் விளைவே அது. ஓர் ஆக்கபூர்வமான இலக்கியவாதியின் ஒரு சார்புடமை, அவனுடைய அகச்சுதந்திரத்திற்கு ஒரு அளவுகோல் என்று கூறுவது பொருத்தமானதாகஇருக்கும். ஜி. அகனேவ் கூறுகின்ற கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

உயிர்அணுக்களின் சேர்க்கை வளர்ச்சி ஆகியவற்றாலுண்டான தோற்றங்களையும், மாற்றங்களையும், அவ்வளர்ச்சியின் பரிணும தோற்றத்திலான வடிவங்களையும் விஞ்ஞானபூர்வமாகவும் சரித்திரவாயிலாகவும் ஆய்வுசெய்த விஞ்ஞானமேதை டார்வின் குரங்கிலிருந்தே மனிததோற்றம் ஆரம்பமாயிற்று என்றும் பிரகடனப்படுத்திய போது, கற்பனுவாத ஆன்மீகவாதிகளும், வேதாந்திகளும் தனியுடமையாதிக்கவாதிகளும் வெகுண்டெழுந்து டார்வின் தத்துவத்திற்கெதிராகப் போர்க்கொடி உயர்த்தினார்கள் என்பதே உலக வரலாறு.

(16ம் பக்கம் பார்க்க)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
இருவர் உள்ளம்

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர் - விஜயா
முகூர்த்த நாள்
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
HAPPY HOOKER GOES HOLLYWOOD
(Strictly for Adults)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45,7-00
Kabir Bedii in
GIRL FROM INDIA
action-adults-color
new print-with
four Hindi hit songs

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
13 முதல் 15 வரை
சிவாஜி-மஞ்சுளா
எங்க தங்க ராஜா

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ஊர்வசி சாரதாவின்
நடிப்பில்
துலாபாரம்
(மலையாளம் புதிய பிரதி)
தன் குடும்பத்தில் ஏற்பட்ட சோகத்தால் குழந்தைகளுக்கு நஞ்சூட்டி தானும் நஞ்சருந்தும் பரிதாபமான முடிவு ஏன்?. .எதற்கு?

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
பொம்மலாட்டம்
Coming soon
BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30,2-30, 6-30,
ஜெமினி நடித்த
பாலசந்தரின்
நான் அவனில்லை

**மூகாம்பிகா வீடியோ**

தரமான பிரதிகளை வெளியிடும் ஸ்தாபனம் என்று வீடியோ ரசிகர்களின் அமோக பாராட்டினை பெற்ற எமது ஸ்தாபனத்தில் இன்றே நீங்களும் அங்கத்தவராகி, பல புதிய திரைப்படங்களை தரமான பிரதியில் கண்டு களியுங்கள்.
அங்கத்தவர்களுக்கு பல விசேட சலுகைகள் காத்திருக்கிறது.

மூகாம்பிகா வீடியோ
117, கன்னாதிட்டி வீதி
(காளியம்பாள் தேவஸ்தானம் அருகே)
யாழ்ப்பாணம்.
891

**வீடியோ வியூ**



வீடியோ படப் பிரியர்களுக்கு
V.G.P, PYRAMIDS
DELUX, KAVICO
ESQUIRE, THOMSUN
வெளியிடும் முதல்தரமான கலர் வீடியோ படங்களை வழங்குகிறோம்
VIDEO VIEW
38, VEMBADI ROAD, JAFFNA
898

**றீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 6-00
கமலஹாசன், ஆலம்,
வை. விஜயா
K. பாலசந்தரின்
மன்மதலீலை
[புத்தம் புதிய வண்ணப் பிரதி]

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
13 முதல் 22 வரை
Armand Assante
Barbara Carrera
யாழ். சினிமா இரசிகப் பெருமக்கள் இதுவரையும் கண்டுகளித்திராத அற்புதத் திரைவிருந்து! நிமிடத்துக்கு நிமிடம் திகிலும் மர்மமும் நிறைந்த வியப்பான திரைவிருந்து! எதிர்பாராத தாக்கங்களும்-இன்பக் கிளர்ச்சியும் நிறைந்த ஆங்கிலப்படைப்பான
'I The Jury'
பார்க்கத் தவறாதீர்கள்.
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்குமட்டும்)

அலுமினிய வார்ப்புத்தொழிலில்
அனுபவம் உள்ளவர்கள்
உடன் தேவை
★ அச்சு போடுபவர்கள் (Moulders)
★ மினுக்குபவர்கள் (Polishers)
நேரில் விண்ணப்பிக்கவும்.
JOSON INDUSTRIES
குமாரசுவாமி புலவர் வீதி, சுண்ணாகம்.
850

குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)
FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.
INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL. CHEAP RATES, CONTACT US RIGHT NOW.
குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை.
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.
உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்
CTS
Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR. BUS STAND CENTRE ROAD, MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C, T, S,)

# ஜம்மு—காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா கைது?

## தாயார் தகவல்

ஸ்ரீநகர், ஜூலை 14

ஜம்முகாஷ்மீர் முதலமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட திரு. பரூக் அப்துல்லா பாதுகாப்புப் படைகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பரூக் அப்துல்லாவின் தாயாரே இத்தகவலை வெளியிட்டார். ஆயினும் காஷ்மீர் மாநில அரசோ அல்லது பாதுகாப்புப்படைவட்டாரங்களோ இது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

திரு. பரூக் அப்துல்லா கடந்த வியாழக்கிழமை ஸ்ரீநகரிலுள்ள தமது இல்லத்திலிருந்து தனது கட்சிக் காரியாலயத்துக்குப் புறப்பட்டதாகவும், அன்றிலிருந்து அவர் வீடு திரும்பவில்லையென்றும் தெரிவித்த அவரது தாயார், ஸ்ரீநகர் எல்லை புறத்தில் ஊரடங்குச் சட்டத்தை மீறியபோது பாதுகாப்புப் படைகள் அவரைக் கைதுசெய்தன என்று தெரிவித்தார். ஆனால் இது பற்றி எதுவும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்துவருகின்றது. பரூக் அப்துல்லாவுக்கு ஆதரவான ஐந்து எதிர்க்கட்சித்தலைவர்கள் இம் மாநிலத்திலிருந்து வெளியேறும்வரை கடுமையான தடைச்சட்டங்கள் இங்கு அமுலில் இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

ஜம்முகாஷ்மீர் புதிய முதலமைச்சர் குலாம் மொகமட்ஷா எரிகிற வீட்டில் அகப்பட்டது லாபம் என்ற விதத்தில் எதிர்க்கட்சிகள் நடந்து கொள்ளக்கூடாது என்று கூறியுள்ளார். (கி)

## ஒய்வுபெறும் அதிபருக்கு பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, தம்பாட்டி அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. சி. சிற்றம்பலத்தின் சேவைநலம் பாராட்டுவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திரு. ம. அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. பொன். கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். கல்வி அதிகாரிகள் திரு. வ. தங்கராசா வி. ச. ஈஸ்வரபாதம், ஏ. வி. தங்கராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்கின்றனர்.

## ஜூலைக் கலவரம்
# சிங்கள மக்களுக்கு உலகில் அபகீர்த்தியை ஏற்படுத்தியது
### அமைச்சர் 'லலித்' கவலை

(கொழும்பு)

''சிங்கள மக்களுக்கு உலகில் அபகீர்த்தியை ஏற்படுத்திய கடந்த வருட ஜூலைக் கவவரம் போன்று இன்னொரு கலவரம் ஏற்படுவதனை சிங்கள மக்கள் அனுமதிக்கக் கூடாது'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி குறிப்பிட்டுள்ளார்.

பசறையில் நடைபெற்ற மகாபொல சந்தையின் இறுதி நாள் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''கடந்த வருடம் ஜூலையில் இடம் பெற்ற கலவரத்தினால் சிங்கள மக்கள் தீயவர்கள் என்ற கருத்து உலக நாடுகள் முழுவதிலும் பரவியிருந்தது. இது சிங்கள மக்களுக்கு தீராத அபகீர்த்தியைஏற்படுத்தியிருந்தது ஆயினும் ஜூலைக் கலவரங்களின் பின்னர்பெரும்பாலான சிங்களவர்கள் தமது அயலிலுள்ள சிறுபான்மை மக்களுடன் அன்பாகவும், சகோதரத்துவத்தன்மையுடன் நடந்து வருகின்றார்கள் இதன் காரணமாக சிங்களவர்கள் தீயவர்கள் என்ற கருத்து தற்போது உலக நாடுகள் பலவற்றிலும் நீங்கியுள்ளது.

கடந்த ஜூலை க்கலவரத்தில் ஒரு சதவிதக்துக்கும் குறைவான சிங்களவர்களே பங்குபற்றியிருந்தனர். இந்த ஒருசத வீத மக்களின் செயல்கள் சகல சிங்கள மக்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியிருந்தது. இத்தகைய கலவரம் இனிமேல் ஏற்படாதவாறு சிங்களமக்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்''.

''இலங்கை அரசாங்கம் பயங்கரவாதிகளுக்கு எதிராகவே செயல்படுகிறது. அரசின் இந்த நடவடிக்கை இனவாதம் அல்ல'' என்றும் அவர் தெரிவித்தார். [சூ]

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி இன்று காலை நடைபெறவிருக்கிறது.

## இளைஞரின்.....

(1ம்பக்கத் தொடர்ச்சி]

என்று இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

நேற்று முன்தினம் இரவு இச்சடலம் யாழ். ஆஸ்பத்திரி பிரேதஅறைக்கு கொண்டுவரப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (மா)

## காங்கேசன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 4 மணியளவில் குண்டு வீசப்பட்டதாம். அதிர்ச்சியுற்ற காவலர்கள் ஓடிப்போய் தொழிற்சாலையிலிருந்தவர்களிடம் தெரிவித்ததையடுத்து பாதுகாவலர்களின் தலைவர் திரு. ஆட்டிகலை ஸ்தலத்துக்கு விரைந்து அங்கிருந்த இரு காவலர்களையும் தம்முடன் அழைத்துச்சென்றார்.

கடந்த வருடம் ஏறக்குறைய இதே காலகட்டத்தில் இந்த காவலர் விடுதி எரிக்கப்பட்டது. பின்னர் அது புதுப்பித்துக்கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிக்கும் பகுதிக்கு அனுப்பப்படுகின்றன.

கடந்த சிலவாரமாக இப்பிரிவில்ஊழியர்கள் சனிஞாயிறு தினங்களிலும் பணிபுரிந்துவருகின்றனர். கடந்த மாதம் 25ம் திகதிவரை யாழ். அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டு பாஸ்போட்எழுதும் பகுதிக்கு அனுப்பப்பட்டுவிட்டன. தற்போது இப்பிரிவில் யாழ். அலுவலக விண்ணப்பங்களுக்குப் பதிலாகக் காலி, கண்டி, அலுவலக விண்ணப்பங்களே பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரிவில் பரிசீலிக்கப்படும் விண்ணப்பங்கள் பாஸ்போட் எழுதும் பகுதிக்கு அனுப்பப்பட்டால் மூன்று வாரங்களில் பாஸ்போட்எழுதி அனுப்பப்படுமென்றும் அந்த அதிகாரி கூறினார்.

## ரயில் விபத்து: 25 பேர் பலி

பெல்கிரேட், ஜூலை 14

யூகோஸ்லாவியாவில் இடம் பெற்ற ரயில் விபத்தொன்றில் 25 பேர் பலியாகியுள்ளனர். 3 பேர் காயமடைந்துள்ளனர்.

பாரிய கட்டிடமொன்றுடன் ரயில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

## பாராட்டு விழா ஆலோசனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

முப்பத்திரண்டு ஆண்டுகளாக ஆசிரிய சேவையாற்றிய சைவமணி வித்துவான் மு. சபாரத்தினம் சேவையிலிருந் ஒய்வு பெறவிருப்பதால், அவரின் சேவையைப் பாராட்டும் விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று காலை காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## ஆரவாரமற்ற

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாணவர்கள் இராமநாதன் மண்டபத்திலிருந்து ஊர்வலமாக கைலாசபதி கலைஅரங்குக்கு வந்துசேர்ந்தார்கள் ஆலவட்டம் தாங்கிவர யாழ். பல்கலைக்கழக வேந்தர் திரு. வி. நடராசா, உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பதிவாளர் திரு. மு. சிவராசா, பீடாதிபதிகள், பேராசிரியர்கள் கலை அரங்கை வந்து சேர்ந்ததும் மங்கலவார்த்தியம் முழங்கியது.

மண்டபத்தின் முன்வரிசையில் பல்கலைக்கழகஅவை உறுப்பினர்களும் அடுத்து யாழ் மாவட்டபதில் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கமும் இருந்தனர்.

அடுத்தவரிசையில் பட்டம் பெறும் பட்டதாரிகளின் தாய் தந்தை சகோதரர்கள் தொடர்ந்து பின்வரிசையில்பட்டம் பெறுவோர்கள் இருந்தனர்.

கடந்த காலபட்டமளிப்பு விழாக்களைப் போல் இந்தத் தடவை சிறப்புவிருந்தினராக எவரும் அழைக்கப்படவில்லை. வேந்தர், உபவேந்தர், பீடாதிபதிகள் சிறப்பு உரைகளும் இடம்பெறவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

கலாநிதிப்பட்டம் இருவருக்கும், முதுமானி 8 பேருக்கும், மருத்துவப் பட்டங்கள் 52 பேருக்கும் ம்முறை வழங்ப்பட்டன. எல்லாமாக சகல பீடங்களையும் சேர்ந்த 531 பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. (மா)

## இலக்கியமும் விமர்சனமும்

(15ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு டார்வினால் கண்டு பிடிக்கப்பட்ட இந்த மனித குலம் 'எவ்வாறு வாழவேண்டும்' என்று சரித்திரவாயிலாக விஞ்ஞான ரீதியாகவும், சமுதாயத்தை ஆய்ந்து சரியாகவும் முறையாகவும் அறுதியாகவும் முதன்முதல் உலகில் பிரகடனப்படுத்திய மாபெரும் விமர்சகர்கள் கார்ல் மார்க்ஸ் பிடரிக் எங்கல்ஸ் இருவருமேயாவர்.

இருபதாம நூற்றாண்டு வரையுள்ள மனிதகுல வரலாற்றையே பூர்வீக பொதுவுடமை சமுதாயம், அடிமைச் சமுதாயம், பிரவுத்துவ சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம், சோஷலிஸ சமுதாயம், பொதுவுடைமைச் சமுதாயம்' என ஆறுகட்டங்களாக வகுத்து அந்தந்தச்சமுதாயங்கள் ஒன்றுக்கொன்று கொண்டுள்ள முரண்பாடு காரணமாக 'வர்க்கப்போராட்டங்கள்' மூலம் எப்படியெல்லாம் ஒவ்வொரு சமுதாயமாக மாறி உருவெடுத்தனவென்றும், ஈற்றில் சமதர்ம நீதியுள்ள சமுதாயமான 'பொதுவுடைமைச் சமுதாயம்' தோன்றி அது எப்படி மாறு நிலைபெறும் என்பதனையும் இயக்க இயல் தத்துவார்த்தமாகஆய்ந்துஎடுத்துச்சொன்ன விமர்சகர்களும் மார்க்ஸ்-எங்கல்ஸ் இருவருமேயாவர்.

இவ்வாறான சரித்திரத்தைப் புறக்கணித்த விஞ்ஞானமோ விஞ்ஞானத்தை புறக்கணித்த சரித்திரமோ உண்மையான வரலாறாகாது என்னும் உண்மையினை நோக்கின், இலக்கியங்களும் இலக்கியங்கள் சார்ந்த விமர்சனங்களும் எப்போதும் ஒவ்வொரு சமுதாயத்துக்கான பிரசாரக் கருவிகளாகவும் உந்து சக்திகளாகவுமே விளங்கிவருகின்றன என்பதை பார்க்கலாம். இதன் பின்னணியாக இலக்கியங்களை விமர்சனங்களை நோக்கல் வேண்டும்.

இதன்படி வரலாற்று ரீதியாக நோக்கின் ஈழத்து இலக்கியங்களையும் இலக்கிய விமர்சனங்களையும் மூன்று கட்டங்களாக வகுக்கலாம்.

பல்லாண்டு காலமாக இலங்கையை ஆதிக்கம்புரிந்த விதேசியத் தன்னுதிக்கவாதிகளும் தனியுடைமை வாதிகளும் சுகபோகிகளும், ஆன்மீகபீடவாதிகளும் ஈழத்து இலக்கியங்களிலும் பெரும்ஆதிக்கம்செலுத்தி வந்தனர். பெரும்பாலும் இத்தகைய சுகபோக வர்க்கத்தின் சார்பாக வெளிவந்துகொண்டிருந்த ஈழத்து இலக்கியங்கள் 1956ல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தேசிய முதலாளித்துவ ஆட்சியின் பின்பே சிற் சில மாற்றங் கொண்டு ஒரு தேசியத்தன்மை பெறலாயின. இக்காலகட்டத்தின்பின் வெளிவந்த இலக்கியங்களில் சாதாரண மக்களும் ஏழை மக்களும் கதைமாந்தர்களாக இடம் பெறலாயினர். அந்தக் காலகட்டத்தில்தான் ஈழத்து இக்கிய உலகில் ஒரு மலர்ச்சி தோன்றியது. அக்காலகட்டத்தின் வெளிவந்த இலக்கியங்களின் எண்ணிக்கையைவிட, அவ் விலக்கியங்களை விமர்சிக்கும் போக்கே அதிகரித்திருந்தது, அதிலும் ஆக்கவிமர்சனங்களைவிட அழிவுவிமர்சனங்களும் கண்டனவிமர்சனங்களுமே அதிகரித்தன. 'இழிசினர் இலக்கியம்' என்றுகூட அத் தேசிய முற்போக்கு இலக்கியக்கயம் இழிவாக விமர்சிக்கப்பட்டது.

மூன்றாவது கட்டம் 1977ம் ஆண்டுடன் ஆரம்பிக்கின்றது இக்காலகட்டத்தில் தான் முன்னர் எப்போதும் இல்லாதவாறு இலக்கியக்களம் வணிகமயமாகி வெளிநாட்டு நச்சு ஆபாச இலக்கியங்களால் ஈழத்து இலக்கிய உலகம் ஆக்கிரமிக்கப்படலாயிற்று. இக்காலகட்டத்தின் பின்னுள்ள இலக்கியக்களம் குறிப்பாகத் தமிழ் இலக்கியக்களம் இன்றுவரை தேங்கியே கிடக்கின்றது இருந்தும், தற்காலம் வெளிவரும் படைப்புகள் பெரும்பாலும் சமூகநிலைப்பாட்டு இலக்கியங்களாக விளங்குகின்றனவே தவிர, சமுதாயக் கண்ணோட்டமுள்ள யதார்த்த இலக்கியங்களாகத் தோன்றவில்லை.

நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியன் போன்றவனே இலக்கியவாதி. நோயாளியின் நோயை இன்னதென்று கண்டுபிடிப்பதும், அதனைச் சுகப்படுத்துவதும், அந்நோய் மறுபடி அணுகாவண்ணம் தடுப்பவனுமே-மார்க்கம் கூறுபவனுமே ஓர் உண்மையான வைத்தியனாவான். அதுபோன்றே எழுத்தாளனும் சமுதாயத்தில் புரையோடிய சீர்கேடுகளைக் கண்டுபிடித்து அவற்றை நிவர்த்திசெய்வதுடன் அச்சீர்கேடுகள் அணுகாவண்ணம் மார்க்கங் காட்ட வேண்டும். இத்தகைய எழுத்தாளனே சமுதாயத்தைப்பற்றிய சரியான கண்ணோட்டமில்லாத இலக்கியவாதிகளே இதற்குக் காரணம். இதன் உண்மையான அர்த்தம், இலக்கியங்களும் அவை சார்ந்த விமர்சனங்களும் வர்க்கம் சார்ந்து கையாளப்படுவதேயாம்.

## மரண அறிவித்தல்

### எஸ். கணேசரத்தினம்

(ஓய்வுபெற்ற பெருந்தெருத் திணைக்கள யாழ். மாவட்ட பிரதான பொறியியலாளர்)

தற்போது நைஜீரியாவில் பொறியியலாளராகக் கடமையாற்றிய சுண்டுக்குளியைச் சேர்ந்த கணேசரத்தினம் நைஜீரியாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற M. S. சின்னத்துரை, திருமதி சின்னத்துரையின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற F. K. பாலரட்ணராஜா, திருமதி பாலரட்ணராஜா ஆகியோரின் மருமகனும் சந்திரமதி (சாந்தி)யின் அன்புக் கணவரும் ரோஷன், திருமகி யசோதரா தயாபரன், அனுஷியா துஷியந்தன், ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி யோகேஸ்வரி தர்மராஜாவின் சகோதரனும், M. தயாபரனின் [ஜமேக்கா] மாமனாரும், Dr. T. யோகேந்திரராஜாவின் தாய்மாமனும், தர்மராஜா, யோகேந்திரா திருமதி இரட்ணலீலா திசைநாயகம், திருமதி தமயந்தி நடராஜா, கணேந்திரா, பாலேந்திரா, இராஜேந்திரா, நரேஷ்குமார் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல: 61, நச்சேரி நல்லூர் றோட் சுண்டுக்குளியில் 16-7-84 திங்கட்கிழமை மாலை 4மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

904

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.